பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-125

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

மலர் : 18 Vol : 18	இதழ் : 07 Issue : 07	www.ncbhpublisher.in	அக்டோபர் 2025 October 2025	விலை Price	₹ 45/-	ஆண்டு சந்தா Annual Subscription	₹ 540/-

09.08.2025 அன்று சென்னையில் கவிஞர் தியாரூவின் நான்கு நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் நக்கீரன் கோபால், ஆண்டாள் பிரியதர்ஷினி, பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா, இறையன்பன் குத்தூஸ், எல்லோரா மணி, சி.எஸ்.அமுதன், எஸ்.ஜோயல், கவிஞர் தியாரூ, என்.சி.பி.எச். விற்பனை ஆலோசகர் எஸ்.சண்முகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் இம்மாத வெளியீடு



(தொகுதி 1)
ரூ 780/–



(தொகுதி 2)
ரூ 700/–

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

மாத இதழ்

திருவள்ளுவராண்டு 2055

மலர் - 18 இதழ் - 07 - அக்டோபர் 2025

ஆசிரியர்

த. ஸ்டாலின் குணசேகரன்

ஆசிரியர் குழு

க. சந்தானம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந. முத்துமோகன்
முனைவர் மு. இராமசுவாமி
முனைவர் நா. இராமச்சந்திரன்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் ஞா. ஸ்டீபன்
ப. கு. ராஜன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் இரா. காமராசு
முனைவர் உ. அலிபாவா

இதழ் வடிவமைப்பு

கா. குணசேகரன்

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ் ₹ 45. 00. ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00
ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00
சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai - 600 050
A/c. No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்
உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட். ,
41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.
அம்பத்தூர். சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

உள்ளே...

1. மத நல்லிணக்க உறுதியேற்போம்!
ஆசிரியர் குழு 04

2. படித்துப் பாருங்களேன்
மா. சிவகுமார் 06

3. வடுக்கள் படைப்புகளாய்
அ. மங்கை 13

4. நிலப்படங்கள் மற்றும் வரைபடங்கள் வழியாக தமிழ்நாட்டின் காலனிய வரலாற்றைக் கண்டறிதல்
எஸ். ஜெயசீல ஸ்டீபன் 15

5. நூற்றாண்டாய் மறைக்கப்பட்ட விடுதலை வீரர்
காஞ்சிஅமுதன் 19

6. எழுத்தாளர் எஸ்.கமலாவின் நினைவுத் தீ
முனைவர் ஏ.இராஜலட்சுமி 25

7. என்னை உலுக்கிய உப்புவேலி
க. பழனித்துரை 31

8. திருமதி நாகேஸ்வரி அண்ணாமலை
அமரந்த்தா 37

9. மதுரைக்காஞ்சியைப் போல ஒரு சென்னைக்காஞ்சி
அ.கா. பெருமாள் 39

10. போராடும் மனிதனின் புதிய உண்மைகள்
முனைவர் அ.மோகனா 42

11. திண்டுக்கல் வரலாறு
எம்.எஸ்.முத்துசாமி ஐபிஎஸ். 45

12. இணை நாவலும் பெண் வெளியும்
ஜெ.ராஜா 47

13. அம்பேத்கர் ஆக்கங்கள் அண்ணலுக்கு ஓர் அறிவஞ்சலி
செ. சதீஸ்குமார் 50

14. தண்டோரா இயக்கத்தைப் பற்றிய நாவல்
ரா.வி. ஜீவநாத் 56

15. மகாபாரதமும் தமிழ் இலக்கியமும்
த. குணாநிதி 58

16. அம்பையின் படைப்பில் குடும்ப உறவுகள்
வெ. சந்தியா & முனைவர் நா. சிவகுரு 62

17. கொத்தாளி நாவல் காட்டும் இனக்குழுவும் அடிமைநிலையும்
ல.அ.முஹம்மது அலி ஜின்னாஹ்
முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ் 65

18. Religion, Conflict, and Feminist Self-Fashioning in Coming Out as Dalit and Reading Lolita in Tehran
Ms. Irfana Parveen & Dr. Saburunnisa A 71

மத நல்லிணக்க உறுதியேற்போம்!

1893இல் பம்பாய் துறைமுகத்திலிருந்து தென்னாப்பிரிக்காவுக்கு வழக்குரைஞர் தொழில் நடத்த ஒரு தனியார் வணிக நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஓராண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் புறப்பட்டார் 24 வயது இளம் பாரிஸ்டர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி.

தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களுக்கு அங்கிருந்த ஆங்கிலேயர்களும் ஆட்சியாளர்களும் ஏற்படுத்திய பிரச்சினைகளை கவனிக்கவும் அவற்றுக்குத் தீர்வுகாண முயற்சிக்கவும் அங்குள்ள இந்தியர்கள் சிலரை இணைத்து 'நேட்டால் இந்திய காங்கிரஸ்' என்ற ஓர் பொதுநல அமைப்பை ஏற்படுத்தியிருந்தார் வழக்குரைஞர் காந்தி. இச்செய்தி ஓரளவிற்கு தென்னாப்பிரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த இந்தியர்களையும் அங்கிருந்த இந்தியக் குமாஸ்தாக்களையும் எட்டியிருந்ததே ஒழிய சாதாரண ஒப்பந்தக் கூலிகளாக விளங்கிய இந்தியத் தொழிலாளர்களை எட்டவில்லை.

அத்தகைய சூழலில் தான் 'பாலசுந்தரம்' என்ற இந்திய ஒப்பந்தக் கூலி காந்தியின் வழக்குரைஞர் அலுவலகத்திற்கு ஒரு பிரச்சினையோடு வந்தார். அவர் ஒரு தமிழர். தனது ஆங்கிலேய எஜமானரால் தாக்கப்பட்டு முன்பகுதியில் இரண்டு பற்கள் உடைந்த நிலையிலும் சில ரத்தம்படிந்த காயங்களோடும் அங்கு வந்திருந்தார்.

வழக்குரைஞர் காந்தியின் வக்கீல் குமாஸ்தா ஒரு தமிழர். அவர் மூலம் தமிழர் பாலசுந்தரத்தின் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொண்ட காந்தி அவ்வழக்கை எடுத்து நீதிமன்றத்தில்

வாதாடி வெற்றி பெற்றுக் கொடுத்து தன்னை நம்பி வந்த கூலித்தொழிலாளிக்கு நியாயம் பெற்றுக் கொடுத்தார்.

இச்சிறு நிகழ்வு ஒரு வரலாற்றுத் திருப்புமுனைக்கு அடித்தளமிட்டது. கூலிகளாகக் கேவலப்படுத்தப்படுகிற தென்னாப்பிரிக்க அடிமை இந்தியர்களுக்கு உரிமைக்குரல் கொடுக்கும் உத்தமத் தலைவர் ஒருவர் உதித்துவிட்டார் என்ற நம்பிக்கை விதையை அங்குள்ள இந்தியர்களின் இதயத்தில் விதைத்தது

இதுபோன்ற அடுத்தடுத்த போராட்ட நிகழ்வுகளால் ஓராண்டு ஒப்பந்தத்தில் வழக்குரைஞராகச் சென்ற காந்தியடிகள் தொடர்ந்து இருபது ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவிலேயே இருந்து அங்குள்ள அடக்கப்பட்டுக் கிடந்த அடிமை இந்தியர்களுக்கான ஆகப்பெரும் தலைவராகத் திகழ்ந்து களமிறங்கிக் காரியமாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தென்னாப்பிரிக்கா சென்று மூன்றாவது ஆண்டில் 1896இல் இந்தியா வந்திருந்தபோது சென்னைக்கு வந்திருந்தார் காந்தி. 27வயது இளம் தலைவரை சென்னை வரவேற்ற வரலாற்றுச் சுவடுகளை இப்போது படித்தாலும் சிலிர்ப்பு ஏற்படும். இனம் கண்டு வரவேற்றுள்ளது தமிழகம். களம் அறிந்து பேசியுள்ளார் காந்தி.

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் பட்ட துயர்களை, அவர்களுள் ‘பாலசுந்தரம்’ உள்ளிட்ட தமிழர்கள் செய்த தியாகச் செயல்களைப் பட்டியலிட்டு தான் எழுதிய ஒரு சிறு நூலை சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் தான் உரையாற்றிய பொதுக் கூட்டமொன்றில் வெளியிட்டு உணர்ச்சிமிக்க சூழலை ஏற்படுத்தினார்.

வயது இருபத்தேழு என்றாலும் வந்திருந்தோர் அனைவரும் பக்குவமும் போராட்டக்குணமும் மிக்க இளம் தலைவரைப் பார்த்த பரவசத்தில் மகிழ்ந்தனர்.

அவர் வெளியிட்ட சிறு நூலின் அட்டை பச்சை வண்ணத்தில் இருந்ததால் அது ‘பச்சைப் பிரசுரம்’ என்றே அழைக்கப்பட்டது. காந்தி எடுத்து வந்த ஆயிரக்கணக்கான பச்சைப் பிரசுரம் தீர்ந்து விட்ட நிலையில் பற்றாக் குறையை ஈடுகட்ட சென்னையில் பத்தாயிரம் பிரதிகள் புதிதாக அச்சடிக்கப்பட்டன.



அப்போது தொடங்கிய காந்தியடிகளின் தமிழகப் பயணம் 1946 வரை இடைப்பட்ட ஐம்பது ஆண்டுகளில் இருபது முறை மீண்டும் மீண்டும் தமிழகத்திற்கு வந்ததோடு தமிழ் மண்ணின் குக்கிராமங்களுக்குக் கூட வந்து சென்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றுத் திகழ்ந்தன.

பாலசுந்தரம், தில்லையாடி வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி, செல்வம் என்று தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்தோர் பலர். காயம்பட்ட, சிறைகளில் சித்ரவதைப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களும் இளம் பெண்களும் காந்தியடிகளின் அடியொற்றி அவருடன் இணைந்து நின்று துணிவுடன் எவ்வித எதிர்பார்ப்புமின்றிப் போராடினார்கள், ஊக்குவித்தார்கள், உத்வேகமூட்டினார்கள் என்று இறுதி மூச்சு வரை சொல்லியும் எழுதியும் தனது நன்றியைக் காணிக்கையாக்கியுள்ளார் காந்தியடிகள்.

பேச்சும், எழுத்தும், செயலும் போராட்டமும் காந்தியடிகளின் ஆயுதங்களாயின!

அத்தகைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியை அவர் பிறந்த அக்டோபர் மாதத்தில் எண்ணிப் போற்றுவோம்! அவர் பெயரில்... அவரின் உயிர்மூச்சாக விளங்கிய மத நல்லிணக்கக் கொள்கையை நிலைநாட்ட உறுதியேற்போம்!

●

ஆசிரியர் குழு

படித்துப் பாருங்களேன்...

சீனா

ஏகாதிபத்திய நாடா? ஏகாதிபத்தியத்தைத் தகர்க்கும் சக்தியா?

21 ஆம் நூற்றாண்டு உலகில் சீனாவின் வகிபாகம் பற்றி

(WHY THE WORLD NEEDS CHINA
Development, Environmentalism,
Conflict Resolution & Common Prosperity
KYLE FERRANA)



(முந்தைய இதழில் "படித்துப் பாருங்கள்" பிரிவில் வெளியான நூல் அறிமுகத்தின் இறுதிப் பகுதி)

ஏகாதிபத்தியத்தின் கூறுகளைக் கொண்டுள்ள ஒரு பொருளாதாரம் ஏகாதிபத்தியத்தைத் தகர்ப்பதாக இருக்க முடியுமா? பொதுவுடைமையை இலட்சியமாகக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியில் தனியார் முதலாளிகளை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ள முடியுமா?

இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கும் “உலகிற்கு சீனா ஏன் தேவை – வளர்ச்சி, சூழலியல், தகராறு தீர்ப்பு, பொதுவான வளம்” என்ற கைலே ஃபெர்ரனா எழுதிய நூல் அறிமுகத்தின் முதல் பகுதியில் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியிலும் இருபத்தியொன்றாம் நூற்றாண்டிலும் சீனா எதிர்கொண்ட ஏகாதிபத்தியக் கட்டமைப்பு பற்றிய விவரிப்பைப் பார்த்தோம்.

ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கான சமனற்ற பரிவர்த்தனை பற்றியும் அதைப் பேணுவதற்கு ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்தும் இரண்டாம் நிலைப் பொறியமைவுகளில் முதலாவதான "கட்டமைப்புச் சீர்திருத்தம்" பற்றியும் பார்த்தோம்.

கட்டுரையின் இந்த இறுதிப் பகுதியில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கான, பிற இரண்டாம் நிலைப் பொறியமைவுகளில் இருந்து தொடங்குவோம்.

மா. சிவகுமார்

2. பொருளாதாரத் தனிமைப்படுத்தல்

சில புதிய காலனிய நாடுகளில், ஏகாதிபத்தியக் கட்டமைவின் தலைமை சக்தியான அமெரிக்கப் பேரரசுக்குக் கட்டுப்படாத ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு வருகின்றனர். அவர்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுகின்றன. ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் மூலம் பன்னாட்டு பணப் பரிவர்த்தனைகள் மறுக்கப்படுகின்றன. பிற நாடுகள் அவற்றுடன் வணிகம் செய்வது தடுக்கப்படுகிறது.

தென் அமெரிக்காவில் உள்ள வெனிசுலா, கரீபியன் தீவான கியூபா, வட கொரியா, ஈரான் முதலிய நாடுகள் இவ்வாறு உலகப் பொருளாதாரத்தில் இருந்து ஏகாதிபத்தியத் தடைகள் மூலம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக இந்த நாடுகளின் பொருளாதாரம் நலிவடைகிறது. நாட்டில் உணவுப் பாதுகாப்பு, மருத்துவ வசதிகள், தொழில்நுட்ப முன்னேற்றம் தடுக்கப்படுகிறது.

இதனை எதிர்த்து மக்கள் கலகம் செய்து ஆட்சியாளர்களை மாற்ற வேண்டும், புதிய ஆட்சியாளர்கள் மேற்கத்திய ஏகாதிபத்தியக் கட்டமைப்புக்கு உகந்தவர்களாக அமைய வேண்டும் என்பது இந்தத் தனிமைப்படுத்தலின் நோக்கம்.

3. இராணுவத் தலையீடு

சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது இராணுவத் தாக்குதல்கள் மூலம் அடம் பிடிக்கும் நாடுகளின் ஆட்சியாளர்களை அகற்றும் செயல்பாடு கடந்த 30 ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1989ஐத் தொடர்ந்த 25 ஆண்டுகளில் அமெரிக்க இராணுவம் பனாமா, சோமாலியா, ஹைத்தி, போஸ்னியா, கோசோவோ, ஆப்கானிஸ்தான், சூடான், ஈராக், யேமன், பாகிஸ்தான், லிபியா, சிரியா நாடுகளில் நேரடியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

4. மென் அதிகாரம்

புதிய காலனிய நாடுகளின் அரசியல், பண்பாடு இவற்றை ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு (சமனற்ற பரிவர்த்தனை) உகந்ததாக மாற்றி அமைக்கும் வகையில் ஊடகங்கள், திரைப்படங்கள், 21 ஆம் நூற்றாண்டில் சமூக வலைத்தளங்கள், அரசுசார் தொண்டு நிறுவனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

புதிய தாராளவாதக் கொள்கைகளை செயல்படுத்தியதால் இந்த நாடுகளில் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, வேலையின்மை அதிகரிக்கும்போது போராட்டங்கள் வெடிக்கின்றன. போராடும் குழுக்களுக்கு நிதி உதவி அளித்து அவர்களுக்கு வழிகாட்டி ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவான ஆட்சியாளர்களை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கு வழி வகுக்கின்றன. பல நேரங்களில் ஒரு தரப்பைச் சேர்ந்த ஏகாதிபத்தியத் தரகு ஆட்சியாளரை நீக்கிவிட்டு இன்னொரு தரப்பைச் சேர்ந்த ஆட்சியாளரைக் கொண்டு வருவதற்கும் தயங்குவதில்லை. எகிப்தில், 1981 முதல் 2011 வரை ஆட்சி செய்த ஹோஸ்னி முபாரக் என்ற நீண்ட கால அமெரிக்கக் கூட்டாளி, அங்கு நடந்த மக்கள் எழுச்சியின் மூலம் நீக்கப்பட்டு அமெரிக்காவுக்கு ஆதரவான ஆட்சியாளர்கள் (இப்போதைய நாட்டுத் தலைவர் எல் சிசி 2014 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றவர்) அமர்த்தப்பட்டனர்.

இந்த எழுச்சிகள் அனைத்தும் பொதுவாக வண்ணப் புரட்சிகள் என்று அழைக்கப்படுகின்றன. செர்பியாவில் (2000) ஸ்லோபோடான் மிலோசவிச்சுக்கு எதிரான புல்டோசர் புரட்சி, ஜார்ஜியாவில் (2003) எடுவர்டோ ஷெவர்நாட்சேவுக்கு எதிரான ரோஸ் புரட்சி, செக்கோஸ்லோவாகியாவில் (1989) வெல்வெட் புரட்சி, உக்ரைனில் (2004) விக்டர் யானுகோவிச்சுக்கு எதிரான ஆரஞ்சுப் புரட்சி, கிர்கிஸ்தானில் (2005) அஸ்கர் அக்கயேவுக்கு எதிரான துலிப் அல்லது பிங்க் புரட்சி, லெபனானில் (2005) செடார் புரட்சி, மியன்மாரில் (2007) செடார் புரட்சி, எகிப்து, துனீசியா, ஜோர்டான், மொராக்கோ முதலிய நாடுகளில் அரபு வசந்தம் (2010 முதல் 2012 வரை), 2014 இல் உக்ரைனில் யூரோ மைதான் போராட்டங்கள், ஹாங்காங்கில் 2019-20 இல் சனநாயக ஆதரவுப் போராட்டங்கள் எனப்படுபவை என்று இவை தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

இதே முறையில் நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், நேபாளம் முதலிய நாடுகளில் கடந்த சில ஆண்டுகளில் ஆட்சி மாற்றங்கள் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் சனநாயகத்துக்கான தேசிய அறக்கட்டளை (National Endowment for Democracy) என்ற அமெரிக்க நிதி அமைப்பு தீவிரமாகப் பங்கேற்கிறது. போராட்டக் குழுக்களுக்கு நிதி வழங்குகிறது. USAID என்ற அமைப்பும் தனது அரசுசாரா அமைப்புகள் மூலம் இந்த வண்ணப் புரட்சிகளை ஊக்குவித்து வழிநடத்துகிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகள்

ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக பல்வேறு உலக நாடுகள் செயல்படுகின்றன. "விவசாயிகள் – பாட்டாளிகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு" என்ற இயல் 3 இல் வெனிசுலா, கியூபா நாடுகளில் விவசாயிகள் – தொழிலாளர் கூட்டணி அதிகாரத்துக்கு வந்து ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நடத்திய போராட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆயுதம் தாங்கிய போராட்டம் என்ற தலைப்பில் கொரியா, வியட்நாம், மியன்மார் முதலிய நாடுகளின் போராட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், ஒரு சோசலிச முகாம் இல்லாத நிலையில் ஆயுதம் தாங்கிய போராட்டத்துக்கான வெளி வெகுவாகக் குறைந்திருக்கிறது.

இயல் 4 இல் முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்ட நாடுகளைப் பற்றிப் பேசப்படுகிறது. இதில் 1979 இல் இஸ்லாமியப் புரட்சி என்ற வடிவில் முதலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஈரானையும் 1991 இல் சோவியத் ஒன்றியத்தின் உடைவில் தோன்றிய ரசியாவையும் எடுத்துக் கொள்கிறார், ஆசிரியர். இந்த இரண்டு நாடுகளின் மீதும் பொருளாதாரத் தடைகள், பதிலிப் போர்கள், ஊடக அவதூறுகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. ஆனால், இந்த நாடுகளின் முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியச் சுரண்டலை எதிர்த்து தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது. ஆனால், தொழிலாளர்களும் சிறுவுடைமையாளர்களும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகின்றனர்.

சரி, ஏகாதிபத்திய நாடுகளுக்கு வெளியே விவசாயிகள்-தொழிலாளர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்லது முதலாளித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்பு இருந்தால் ஏகாதிபத்திய நாடுகளுக்கு உள்ளே எத்தகைய எதிர்ப்பு இயக்கங்கள் நிலவுகின்றன என்று இயல் 5 இல் ஆய்வு செய்யப்படுகிறது.

அமெரிக்காவில் பெர்னி சாண்டர்ஸ் என்ற மேலவை உறுப்பினர், பிரிட்டனில் தொழிலாளர் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட ஜெரமி கோர்பின் முதலியோர் அரசியல் அதிகாரத்துக்கு வரமுடியவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் முதலிய ஏகாதிபத்திய நாடுகளில் சமூக ஜனநாயகக் கட்சிகள் சீர்திருத்தங்கள் மூலமாக மாற்றங்களைக் கொண்டு வருவது என்ற பாதைக்குள் நுழைந்தன. பன்னாட்டு அளவில் தத்தமது நாட்டின் ஏகாதிபத்திய அரசுகளின் வெளியுறவுக் கொள்கையை ஆதரிக்கின்றனர். போர் எதிர்ப்பு, ஆதிக்க மறுப்பு என்ற அடிப்படையில் ஈராக் போரையும் பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் இனவழிப்பையும் சொல்லளவுக்கு எதிர்த்தாலும் நடைமுறையில் அது அந்நாட்டு அரசுகளின் கொள்கைகளிலும் செயல்பாடுகளிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.

உலக நிலைமை – தொகுப்பாக

21 ஆம் நூற்றாண்டின் உலக ஏகாதிபத்தியக் கட்டமைப்பில் ஏகாதிபத்தியச் சுரண்டலை எதிர்க்கும் அல்லது மறுக்கும் நாடுகளில்

- மக்கள் போராட்டங்களின் மூலம் ஆட்சியாளர்கள் மாற்றப்படுகின்றனர்.
- அல்லது நேரடி இராணுவத் தலையீடு மூலம் ஆட்சியாளர்கள் மாற்றப்படுகின்றனர்.
- இரண்டும் நடக்காத நிலையில் பொருளாதாரத் தடையால் அவை தனிமைப்படுத்தப்படுகின்றன. ஊடக அவதூறு பரப்புரையால் வில்லனாக்கப்படுகின்றன.

வெனிசுலா, கியூபா, வடகொரியா தொடங்கி ஈரான், ரசியா முதலிய நாடுகள் தனிமைப்படுத்தப்பட்டு உலகப் பொருளாதாரத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றன. லிபியா, சிரியா, ஈராக், செர்பியா போன்ற நாடுகளில் ஏகாதிபத்திய இராணுவத் தலையீடு மூலம் ஆட்சியாளர்கள் மாற்றப்பட்டு கீழ்ப்படுத்தப்பட்டன. இலங்கை, பாகிஸ்தான், வங்க தேசம், உக்ரைன், எகிப்து, போலந்து, செக்கோஸ்லோவோகியா முதலிய நாடுகளில் மக்களின் எழுச்சியைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய ஆதரவு ஆட்சியாளர்கள் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளன. இதற்கு அமெரிக்காவின் நிதி வலிமையும் உலகளாவிய தொண்டு நிறுவனங்களின் கட்டமைப்பும் கருவிகளாகப் பயன்படுகின்றன.

இவ்வாறு உலகின் பெரும்பாலான நாடுகள் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியக் கட்டமைவின் சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டு புதிய காலனிகளாகவே தொடர்கின்றன.

ஏகாதிபத்திய நாடுகளுக்குள் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராகவும் பிற நாடுகளின் மீது ஏகாதிபத்திய அரசியல் இராணுவத் தாக்குதல்களுக்கு எதிராகவும் செயல்படும் கட்சிகளும் போராட்டங்களும் விளிம்பு நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளன.

சீனா – மாற்றுப் பாதை உண்டா ?

இந்த உலகச் சூழ்நிலையில் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. ஏகாதிபத்திய கட்டமைப்பு சீர்திருத்தம், தனிமைப்படுத்தல், இராணுவத் தாக்குதல், மென்அதிகாரம் இவற்றை எதிர்கொண்டு தாக்குப்பிடித்திருக்கிறது.

சீனா தனது **சீர்திருத்தம் – திறந்து விடுதல்** பாதையைப் பின்பற்றாமல் இருந்திருந்தால், அதாவது "முதலாளித்துவப் பாதை" என்று அழைக்கப்படுவதை தவிர்த்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

- சீனாவின் மகத்தான பண்பாட்டுப் புரட்சியின் இறுதியில் மாவோவின் இறுதிக்காலத்தில் அதிகாரத்துக்கு வந்த நால்வர் கும்பலின் பாதையில் பயணித்து 1989இல் பிற சோசலிச நாடுகளைப் போல கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி வீழ்த்தப்பட்டிருக்கலாம். சீனா பல நாடுகளாகச் சிதைவுண்டு 1990களில்

ரசியாவைப் போல கடும் புதிய தாராளவாதக் கொள்கைக்கு உள்ளாகியிருக்கலாம்.

- அல்லது பண்பாட்டுப் புரட்சியைத் தாண்டி, எதிர்ப்புரட்சியையும் தவிர்த்து மிக மோசமான வளர்ச்சி குன்றிய வடிவத்தில், மீ-ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தடைகளையும் தனிமைப்படுத்தலையும் எதிர் கொண்டிருக்கலாம். சீனாவின் பெரும் எண்ணிக்கையிலான நாட்டுப்புற உழவர்கள் தொடர்ந்த பொருளாதார துயரத்தை எதிர்கொண்டிருக்கலாம். இது இன்றைய வட கொரியாவின் நிலையை அல்லது கியூபாவின் நிலையை ஒத்திருக்கும்.
- இத்தகைய கற்பனைகளை ஆய்வு செய்வதற்குப் பதிலாக, சீனாவை ஒத்த நாடான இந்தியாவுடன் ஒப்பிடலாம் என்று சொல்கிறார், ஆசிரியர். இரண்டு நாடுகளுமே 1940களின் இறுதியில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றன. 1980-கள் வரை இரண்டு நாடுகளின் ஜி.டி.பிகளும் கிட்டத்தட்ட சமமாக இருந்தன. 2021 ஆம் ஆண்டில் சீனாவின் ஜி.டி.பி. இந்தியாவின் ஜி.டி.பியை விட ஐந்து மடங்காக ஆகியிருந்தது. இந்தியாவின் கைக்குழந்தை இறப்பு வீதம் சீனாவின் இறப்பு வீதத்தை விட ஐந்து மடங்காக இருந்தது. கல்வியறிவு, குடிமக்களின் வாழ்நாள் எதிர்நோக்கு, பொதுக் கட்டமைப்பு இவற்றில் இந்தியா சீனாவை விட பின்தங்கியுள்ளது. ஒரு நாளைக்கு $6.85 வருவாய்க்கும் குறைவாகப் பெறும் மக்கள் தொகை இந்தியாவில் 84% ஆக உள்ளது, சீனாவில் இது வெறும் 25% ஆகக் குறைந்திருந்தது.

ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளுடனான உறவுகளில் சீனா ஏகாதிபத்தியச் சுரண்டல் தன்மையைக் கொண்டுள்ளதா ?

கெர்னாட் க்யோலர் என்ற ஆய்வாளர் வணிக பரிவர்த்தனைகளையும் செலாவணி விகிதங்களையும் ஆய்வு செய்து ஆப்பிரிக்காவுக்கும் "முன்னேறிய நாடுகளுக்கும்" இடையே சமனற்ற பரிவர்த்தனை அந்த நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16% முதல் 20% ஆக இருந்தது என்றும் அதே நேரம் சீனாவுடனான அவற்றின் சமனற்ற பரிவர்த்தனை அவற்றின் ஜி.டி.பியில் 0.5% என்றும் கண்டறிந்தார்.

சீனா ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து பெருமளவு கச்சாப் பொருட்களை கறந்தாலும் அது சமனற்ற பரிவர்த்தனையின் ஆதாயத்தை ஏன் குறைவாகப் பெறுகிறது என்ற கேள்வியை எழுப்பும் ஆசிரியர், இதற்குக் காரணம் சீனாவின் உற்பத்திப் பொருட்களின் பெரும்பகுதி ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, அங்கு உற்பத்தியாகும் ஆப்பிள் ஐபேட், ஐஃபோன்கள் அனைத்துமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அந்த உற்பத்தி ஆலைகளை நடத்துவது தைவானைச் சேர்ந்த ஹோன்ஹாய் நிறுவனம். எனவே, இந்த இறுதி சேர்த்துப் பொருத்தலின் பெரும்பகுதி இலாபம் தைவான் நிறுவனத்துக்குச் செல்கிறது. ஒட்டுமொத்த ஐஃபோன்கள், ஐபேட்கள் இலாபம் அமெரிக்க பன்னாட்டு பெரு நிறுவனமாக ஆப்பிள்-க்குச் செல்கிறது.

சீனாவும் மூலதன ஏற்றுமதியும்

2010 முதல் 2018 வரை சீனா தனது அயல்நாட்டு முதலீடுகளில் இருந்து பெற்ற வருவாய் சராசரியாக 3 விழுக்காட்டைத் தாண்டவில்லை. அதே நேரம், சீனாவிற்குள் செய்யப்பட்ட அயல்நாட்டு முதலீடுகளில் இருந்து அந்த முதலீட்டாளர்கள் பெற்ற வருவாய் 5 முதல் 6 விழுக்காடாக இருந்தது. அதாவது, குறிப்பிட்ட அளவு முதலீட்டை எடுத்துக் கொண்டால் சீனாவில் செயல்படும் அயல்நாட்டு மூலதனங்கள் ஈட்டும் இலாபம், சீன முதலீடு பிற நாடுகளில் ஈட்டும் இலாபத்தை விட இரண்டு மடங்கு.

எனவே, சீனா வெளிநாடுகளில் செய்யும் முதலீடுகளில் இருந்து அதுபெறும் நிகர இலாபம் எதிர் எண் ஆக உள்ளது. 2014 ஆம் ஆண்டில் $1300 கோடி நிகர இலாபம் ஈட்டியதைத் தவிர அனைத்து ஆண்டுகளிலும் அது நிகர இழப்பையே எதிர்கொண்டிருக்கிறது. அதாவது, சீனாவின் முதலீடுகளுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் தொகையை சீனாவில் வெளிநாட்டு நிறுவனங்கள் எடுத்துச் செல்லும் தொகையைக் கழித்து வரும் தொகை எப்போதுமே சீனாவுக்கு எதிர்நிலையாகவே உள்ளது.

இதற்கான பொருளாதார அடிப்படை என்ன ?

சீனாவின் பெல்ட் ரோட் முன்னெடுப்பு 2013 இல் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து

- அமெரிக்கா அதற்குப் போட்டியாக "புதிய பட்டுப் பாதை"த் (New Silk Road) திட்டத்தை 2017 இல் அறிவித்தது.
- 2022 இல் இந்தோ-பசிபிக் பொருளாதாரச் சட்டகம் (Indo Pacific Economic Framework) என்ற குழப்படியான திட்டத்தை அறிவித்தது. அதில் சீனாவுக்கு எதிராக அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் பிற தென்கிழக்கு ஆசிய நாடுகள் இணைக்கப்பட்டன.
- 2021 இல் முன்னணி ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டமைப்பான G7 "உலகை மேம்பட்டதாக மீட்டமைப்பதற்கான கூட்டணி" (Build Back Better World Partnership) ஒன்றை அறிவித்தது.

- 2021 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் "உலக நுழைவாயில்" (Global Gateway) என்ற திட்டம் $30,000 கோடி செலவில் உள்கட்டமைப்புகளை உருவாக்கப் போவதாக அறிவித்தது.

இந்தத் திட்டங்கள் எதுவுமே ஒரு கட்டமைப்பைக் கூட உருவாக்கவில்லை என்கிறார் கைலே ஃபெர்ரனா. இவை இனிமேலாவது நடைமுறைக்கு வருமா என்பதும் கேள்விக்குரியதே!

அப்படியானால் இந்த நாடுகளின் மூலதன ஏற்றுமதி எங்குச் செல்கிறது? 2018-2021 OECD தரவுகளின்படி, ஜி7 உறுப்பினர்களில் முதலீட்டில் அதிக அளவு கட்டுமானத்துறையில் செய்திருப்பது இத்தாலி. அந்நாட்டின் மொத்த வெளிநாட்டு முதலீட்டில் 7.7% கட்டுமானத் துறைக்குப் போகிறது. மற்ற ஜி7 நாடுகள் ஒவ்வொன்றிலும் நிதித்துறை, காப்பீட்டில் 20% முதலீடு செல்கிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரை நிதித்துறை முதலீடு 64.8% ஆகவும் கட்டுமானத் துறையில் 0.1% ஆகவும் உள்ளது.

மேற்கத்திய நிதி மூலதன உடைமையாளர்கள் இலாபத்தின் மீது குறியாக உள்ளனர். மேலும், விளிம்புநிலை நாடுகளை வளர்ச்சியடையாத நிலையில் வைத்திருப்பது அவர்களது சுரண்டலுக்கு உகந்ததாக உள்ளது. ஓர் ஏழை ஆப்பிரிக்க நாட்டில் ஒரு தொடர்வண்டி பாதை அல்லது மின்உற்பத்தி நிலையத்தை கட்டுவது அபாயம் நிறைந்த முயற்சியாகக் கருதப்படுகிறது. மேலும் அவற்றில் இருந்து இலாபம் ஈட்டுவது இயலாத வேலை என்றும் கருதப்படுகிறது.

லாபம் குறைவான உள்கட்டமைப்புத் திட்டங்கள்

ஆனால், மக்கள் சீனாவைப் பொறுத்தவரையில் $50,000 கோடிக்கும் அதிகமான அயல் முதலீடுகள் கட்டுமானம் தொடர்பானவை. இது $83,800 கோடி பெல்ட் அண்ட் ரோட் முன்னெடுப்பில் 60 விழுக்காடு ஆகும். அதன் மொத்த வெளிநாட்டு முதலீடான $2.2 இலட்சம் கோடியில் 22.7 விழுக்காடு ஆகும்.

2000 ஆண்டுக்கும் 2020க்கும் இடைப்பட்ட காலத்தில் சீன மக்கள் குடியரசு ஆப்பிரிக்க நாடுகளில் 13,000 கிலோமீட்டர் தொடர் வண்டி பாதைகளையும் 1 இலட்சம் கிலோமீட்டர் நெடுஞ்சாலைகளையும் 1000 பாலங்களையும் 100 துறைமுகங்களையும் அமைக்க உதவியுள்ளது என்று சீன செய்தி நிறுவனம் ஷின்ஹுவா பதிவு செய்கிறது.

கடன் பொறியா ?

ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளை சீனா கடன் பொறியில் சிக்க வைக்கிறது என்ற குற்றச்சாட்டை அடுத்து எடுத்துக் கொள்கிறார், ஆசிரியர். இது தொடர்பான புள்ளிவிவரங்களை ஆராய்ந்து சீனா தனது கடன்களை சரியான நேரத்தில் வசூலிப்பதில்லை. கடன் செலுத்தத் தவறும்போது கடன்களை மறுசீரமைப்பது புதிய கடன்களைக் கொடுப்பது என்ற அணுகுமுறையைக் கையாள்கிறது.

- 2019 இல் வெனிசுலா, 2015 இல் பாகிஸ்தான், 2006 இல் ஜிம்பாப்வே, 2010களில் சாட், மொசாம்பிக், எத்தியோப்பியா, காங்கோ குடியரசு மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளில் கடன் காலத்தை நீட்டித்து வட்டி வீதத்தைக் குறைத்திருக்கிறது. 2016 இல் அங்கோலாவுக்கு சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி வழங்கிய $750 கோடி கடன் மறுசீரமைக்கப்பட்டது.
- தான்சானியா – ஜாம்பியா தொடர்வண்டி பாதைத் திட்டத்துக்கான கடனைத் திருப்பிச் செலுத்துவது பத்து ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடப்பட்டது.
- கானா, நைஜர் இரண்டு நாடுகளின் கடன்கள் பதினைந்து ஆண்டுகளுக்குப் பதிலாக இருபது ஆண்டுகளில் செலுத்துவதாக மாற்றப்பட்டன.
- 2022இல் சீனாவின் அமைச்சர், 17 ஆப்பிரிக்க நாடுகளுக்கு வழங்கப்பட்ட 23 வட்டியில்லாக் கடன்களைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்தார். அவை முந்தைய ஆண்டில் முதிர்ச்சியடைந்திருந்தன.

இலங்கை

இலங்கையில் ஹம்பன் தோட்டா துறைமுகத்தைக் கட்டுவதற்கு சீன நிறுவனங்கள் கடன் கொடுத்திருந்தன. இலங்கை அரசாங்கம் கடனை அடைக்க முடியாத நிலையில் 2017 ஆம் ஆண்டு அந்தத் துறைமுகம் சீன அரசு நிறுவனம் ஒன்றுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டது.

ஆனால், "இலங்கையின் கடன் நெருக்கடி சீனக் கடனுடன் தொடர்பற்றது, அது மேற்கத்திய மூலதனச் சந்தைகளில் இருந்து பெறப்பட்ட கடன்களாலும் இலங்கையின் பொருளாதார முறையினாலும் தூண்டப்பட்டது. உண்மையில் சீன நிறுவனம் கடனுக்குப் பதிலாக துறைமுக குத்தகையைப் பெறவில்லை. கடுமையான பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு $110 கோடி கொடுத்து சீன அரசு நிறுவனம் துறைமுகத்தைக் குத்தகைக்கு எடுத்தது. இந்தத் தொகையைப் பயன்படுத்தி இலங்கை அரசு மற்ற கடன்களை அடைக்கவும் தனது அன்னியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் செய்தது" என்று சாத்தம் ஹவுஸ் ஆய்வுக் கட்டுரை ஒன்று கூறியது.

சீன முதலீடுகள் – தொகுப்பாக

புதிய காலனிய நாடுகளுடன் வணிகம் நடத்துவதன் மூலம் சீனா உலக ஏகாதிபத்தியக் கட்டமைப்புக்குள் செயல்படுகிறது. அதே நேரம் அந்த நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் ஏகாதிபத்தியச் சுரண்டலை பலவீனப்படுத்துகிறது.

சீனா, இந்த நாடுகளில் செய்யும் முதலீடுகள் உள் கட்டமைப்புகளிலும் பிற மாறா மூலதனக் கூறுகளிலும் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 2019 ஆம் ஆண்டு கானாவுடன் போடப்பட்ட $200 கோடி ஒப்பந்தத்தை எடுத்துக் கொள்வோம். இது அந்நாட்டில் சாலைகள், தொடர்வண்டி பாதைகள், மற்றும் பிற போக்குவரத்துக் கட்டமைப்பை உருவாக்குகிறது. இது கானாவின் தங்கச் சுரங்கத்தில் இருந்து எடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் தங்கத்தின் விலையை நேரடியாக உயர்த்தாது. ஆனால், அது கானாவில் அதிக கூலி தரக்கூடிய மேம்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கும். இது தொழிலாளர்களின் சுதந்திரத்திலும் இடம் பெயர்வதிலும் உள்ள தடைகளை நீக்கும். சமனற்ற பரிவர்த்தனைக்கான அடித்தளத்தை பலவீனப்படுத்தும்.

மேலும், கடந்த 10 ஆண்டுகளில் சீனா ஏகாதிபத்தியக் கட்டமைவின் மிகப்பெரிய பகை சக்திகளான ஈரானிலும் ரசியாவிலும் முதலீடுகளை அதிகரித்துள்ளது. அந்நாடுகளுடனான வணிகத்தை அதிகரித்துள்ளது.

நவம்பர் 2004 இல் கியூபாவின் தலைவர் ஃபிடல் காஸ்ட்ரோ "அனைத்து மூன்றாம் உலக நாடுகளுக்கும் சீனா மிகவும் உயர் நம்பிக்கை தருவதாகவும் மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் விளங்குகிறது" என்று கூறியதை மேற்கோள் காட்டி தேசிய விடுதலைக்கான சக்திகள் சீனாவில் இருந்து ஆதரவு பெறுகின்றன என்று பதிவு செய்கிறார், கைலே ஃபெர்ரனா.

சீனா விளிம்பு நாடுகளுக்கு அரசியல்ரீதியாக புரட்சியை ஏற்றுமதி செய்யவில்லை. ஆனால், பொருளாதார, தொழில்நுட்ப வலிமையை வழங்குவதன் மூலம் புதிய காலனியத்துக்கு எதிராக உலகத்தின் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் இறுதி வெற்றிக்குப் பாதை அமைக்கிறது என்கிறார், ஆசிரியர்.

சீனாவில் அரசு அதிகாரம் யாரிடம் உள்ளது ?

சீனாவின் வெளிநாட்டு உறவுகள் எந்த வர்க்கத்துக்கு சாதகமானவை? சீனாவில் அரசு அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவது யார்? என்ற கேள்வியை இயல் 7 இல் ஆசிரியர் எடுத்துக் கொள்கிறார்.

இது குறித்து உங்கள் நூலகம் ஜூலை மாத இதழில், “100 ஆவது ஆண்டில் சோசலிசம் – இலக்கு வைத்துப் பயணிக்கும் மக்கள் சீனம்! அதன் அரசியல் பொருளாதாரம் பற்றி” என்ற தலைப்பில் “சீனப் பொருளாதாரம்: அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியவை” என்ற ஆர்தர் கிரோபர் எழுதிய நூலைப் பற்றிய அறிமுகக் கட்டுரையில் விரிவாகப் பார்த்துள்ளோம்.

இங்கு சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியிலும் அரசு அதிகாரத்திலும் முதலாளிகளின் பங்கு பற்றி மட்டும் சில விவரங்களைப் பார்க்கலாம்.

சீனாவில் முதலாளிகள்

2021 ஆம் ஆண்டில் சீனாவில் 700 பில்லியனர்கள் (அன்றைய மதிப்பில் ரூ 7,000 கோடிக்கும் அதிகமான சொத்துகளை வைத்திருப்பவர்கள்) இருப்பதாக ஃபோர்ப்ஸ் பத்திரிகை மதிப்பிட்டது.

2002 ஆம் ஆண்டில் சீன முதலாளிகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டனர். பல பில்லியனர்கள் கட்சியில் சேர ஆர்வம் காட்டினர்.

2012 ஆம் ஆண்டில் இப்போதைய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஷி ஜின்பிங் அதிகாரத்துக்கு வந்தபிறகு

- 2020 நவம்பரில் அலிபாபா கார்ப்பரேஷனைச் சேர்ந்த ஆன்ட் குழுமத்தின் தொடக்கநிலை பொதுப் பங்கு வெளியீட்டை சீன அரசு தடுத்து நிறுத்தியது. அதன் மதிப்பு $3400 கோடியாக இருந்திருக்கும்.
- 2021 ஆம் ஆண்டில் அலிபாபா நிறுவனத்துக்கு $280 கோடி தண்டம் விதிக்கப்பட்டது. ஏகபோகத்தை உருவாக்குவதற்கு எதிரான சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டது. கட்சி உறுப்பினர் என்ற தகுதி ஜாக்கி மா-வைப் பாதுகாக்கவில்லை. அலிபாபாவின் பங்குச் சந்தை மதிப்பு $20,000 கோடி வீழ்ச்சியடைந்தது. 2023 ஆம் ஆண்டில் அலிபாபா குழுமத்தை ஆறு நிறுவனங்களாகப் பிரிப்பதாக அறிவித்தது.
- 2021 ஜூலை மாதம் தனியார் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மீது சட்டம் பாய்ந்தது. $1000 கோடி புரண்டு வந்த இந்தத் துறையில் இலாபத்தை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டது.
- திதி (Didi) என்ற கால் டாக்சி நிறுவனத்தின் பங்கு வெளியீட்டை தடை செய்து, அந்த நிறுவனத்தின் செயலிகள் செயலித் தளங்களில் இருந்து நீக்கப்பட்டன.
- ஊழியர்களை மிகைநேரம் வேலை செய்ய அழுத்தம் கொடுக்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல்பாடு சட்டத்துக்குப்

புறம்பானது என்று உச்சநிலை மக்கள் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

- செப்டம்பர் மாதம் சீன மக்கள் வங்கி கிரிப்டோ நாணயங்களை கணினியில் உற்பத்தி செய்வதைத் தடை செய்தது.
- எவர் கிராண்டே குழுமம் 2021 இல் திவால் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஷியூ ஜியாயின் கட்சி உறுப்பினராக இருந்தது எந்தப் பலனையும் அளிக்கவில்லை. அவரது சொத்துகளில் 98% மதிப்பை நிறுவனங்களின் கடனை அடைக்கப் பயன்படுத்தும்படி அரசு கட்டாயப்படுத்தியது. 2023 ஆம் ஆண்டில் அவர் கைது செய்யப்பட்டார்.
- லியாங் 2017 ஆம் ஆண்டில் நடந்த 19 ஆவது கட்சிக் காங்கிரசில் இடம் பெறவில்லை.
- எவர்கிராண்டே ரியல் எஸ்டேட் குழுமம் திவால் ஆனதைத் தொடர்ந்து வீட்டுக் கடன் வாங்கியவர்கள் நாடு முழுவதும் போராட்டத்தில் இறங்கினர். வீட்டுக் கடன்களை மறுசீரமைக்கும்படி வங்கிகளுக்கு அரசு ஆணையிட்டது. வீட்டுக் கடன் கட்டத் தவறியவர்களின் வீடுகளை பறிமுதல் செய்வதற்குத் தடை விதித்தது. அமெரிக்காவில் 2008 ஆம் ஆண்டு வீட்டுக் கடன் நெருக்கடியில் இலட்சக் கணக்கான வீட்டு உரிமையாளர்கள் தங்களது வீடுகளை இழந்ததுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

சீர்திருத்தம் – திறந்து விடுதல் கொள்கையின் முதல் கட்டத்தின் போது மூலதனத்திடம் விடப்பட்ட பகுதிகள் சீனப் பொருளாதாரத்தின் தலைமைத் துறைகள் அல்ல. முந்தைய கட்டுரையில் பதிவு செய்தது போல அரசு நிறுவனங்கள் முக்கியமான துறைகளையும் நிதித்துறையையும் கட்டுப்படுத்துகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் தனியார் மூலதனத்தின் பற்கள் மேலும் பிடுங்கப்பட்டுள்ளன.



இன்றைய உலகில் சீனாவின் இடத்தையும் உலகத்தின் எதிர்காலத்தை மாற்றியமைப்பதில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பையும் பற்றி கைலே ஃபெர்ரனாவின் நூல் ஒரு பரந்து விரிந்த பார்வையைத் தருகிறது.

இந்நூல் "உலகிற்கு சீனா ஏன் தேவை" என்ற பெயரில் இந்த ஆண்டு தமிழில் வெளியாகியுள்ளது. இதனை வெளியிட்டவர்கள் சிந்தன் புக்ஸ். தமிழாக்கம் செய்தவர் க. மாதவ்.

ரோலண்ட் போயர் எழுதிய சீனப் பண்புகளுடன் கூடிய சோசலிசம்: வெளிநாட்டவர்களுக்கு ஒரு கையேடு *(Socialism with Chinese Charecteristics – A Guide for Foreigners by Roland Boer)* என்ற நூலில் இடம்பெறும் கீழ்வரும் தொகுப்புரையுடன் இந்த நூல் அறிமுகக் கட்டுரையை நிறைவு செய்யலாம்.

கடந்த 100 ஆண்டுகளின் வரலாறு மார்க்சியத்தினால் வழிகாட்டப்பட்ட தொழிலாளர் வர்க்கப் புரட்சிகளும் காலனிய எதிர்ப்பு தேச விடுதலைப் போராட்டங்களும் என்பதாகவே அமைந்துள்ளது. இன்றைய சீனா "ஏகாதிபத்திய எதிர்ப்பும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும்" என்ற பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

- ஆசியாவின் நோயாளியாக இருந்த சீனா, 1949 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் விடுதலை பெற்ற நாடாக மாறிய மகத்தான பாய்ச்சல்
- சீனாவை ஒரு வளமிக்க நாடாக மாற்றிய 1979 இல் தொடங்கிய சீர்திருத்தம்-திறந்து விடுதல் என்ற மகத்தான பாய்ச்சல்
- சீனாவை வலுவான நாடாக ஆக்கிவரும் 2010க்குப் பிந்தைய புதிய சகாப்தத்தின் மகத்தான பாய்ச்சல்

என்று தொகுத்துக் கூறும் ரோலண்ட் போயர் சீனா இன்னும் சிவப்பாகவே உள்ளது என்பதற்கான மார்க்சியக் கோட்பாட்டு அடிப்படைகளை தனது நூலில் வழங்குகிறார். அந்நூலைப் பற்றி அடுத்த ஒரு நூல் அறிமுகத்தில் பார்க்கலாம்.

●

கட்டுரையாளர்: மார்க்சிய செயல்பாட்டாளர், மொழிபெயர்ப்பாளர்.

வடுக்கள் படைப்புகளாய்...

அ. மங்கை



அருந்ததி ராய் – மதர் மேரி கம்ஸ் டு மி
(Mother Mary Comes to Me)
பெங்குவின் பதிப்பகம், 2025. ப: 374.

கடந்த மாதம் முழுதும் இலக்கிய உலகில் பெரும் பேச்சாகக் கிளப்பிய அருந்ததி ராயின் வாழ்வை எழுதும் *(Life Writing)* நூல் மதர் மேரி. தன் வரலாறு, வாழ்க்கை வரலாறு, நினைவுக் குறிப்பு, போராட்ட வரலாறு, படைப்பு மனநிலை / இயங்குதளம் குறித்த உள்ளார்ந்த பகிர்தல் எனப் பல புள்ளிகளில் ஊடாடும் இந்த நூல் அருந்ததி ராயின் உள்ளூரத்திற்கு இன்னுமொரு கட்டியம். விரைவில் இந்த நூல் தமிழில் நல்லமுறையில் மொழியாக்கம் செய்யப்பட்டு வரும் என நம்புகிறேன். அவரவர் வாசிப்புக்கு குந்தகம் ஏற்படுத்தாமல், ஒரு மெல்லிய சரடாக இந்த நூல் கிளர்த்திய உணர்வுகள், எழுச்சி, பரவசம் ஆகியவற்றைக் கொண்டாட விரும்புகிறேன்.

2022 இல் தனது அம்மா மேரி ராயை இழந்த அருந்ததியின் துக்கத்திற்கு முகம் கொடுக்கும் குளிர்த்தியாக இந்த நூல் திகழ்கிறது. தாய்மை பற்றிய மிதமிஞ்சிய கற்பனைகள் புழங்கும் நமது சமூகத்தில் ‘புகலிடமாகவும் புயலாகவும்’ தனது வாழ்வில் இருந்த மேரி ராய் பற்றி மகளாக அருந்ததி பதிவு செய்கிறார். இரு குழந்தைகளைத் தனித்து வளர்த்து, கேரளாவின் சிரியன் கிறித்துவ சமூகப் பெண்களுக்கு குடும்பச் சொத்தில் சமபங்கு பெறுவதற்கான சட்டப் போராட்டத்தில் வென்று, கோட்டயத்தில்

பள்ளிக்கூடம் என்ற பெயரில் உருவாக்கிய நிறுவனம், அதனை நிர்மாணிப்பதில் லாரி பேக்கரின் கட்டிடக் கலையைப் பயன்படுத்தியது, அக்காலத்தில் விதிவிலக்காக இருந்த தணிக்கைக்கு முகம் கொடுத்து 'ஜீசஸ் க்ரைஸ்ட் சூப்பர்ஸ்டார்' மாணவர் நாடகம் தடை செய்யப்பட்ட ஆணையை பள்ளியில் படமாக மாட்டி வைத்தது... எனத் தனது இருப்பை விசுவரூபமாக வாழ்ந்துகாட்டிய மேரி ராய் ஒரு புறம்; மண முறிவு, வறுமை, ஆஸ்த்மா நோய், ஆதரவு இன்மை, தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான வீம்பு ஆகிய அனைத்தையும் கொட்டும் இடமாகத் தன் குழந்தைகளை நடத்திய தாய் மறுபுறம். அம்மாவை விட்டு, படிப்பைக் காரணமாக்கி டெல்லி சென்ற அருந்ததி 'அம்மாவின் மீது இருந்த அன்பை இழக்காமல் இருப்பதற்காகச்' சென்றதாகக் குறிப்பிடுகிறார்.

குழந்தைப்பருவ உளவியல் வாழ்நாள் முழுதும் எடுக்கும் பலப்பல அவதாரங்கள் பற்றிய புரிதல் பெருகி வரும் இக்காலத்தில் அருந்ததி பகிரும் உணர்வுகள் முரணாகத் தோன்றினாலும், ஏற்க முடிகிறது. ஆனால், 70 களில் அத்தகு புரிதல் வெகு குறைவு. அந்த வகையில் இந்த நூல் மன நலம் குறித்த ஆழமான, சிக்கலான பகுதிகளுக்கு இடம் அளித்திருக்கிறது.

தாய்மை போலவே புனைவுகள் களையப்படும் பல அனுபவங்கள் இந்த நூலில் உள்ளன. ஆண் – பெண் உறவு, கூட்டுப் படைப்பு முயற்சிகள், களச் செயல்பாட்டாளர் / அரசியல் விமரிசகர் / பத்திரிகையாளர் ஆகிய தளங்களில் இருக்கும் ஊகங்கள், படைப்புருவாக்கம் பற்றிய கற்பிதங்கள் ஆகியவை இந்த நூலில் முகத்தில் அடிக்கும் உண்மையின் வெக்கையோடு வெளிப்படுகின்றன. ஆண் – பெண் உறவில் காலம் காலமாக தொழிற்படும் வன்முறை, பெண்வாழ்வில் அது உருவாக்கும் சிதிலம், ஆணுக்குள்ளும் இயங்கும் நொய்ம்மை, கலைந்த கதாநாயகத்தனங்கள், தனி வாழ்வில் வர்க்க முரண்கள் ஆகியவை மீண்டும் மீண்டும் பேசினாலும் தீராத சிக்கல். காதல், காமம், வேண்டாத கருக்கலைப்பு, விவாகரத்து என நீளும் அன்றாட நடைமுறைகள் கேலியும் கிண்டலும், மனம் முழுதும் வியாபிக்கும் ஏமாற்றம், கோபம் ஆகியவற்றை நக்கலாகச் சாடும் தொனி நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

அருந்ததியின் தொடக்க கால திரைக்கதைகள், நடிப்பு, திரைப்படத் தயாரிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் புனைகதை படைப்பு உருவானதைப் பற்றிய விவரணைகள் படைப்பாளிகள் – குறிப்பாக ஆண் படைப்பாளிகளின் – பேட்டிகளில் கொடுக்கும் மமதைப் பேச்சுகளுக்கு மாறானது. அவரது இரு புதினங்களையும் வாசித்தவர்களுக்கு, இந்த நூல் பல புதிய திறப்புகளைக் கட்டாயம் தரும். உள்ளுக்குள் குடைந்து கொண்டிருக்கும் பிம்பங்களும், உணர்வுகளும் சொற்களாக வரும்முன் ஏற்படுத்தும் அவஸ்தைகள், அதற்கு எடுக்கும் காலம் என படைப்பின் அடிநாதமான உழைப்பையும் உளைச்சல்களையும் இந்த நூல் வெளிப்படுத்துகிறது.

நர்மதா அணைக்கட்டுக்கு எதிரான இயக்கம், காஷ்மீர் போராட்டம், நக்சலைட் இயக்கம், நாளும் இறுகிக் கொண்டு வரும் இந்துத்துவத்தின் பிடி ஆகியவை பற்றிய அருந்ததியின் எழுத்துக்கள் படைப்பாளி என்ற பீடத்தைத் தாண்டி எழுத்தை மக்களுக்கான குரலாக மாற்றும் கடமையை வலியுறுத்துபவை. இந்தப் பங்களிப்பில் தனது இடம் பற்றிய பல அய்யங்களும், கேள்விகளும், அக துருவல்களும் நமக்குக் கிடைக்கும் பெரும் கருத்தாடல். அரசியல்சார்ந்த எழுத்துக்களில் முடிந்த முடிபான உறுதியை வெளிப்படுத்தும் போது பல நேரங்களில் வீராவேசமான, தட்டையான கோஷங்கள்தான் வருகின்றன. ஆனால், முழக்கங்கள் கவித்துவமாக வர வேண்டும்; சுய பரிசீலனைகள் தாங்கி எழ வேண்டும் என்பதை சாய்பாபா போன்ற பல செயல்பாட்டாளர்கள் படும் பாட்டை அருந்ததி சொல்லும்போது புரிகின்றது. தனக்கு உள்ள சமூக வசதி வாய்ப்புகள் பற்றிய தெளிவு, பொறுப்புணர்வுடன் வெளிப்பட வேண்டும் எனப் புரிந்து நடப்பதில் எழும் பல கேள்விகளை இங்கு அவர் வெளிப்படையாகப் பகிர்வதைக் காண முடிகிறது.

தன் அம்மாவுக்கான நினைவிடத்தை எழுப்புவதில் அருந்ததி செலுத்தும் கவனம் அப்பழுக்கற்ற கவிதை. கிறித்துவர் அல்லாதவரை மணம் செய்து கொண்டதால் மயானத்தில் அனுமதி கிடைக்காத நிலையில் (அதே போல் மணம் புரிந்த மேரி ராயின் சகோதரருக்கு இந்த விதி பாதிக்கவில்லை), பள்ளி எழுந்த மொட்டைக் குன்றில் மூங்கில் புதருக்கு மத்தியில் மேரி ராயின் சாம்பலின் ஒரு பகுதி புதைக்கப்பட்டு அவரது விருப்பத்துக்கு உரிய உயிரினங்கள், பூக்கள் இடம் பெறுமாறு நினைவிடம் அமைக்கப்படுகிறது.

மொத்தத்தில், ஹீரோயிசம் இல்லாத அருந்ததி ராயின் எழுத்து நம் ஒவ்வொருவரையும் நமது புண்கள், வடுக்கள், தழும்புகள் ஆகியவற்றை நமதென உண்மையாக ஏற்க வைக்கிறது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர், ஓய்வு பெற்ற பேராசிரியர்.



எஸ். ஜெயசீல ஸ்டீபன்

நிலப்படங்கள் மற்றும் வரைபடங்கள் வழியாக தமிழ்நாட்டின் காலனிய வரலாற்றைக் கண்டறிதல்

இடங்களையும் திசைகளையும் அறிந்துகொள்ள ஐரோப்பியக் கடற்பயணிகள் நிலப்படங்களையும் வரைபடங்களையும் தயாரித்தனர். ஆனால், இதுநாள் வரையில் அவை பயன்படுத்தப்படாமல் இருந்தன. சமீபத்தில், கோட்டைகள், ஆயுதக்கிடங்குகள், தானியக்கிடங்குகள், நாணயச்சாலைகள், கருவூலங்கள் முதலியவற்றின் 1,862 நிலப்படங்கள் 'தமிழ்நாடு மின்னணுக்காப்பகத்தில்' பதிவேற்றப்பட்டுள்ளன. இவை 'தமிழ்நாடு மாநில ஆவணக்காப்பகத்தில்' இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. இவை ஆராய்ச்சியாளர்களுக்கு விலைமதிப்பில்லாத ஆதாரங்களாக அமைகின்றன.

போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள் முதலியோர் தமிழ்நாட்டுக் கடற்கரைக்கு வந்தது குறித்தும் நிலப்படவியலின் வரலாறு குறித்தும் வரம்புக்குட்பட்ட அளவு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஐரோப்பியக் குடியிருப்புகளின் வெள்ளையர் நகரத்தில் கோட்டைகளும் கட்டிடங்களும் எழுப்பப்பட்டன. வெள்ளையர் நகரம், கருப்பர் நகரத்தில் இருந்து தெளிவாகக் குறிக்கப்பட்ட எல்லைகளால் பிரிக்கப்பட்டிருந்தது. ஐரோப்பியர்கள் கடல்கடந்து வணிகத்தை விரிவாக்கியது, கடற்கரையோர வரைபடங்களையும் நிலப்படங்களையும் தயாரிப்பதற்கு வழிவகுத்தது.

நிலப்படம் என்பது, குறிப்பிட்டஅளவு விகிதத்தில் பல்வேறு வகை இட-வெளிகளை ஒரு காகிதத்தில் வரைந்து காட்டுவதாகும். தமிழ்நாட்டுக் கடற்கரைகளில் ஐரோப்பிய வணிகம் விரிவடைந்த காலத்தில் நிலப்படத் தயாரிப்பு தொடங்கியது. தமிழ் நிலப்பரப்பின் ஒரு பெரிய மண்டலத்தை நிலப்படங்களில் ஐரோப்பியர்கள் வரைந்தனர். அவர்கள் கண்ணுண்ட நிலப்பரப்பின் ஊடாக, ஒரு நேர்கோட்டை வரைவதன் மூலம் அதைச் செய்தனர். தமது செயல்பாடுகளுக்கு முதன்மைவாய்ந்த தகவல்களைக் கொண்ட கடலோரத்தின் வரைபடங்களை அவர்கள் தயாரித்தனர். எனவே, அவை வணிகப் போட்டியிடும் நிறுவனங்களின் கையில் கிடைத்து விடக்கூடாது என்று அவர்கள் மிகவும் அக்கறை கொண்டிருந்தனர். இந்த வரைபடங்கள் தண்ணீரின் ஆழத்தையும், அலையேற்றம் அல்லது அலையிறக்கத்தின் போது மறைந்திருக்கும் அபாயங்களையும் குறித்துக்காட்டின.

கட்டங்களும் பாணிகளும்

தமிழ்க் கடலோரம் பற்றிய முதன்மைப் புவியியல் அறிவைப் பெறுவதற்கான ஒரு மேம்படுத்தப்பட்ட முறையை ஐரோப்பியர்கள் உருவாக்கினார்கள். எண்ணற்ற நிலப்படங்களைத் தயாரிப்பதிலும் பதிப்பிப்பதிலும் அவர்கள் குறிப்பிடத்தக்க பாத்திரம் வகித்தார்கள். நிலப்படங்களை தயாரிப்பதன் பல்வேறு கட்டங்களையும் பாணிகளையும் நாம் ஆய்வு செய்யவேண்டும். தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், புவியியலை ஆய்வு செய்யும் வழிகள் இவற்றையும் ஆராயவேண்டும்.

போர்ச்சுகீசியர்களின் காலனியாக்கத்துக்கு இணையாக கடற்பயணிகள் முதலில் தயாரித்த நிலப்படங்கள், காலநிலையைப் பொறுத்து பாதுகாப்பாக கடலில் பயணிப்பதற்கான மாற்றுவழிகளை விளக்குபவையாக இருந்தன. அவர்கள் முதன்மையாக வெளியையும் திசையையும் பதிவு செய்வதற்காக நிலப்படங்களைத் தயாரித்தனர். ஐரோப்பாவில் உள்ள வாசகர்கள் தமிழ் மண்டலத்தைப் பற்றியும் கிறித்துவ மிஷன்களைப் பற்றியும் அறிந்துகொண்டார்கள். நிலப்படங்களைப் பயன்படுத்தி மிஷனரிகள் தாம் போகவேண்டிய இடத்தைச் சென்றடைய முடிந்தது. இந்தச் செயல்பாட்டின் ஊடாக, தமிழ்க் கடற்கரைக்கும் அட்லாண்டிக் மண்டலத்துக்கும் இடையே புவியியல் அறிவைக் கடத்துவதும் பரிவர்த்தனை செய்வதும் வளர்ச்சியடைந்தது. இது வளர்ச்சியடைந்த நிலப்படவியல் முறைக்கு வழிவகுத்தது. படத்தின் மூலமான இந்த வெளிப்பாடு, வணிக உலகின் பொருட்கள், கருத்து நிலைகள், நிகழ்முறைகள் முதலியவற்றைப் புரிந்துகொள்வதற்கு வழி செய்தது. இவை கணிதவியல் கட்டமைப்புகளுக்கு இட்டுச்சென்றன. இறுதியில், நவீன உலகின் ‘அளவுவிகித’ நிலப்படங்களில் முடிந்தன.

போர்ச்சுக்கீசியக் காலனி தேவனாம்பட்டினம் நிலப்படம் (1607), நாகப்பட்டினம் நிலப்படங்கள் (1635-58), மைலாப்பூரின் சாந்தோம் நிலப்படங்கள் (1635-87), சாந்தோமின் நிலவரைபடம் முதலியவை போர்ச்சுகலில் உள்ள லிஸ்பன் நகரில் அமைந்துள்ள "வரலாறு மற்றும் பண்டைய நிலப்படவியல் மையத்தில்" உள்ளன.

1734ஆம் ஆண்டில் தரங்கம்பாடியின் லூத்தரன் மிஷனரியாக இருந்த கிறிஸ்டோப் தியோடோசியஸ் வால்தர், தமிழ்நாட்டில் உள்ள இடங்களின் நிலநேர்க்கோட்டையும் (அட்சரேகையையும்) நிலநிரைக்கோட்டையும் (தீர்க்கரேகையையும்) வரையறுப்பதில் ஈடுபட்டார். டென்மார்க்கிலும் ஜெர்மனியிலும் (1729-45) நிலப்பட உருவாக்கத்துக்கான பல புவியியல் தகவல்களை அவர் வழங்கினார். பழவேற்காடு, நாகப்பட்டினம், சதுரங்கப்பட்டினம், பறங்கிப்பேட்டை, புன்னைக்காயல் முதலிய டச்சு வணிகத் தொழிற்சாலைகளின் நிலப்படங்களும் திட்டங்களும் நெதர்லாந்தில் உள்ள தி ஹேக் நகரின் "தேசிய ஆவணக்காப்பகத்தில்" "வெளிநாட்டு நிலப்படங்களின் தொகுப்பில்" உள்ளன.

பிரெஞ்சுத் தொகுப்பு

புதுச்சேரியின் (1701-1789) நிலப்படங்களும் தளவரைபடங்களும் பிரான்சில் உள்ள "எக்ஸ்-ஆன்-புரோவான்சின் வெளிநாட்டு ஆவணக்காப்பக மையத்தில்" பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. 1746க்கும் 1761க்கும் இடையில் அதிகாரத்துக்காக நடந்த கர்நாடகப் போர்களும் அதிகாரத்துக்கான ஆங்கிலேயர்-பிரெஞ்சுப் போராட்டங்களும், இடங்கள், முற்றுகைகள், படைமோதல்கள், போர்கள் முதலியவற்றின் நிலப்படங்களைத் தயாரிப்பதற்கு பிரெஞ்சுப் புவியியல் பொறியாளர்களை இட்டுச்சென்றன. புதுச்சேரி, காரைக்கால் மற்றும் தமிழ்நாட்டின் பல இடங்கள் பற்றிய நிலப்படங்களும் தளவரைபடங்களும் பிரெஞ்சுத் தொகுப்பில் உள்ளன. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இவை எக்ஸ்-ஆன்-புரோவான்சில் பாதுகாக்கப்படுகின்றன. சில தளவரைபடங்களும் நிலப்படங்களும் புதுச்சேரியில் உள்ள "இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின்" மண்டல அலுவலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

மதராசில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வரைபடக்கலைஞர்களையும் நிலப்படக்கலைஞர்களையும் வேலைக்கு அமர்த்தியிருந்தது. அவர்கள் 1745-81ஆம் காலப்பகுதியில் கர்நாடக மண்டலத்தில் மதராஸ், படைமோதல்கள், போர்கள், இராணுவ நிலப்படங்கள் முதலியவற்றின் தளவரைபடங்களை வரைந்தனர். தமிழ்நாட்டில் பிரித்தானியர்கள் மேற்கொண்ட நிலவருவாய் அளவீடுகள் (1767-1857) முறையான நிலப்படத்துக்கு இட்டுச்சென்றன. தமிழ்க் கடற்கரைப் பகுதியின் பல்வேறு வரைபடங்கள், கோணங்கள், தளவரைபடங்கள், கோட்டோவியங்கள் 1798க்கும் 1802க்கும் இடையே தயாரிக்கப்பட்டன. இவை போர்ட்ஸ்மௌத்தில் உள்ள "முடியரசின் கடற்பிரிவு அருங்காட்சியகத்தில்" அலெக்சாண்டர் டால்ரிம்பிளின் சேகரிப்பில் காணப்படுகின்றன.

சென்னையில் உள்ள "தமிழ்நாடு மாநில ஆவணக்காப்பகத்தில்" உள்ள நிலப்படங்கள் மற்றும் தளவரைபடங்களின் சேகரிப்பு மிக முதன்மையானது. ஏனெனில், அவை பயன்படுத்தப்படாமலும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவையாகவும் இருக்கின்றன. அவற்றை மின்னணுமயமாக்கியது ஆவணக்காப்பகப் பதிவுகளை பாதுகாக்கும் முயற்சியில் ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்குகிறது. சமீபத்தில் கோட்டைகள், ஆயுதக்கிடங்குகள், தானியக்கிடங்குகள், நாணயச்சாலைகள், கருவூலங்கள் முதலியவற்றின் 1,862 நிலப்படங்கள் தமிழ் மின்னணு நூலகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. காலனிய காலத்தை ஆய்வுசெய்யும் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் எதிர்கால அகழ்வாராய்ச்சிகளுக்கும் இந்த நிலப்படங்கள் விலைமதிப்பற்ற ஆதாரங்களாக இருக்கும்.

மாறிக்கொண்டிருக்கும் நிலை

காலனிய வரலாறு பற்றிய ஆய்வு தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கிறது. இராணுவ மற்றும் ஆட்சிப்பகுதி விரிவாக்கம், வரிவசூல், அறிவியல், தொழில்நுட்பம், மிஷனரி விரிவாக்கம் முதலிய புதிய ஆய்வுப் புலங்கள் எழுகின்றன. கிழக்கிந்தியக் கம்பெனிகளின் கடல்வழி வணிகமும் வர்த்தகமும், தாக்கம் செலுத்திய மனிதவாழ்வின் புலங்கள், அவற்றை வழிநடத்துகின்றன. நிலப்படங்களையும் வரைபடங்களையும் பயன்படுத்தி, காலனியம் தனக்கேயுரிய பாத்திரத்தை எவ்வாறு ஆற்றியது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். காலனிய வரலாறு பற்றிய புதிய கண்ணோட்டங்கள், வருங்காலத்தில் தொடர்ந்து ஆழ்ந்த கவனத்தைப் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழில்: மா சிவகுமார்

நன்றி: தி ஹிந்து, ஆங்கில நாளிதழ்

●

கட்டுரையாளர்: தொல்லியல் ஆய்வாளர், எழுத்தாளர்

திருத்தம்

கடந்த செப்டம்பர் மாத உங்கள் நூலகம்
இதழில் வெளியான வீ. அரசு அவர்களின்
கட்டுரைத் தலைப்பு **"அண்ணல் அம்பேத்கர்
மக்கள் பதிப்பில் சாதியம் இந்து மதம் காந்தியம்
தொகுதிகளுக்கான அறிமுகக் கட்டுரை"**
என்று தவறுதலாக இடம் பெற்றுள்ளது.
அதன் தலைப்பு
"பௌத்தம் குறித்த உரையாடல்கள்"
என்பதாகும்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

கலை இலக்கிய விருதுகள்

அன்பான படைப்பாளிகளே,

வணக்கம்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் - நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்தும் 34-ஆவது கலை இலக்கிய விருதுகளுக்கான படைப்புகள் கீழ்க்கண்ட வகைமைகளில் வரவேற்கப்படுகின்றன:

1. **கட்டுரை நூல்கள்**
2. **சிறார் நூல்கள்**
3. **மொழிபெயர்ப்பு நூல்கள்**
4. **கவிதைத் தொகுப்புகள்**
5. **சிறுகதை நூல்கள்**
6. **நாவல்கள்**
7. **ஆய்வு நூல்கள்**
8. **மார்க்சிய நூல்கள்**
9. **அறிவியல் நூல்கள்**
10. **நாடகங்கள் (ஒளிப்பதிவு செய்யப்பட்டவை)**
11. **ஆவணப் படங்கள்**
12. **குறும்படங்கள்**

- *விருதுகளுக்குரிய நூல்கள் 2023-க்குப் பிறகு வெளிவந்தவையாக இருக்க வேண்டும். நூலின் இரண்டு படிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும்.*
- *நாடகங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள் ஆகியவை 2024 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.* **takaepe2022@gmail.com** *என்ற மின்னஞ்சல் வழி அவற்றை அனுப்ப வேண்டும்.*
- *தனி நுழைவுப் படிவம் இல்லை.*
- *படைப்பாளிகள் தம் முகவரி, தன்குறிப்பு, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, படைப்புகள் குறித்த சிறுகுறிப்பு ஆகியவற்றை நூல்கள், குறும்படங்கள், ஆவணப் படங்கள், நாடகங்கள் ஆகியவற்றுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.*
- *2020-க்குப் பிறகு த.க.இ.பெ. - என்.சி.பி.எச். விருது பெற்ற படைப்பாளிகள் கலந்துகொள்ள இயலாது.*
- *படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்:* **30–11–2025.**
- *அனுப்ப வேண்டிய முகவரி:*

மருத்துவர் த.அறம்
பொதுச் செயலாளர்
தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
தனுஷ்கோடி அரங்கம்
63, பழைய படந்தால் ரோடு,
சாத்தூர் – 626203
விருதுநகர் மாவட்டம்
பேச: 9443244633 *மின்னஞ்சல்:* takaepe2022@gmail.com

எஸ்.கே.கங்கா	**த. அறம்**	**நா.இராமச்சந்திரன்**
மாநிலத் தலைவர்	மாநிலப் பொதுச் செயலாளர்	ஒருங்கிணைப்பாளர்

நூல் மதிப்புரை

நூற்றாண்டாய் மறைக்கப்பட்ட விடுதலை வீரர்

ச.கிருஷ்ணசாமி சர்மா



'கரூர் சதி வழக்கு கிருஷ்ண சுவாமி சர்மா'
நூலாசிரியர் – முத்துக்குமார்
வெளியீடு- சந்தியா பதிப்பகம் 94447 15315
பக்கங்கள் 160. | விலை ₹ 190

காஞ்சிஅமுதன்

சாதாரணமாக அரசியல் என்றால்..., பணம், பதவி, பகட்டு அதிகாரம் என்று உள்ள நிலையில் விடுதலைப்போராட்ட காலத்தில் அர்ப்பணிப்பு மிக்க ஓர் அரசியல் வாழ்வு மேற்கொண்டு நூற்றாண்டுகளுக்கு முன் மறைந்த விடுதலைப்போராட்ட வீரர் காஞ்சிபுரம் ச. கிருஷ்ணசாமி சர்மா குறித்து தோழர் ச.முத்துக்குமார் அவர்கள் எழுதி சந்தியா பதிப்பகம் வெளியிட்டுள்ள 'கரூர் சதி வழக்கு கிருஷ்ண சுவாமி சர்மா' எனும் நூல் கிருஷ்ணசாமி மறைந்த நூற்றாண்டில் (23-06-2025) காலம் காட்டும் வரலாறாக வெளிவந்துள்ளது. இன்றுவரை விரிவாக யாரும் அறிந்திராத நூற்றாண்டு ஆவணங்களைக் கண்டறிந்து கிருஷ்ணசாமி 1908 ஆம் ஆண்டு கரூர் சதி வழக்கில் கைதான வரலாற்றை தமிழ் மக்கள் அறியும்படி எளிய நடையில் நூலாக்கி உள்ளார் ஆய்வாளர் ச. முத்துக்குமார் அவர்கள். இந்நூல் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய ஓர் வரலாற்றுப் பதிவாகும்.

1986 ஆம் ஆண்டு, கிருஷ்ணசாமி பிறந்த நூற்றாண்டில் (22-03-1887) வரலாற்றாய்வாளர்

தனது கணவர் கிருஷ்ணசாமி காலமானபோது எவரின் துணையுமின்றி - இளம் சிறுவன் தோழர் கே.எஸ். பார்த்தசாரதி துணையுடன் மாட்டு வண்டியில் தனது கணவரின் உடலை எடுத்துச்சென்று வேகவதி ஆற்றங்கரையில் பட்டம்மாளே இறுதிச் சடங்குகள் செய்த நிகழ்வு காலத்தின் பெருந்துயரப் பதிவாகும்.

மறைந்த பெ.சு.மணி அவர்கள் "காரல் மார்க்சின் இலக்கிய இதயம்" என்ற நூலில் தேசிய மாவீரன் கிருஷ்ணசாமி சர்மா எனத் தலைப்பிட்டு முதன்முதலாகக் களஆய்வின் வழி எழுதியபின் 1987 ஆம் ஆண்டு திருநெல்வேலி எழுச்சி குறித்து எழுதிய ஆ.இரா. வேங்கடாசலபதி கிருஷ்ணசாமி பற்றி குறிப்பிட்டுள்ள நிலையில், கிருஷ்ணசாமி சர்மா பற்றி விரிவானதொரு நூலாக கரூர் சதி வழக்கு நூல் 2024 இல்தான் வெளிவந்திருப்பது தமிழர்களின் அரசியல் வரலாற்று விழிப்பு உணர்ச்சியின் போதாமையை வெளிக்காட்டுவதாக உள்ளது.

கிருஷ்ணசாமி சர்மா பற்றி அறிந்துகொள்ள வரலாற்றின் பக்கங்களில் பெருந்தமிழர் வ.உசி, தோழர் ம.சிங்காரவேலர், தமிழ்த்தென்றல் திரு.வி.க. ஆகியோரின் வரலாற்றில் ஓரிரு வரிகளில் குறிப்பிடுபவராக மட்டுமே இருக்கிறார். அவரைப்பற்றி அறிந்திராத இயக்கத்தலைவர்கள் -எழுத்தாளர்கள் மத்தியில் வரலாற்றில் மறைக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர் கிருஷ்ணசாமி பற்றி- அவர் 1908 ஆம் ஆண்டில் கரூரில் பேசிய பேச்சுக்களுக்காக கைது செய்யப்பட்ட வரலாற்றை 117 ஆண்டுகளுக்குப் பின் ஆவணங்களைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் ஆய்வாளர் ச.முத்துக்குமார் அவர்கள் 'கரூர் சதி வழக்கு கிருஷ்ண சுவாமி சர்மா' எனும் நூலை நேர்த்தியாக எழுதி உள்ளார். இந்நூலில் உள்ள தகவல்களை அறிந்துகொள்ள ஒருவருக்குப் பல ஆண்டுகள் ஆகும் என்ற நிலையில் கடும் உழைப்பும் -அக்கறையும் கொண்டு 27 தலைப்புகளில் பல கருத்துக்களை இந்நூலில் வடித்துள்ளார்.

யார் அந்தக் கிருஷ்ணசாமி... ?

1908 ஆம் ஆண்டு சூன் 14 ஆம் நாள் ஆங்கிலேயரின் கோடைக்கால தலைமையகமான சிம்லாவில் இருந்த அதிகாரி எச்.ஏ. ஸ்டூவர்ட்க்கும் இந்தக் கேள்வி எழுந்ததாக இந்நூலைத் தொடங்குகிறார் முத்துக்குமார். மயிலாப்பூர் கிருஷ்ணசாமி சர்மா, வந்தேமாதரம் கிருஷ்ணசாமி சர்மா, காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா, கிருஷ்ணா அய்யர் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்ட கிருஷ்ணசாமி சர்மா பற்றியும் அவர்மீது தொடுக்கப்பட்ட வழக்கு மற்றும் காவல்துறை, நீதித்துறை ஆகியவற்றின் அன்றைய செயல்பாடுகள் பற்றியும் இந்நூலில் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

காஞ்சிபுரம் பெருந்தேவி அம்மையாருக்கும் குடவாசல் சடகோபாச்சாரிக்கும் 1887ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தவர்தான் கிருஷ்ணசாமி சர்மா. வழக்குரைஞராக விளங்கிய தந்தை காங்கிரசு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். 1888 -அலகாபாத்தில் நடைபெற்ற காங்கிரசுக் கூட்டத்திலும் 1890 கல்கத்தாவில் நடைபெற்ற கல்கத்தா கூட்டத்திலும் பெற்றோருடன் குழந்தைப் பருவத்திலேயே கலந்து கொண்டவர் கிருஷ்ணசாமி சர்மா. தனது நான்கு வயதில் தந்தையை இழந்த நிலையில் தாய் பெருந்தேவி அம்மையாரால் கொள்கை வழி வளர்க்கப்பட்டவர் கிருஷ்ணசாமி சர்மா. 1903 ஆம் ஆண்டு டிசம்பர் 28,29,30 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் தொண்டராகப் பணியாற்றியவர். 1904ஆம் ஆண்டு பம்பாய் மாநாட்டிலும் பங்கேற்றவர் என்கிறார் பெ.சு.மணி.

"நமது சர்மா அவர்கள் ஏனைய தேசபக்தர்களைப் போன்று தனது வாழ்நாளில் வேறு ஒரு தொழிலிலிருந்து தேசசேவைக்கு குதித்தவரன்று" என்று பெரியார் குடியரசு ஏட்டிலே குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் போராட்ட

சொற்பொழிவாளர்களில் ஒருவராக கைச்செலவிற்கு மாதம் ரூபாய் இருபத்தைந்தும் மூன்றாம் வகுப்பு ரயில் கட்டணமும் வழங்கப்பட்டது. சாலை வழியாகப் பயணிக்கும்போது ஒரு மைல் தூரத்துக்கு இரண்டு அணா பெற்று முழுநேர அரசியல் பணியை கிருஷ்ணசாமி சர்மா இளம் வயதிலேயே மேற்கொண்டதை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார் முத்துக்குமார். இன்றைக்குப் பொதுவுடைமை இயக்கங்கள் மேற்கொள்ளும் செயல்பாட்டிற்கு முன்மாதிரியாக இது அமைந்துள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சென்னை மாகாணத்தில் தீவிர அரசியல் போராட்டக்காரர்கள் என்று 21 பேரைக் குறிப்பிட்டு காவல்துறை சுற்றறிக்கை (para 1148 of 1907) வெளியிடப்பட்டதையும், அப்பட்டியலில் ஆறாவது நபராக கிருஷ்ணசாமி இருந்ததையும், அவரின் சங்கேத எண் 301 என்பதையும், புலனாய்வுப்பிரிவும் - இரயில்வே போலிசும் ஒரே டி.ஐ.ஜி.யின் கீழ் இணைந்து புலனாய்வு மேற்கொண்டதையும் இந்நூலில் சுட்டிக்காட்டி உள்ளார்.

1905 இல் வங்காளப் பிரிவினையை ஒட்டி எழுந்த 'தேசிய எழுச்சியின்' வழி விபின் சந்திரபாலரின் பேச்சுக்களும் எழுத்தும் சமூகத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியதை இந்நூலில் விளக்கி உள்ளார்... பெருந்தமிழர் வ.உ.சி, சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயர், கிருஷ்ணசாமி சர்மா ஆகியோர் அவ்வெழுச்சிக் காலத்தில் ஆங்கிலேய அரசால் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு 124 ஏ பிரிவின் கீழ் ஒடுக்கப்பட்ட வரலாற்றை நம்முன் வைக்கிறார்.

வ.உ.சி 1908 ஆம் ஆண்டு பிப்ரவரி 23,26 மார்ச் 2,3 தேதிகளில் பிரிட்டிஷ் மக்களுக்கும் மன்னருக்கும் எதிராகப் பேசியதற்காக தேசத் துரோக வழக்குத் தொடுக்கப்பட்டு மார்ச் 12 இல் கைது செய்யப்பட்டதைப் போன்று, ஐரோப்பியர்களைத் தாக்கும்படி உள்ளூர் பொதுமக்களையும் சிப்பாய்களையும் தூண்டிவிட்ட குற்றங்களுக்காக 124 ஏ, 153 ஏ, 505 ஆகிய இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவுகளின் கீழ் கிருஷ்ணசாமி சர்மா மீது 1908ஆம் ஆண்டு கரூரில் மார்ச் 16-17 தேதிகளில் பேசியதற்காக வாழ்நாள் தண்டனை முதல் மூன்றாண்டு தண்டனை விதிக்கும் வகையில் வழக்கு தொடுக்கப்பட்டது.

மார்ச் மாதம் 17 ஆம் நாள் குறிப்பெடுத்த காவலர் குப்புசாமி குறித்து இந்நூலில் முத்துக்குமார் கொடுத்துள்ள தகவல்கள் அனைவரும் படித்தறிய வேண்டிய ஒன்றாகும்.

1908 மார்ச் மாதம் 17 ஆம் தேதி கரூரில் பேசியதற்காக சூன் மாதம் 12 ஆம் நாள் சென்னையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட கிருஷ்ணசாமி அவர்களுக்கு கோவை மாவட்ட நீதிபதி ப்ராட்புட் (R.D. Broadfoot) செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் ஐந்தாண்டு நாடு கடத்தல் தண்டனை வழங்கினார். தமிழ்நாட்டின் கோவை, ஆந்திராவின் பெல்லாரி, கேரளத்தின் கண்ணனூர் என அன்றைய சென்னை மாகாணத்தின் சிறைகளில் தன் சிறைவாழ்வை பல இன்னலுக்கு இடையே கழித்தார்.

கிருஷ்ணசாமி சர்மாவின் சிறை அனுபவங்களைப் பற்றி THE NATIONAL MOVEMENT IN TAMIL NADU, 1905-1914 AGITATIONAL POLITICS AND STATE COERCION என்னும் நூலில் வரலாற்றாய்வாளர் N.ராஜேந்திரன் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

'கைதி அமர்ந்திருக்கும்போது பாடுகிறார் அல்லது உரத்த குரலில் பேசுகிறார். ஒரு வாக்கியத்தின் நடுவில் அவரது கருத்துக்கள் பொருத்தமற்றவை. அவர் நிறுத்துகிறார், அடடா பட்லர், அடடா முட்டாள்தனம் போன்ற வெளிப்பாடுகளை மீண்டும் கூறுகிறார். அவர் தனது ஆடைகளைக் கிழிக்கிறார். அவர் எந்த ஆடைகளையும் அணிய மறுக்கிறார், மேலும் தனது லாங்கோட்டியைக் கூட கழற்றியுள்ளார். அவர் தனது பழக்கவழக்கங்களில் அழுக்காக இருக்கிறார், அவர் தனது அறையின் தரையில் சிறுநீர் கழிக்கிறார், ஒரு சந்தர்ப்பத்தில் அவர் தனது தலைமுடியிலும் உடலிலும் மலத்தைத் தேய்த்துக் கொண்டார்.

பைத்தியக்காரத்தனத்தின் அறிகுறிகள் தெளிவாகத் தெரிந்தாலும், சிறைச்சாலைகளின் உதாரணம் சர்மாவின் மனநிலை பெரும்பாலும் அல்லது முழுமையாக மெட்ராஸுக்குச் சென்று ஜனவரி 1910 இல் சிறையிலிருந்து வெளியே வருவதற்காக போலியான செயல் என்று சிறை அதிகாரியால் வாதிடப்பட்டது. இருப்பினும், சர்மா ஒரு பைத்தியக்கார விடுதிக்கு மாற்றப்பட்டார்.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு, அவர் மீண்டும் சிறைத் தண்டனையை அனுபவிக்கத் தகுதியானவர் என்று கண்டறியப்பட்டு, கண்ணூர் மத்திய சிறைக்கு அனுப்பப்பட்டார். அவரது இளம் மனைவி பட்டம்மாள் மற்றும் அவரது தாயார் பெருந்தேவி அம்மாள் ஆகியோரின் கருணை மனுக்கள் இருந்தபோதிலும், சர்மா தனது முழு சிறைவாசத்தையும் அனுபவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.'

விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட கிருஷ்ணசாமி சர்மா 1905 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட நிலையில், மூன்று நான்கு ஆண்டுகளில் விடுதலை கிடைத்துவிடும் என்ற கருத்து அப்போது தலைவர்களிடம் இருந்த நிலையில்... பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டதாக பெ.சு மணி குறிப்பிடுகிறார். கிருஷ்ணசாமி சர்மா அவர்களின் இளம் மனைவி அனுபவித்த துன்பங்கள், மனப்போராட்டங்கள் மட்டுமல்லாமல் தனது கணவர் கிருஷ்ணசாமி காலமானபோது எவரின் துணையுமின்றி - இளம் சிறுவன் தோழர் கே.எஸ். பார்த்தசாரதி துணையுடன் மாட்டு வண்டியில் தனது கணவரின் உடலை எடுத்துச்சென்று வேகவதி ஆற்றங்கரையில் பட்டம்மாளே இறுதிச் சடங்குகள் செய்த நிகழ்வு காலத்தின் பெருந்துயரப் பதிவாகும். பட்டம்மாளின் பெயர் வரலாற்றில் அறியப்படாத நிலையில் வ.உ.சி ஆய்வாளர் ரெங்கையா முருகன் வழி மேற்படி நூல் வழி இப்போதுதான் அதிகார பூர்வமாக அறிந்தோம். வரும் பதிப்புகளில் பட்டம்மாள் பற்றிய பதிவை இந்நூலில் விரிவாகச் செய்ய வேண்டும் என முத்துக்குமார் அவர்களிடம் கோருகிறேன்.

1908 இல் முதல் சிறைவாசத்தில் சிறையில் மன உளைச்சலுக்கு ஆளான கிருஷ்ணசாமி சர்மா 1922 இல் கடலூர்-வேலூர் சிறைகளில் பல நூல்கள் எழுதியதை இந்நூலில் ஆவணங்களின் வழி எடுத்தாண்டிருப்பது விடுதலைப் போராட்டத்தில் கிருஷ்ணசாமி சர்மாவின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பை நாம் அறிய உதவுகிறது. உலகத்தலைவர்கள் தொடங்கி உள்ளூர் தலைவர்கள் மற்றும் இந்திய மாதர்களின் நிலை, இந்தியாவில் கல்வி, மாமன்னன் இராசராசசோழன் மற்றும் புத்தர் சாதகக் கதைகள் என 22 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி உள்ளார். அந்நூல்களைக் கண்டறிந்து வெளியிட முயல வேண்டுமெனக் கோருகிறேன்.

இந்நூலில் 'இந்தியா இழந்த தனம்' பற்றி முத்துக்குமார் குறிப்பிட்டுள்ள தகவல்கள் மிகவும் வியப்பைத் தருகிறது. தகவல் பரிமாற்றம் குறைந்த அந்நாளில் அரசின் பொருளாதாரப் புள்ளி விவரங்களைத் திரட்டி கிருஷ்ணசாமி சர்மா தந்துள்ளது அவரின் விரிந்த சமூகவியல் அறிவை வெளிப்படுத்துவதாக உள்ளது. அவர் வழியில் இன்று தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவைவரி மற்றும் பல்துறை வரிமூலம் சுரண்டப்படும் பொருளாதார சுரண்டலைப்பற்றி எழுத எவரும் இல்லையே எனும் ஏக்கம் உண்டாகிறது.

வாழ்ந்த காலத்தில் வ.உ.சி -பாரதி ஆகியோர் உரிய அளவில் போற்றப்படாத நிலை இருந்தது என மூத்த தோழர் ஜீவா எழுதி உள்ள கருத்தை பேராசிரியர் வீ.அரசு தொகுத்த வ.உ.சி நூலில் எடுத்தாண்டு உள்ளார்... காந்தி தொகுப்பு மற்றும் பட்டாபி சீதாராமன் தொகுத்த காங்கிரசு வரலாற்றில் வ.உ.சி பற்றி குறிப்பிடப்படவில்லை...1947 ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரசு விடுதலைப் போராட்ட மலரில் வ.உ.சி.யின் ஈகம் குறிப்பிடப்படவில்லை என ம.பொ.சி எழுதி வருந்தி உள்ளார். இந்நிலையில் கிருஷ்ணசாமி பற்றி யாரும் எழுதவில்லையே என்பது வியப்பானதாக இல்லை.

வ.உ.சி. ஜஸ்டிஸ் கட்சியின் ஆள் என புறக்கணிக்கப்பட்ட நிலையில், காந்தியால் "முற்றிலும் நாட்டின் தொண்டிற்காகவே தம்மை அர்ப்பணிக்க விரும்புகிறார்" என குறிப்பிடப்பட்ட கிருஷ்ணசாமி சர்மா புறக்கணிக்கப்பட்டார் என்பதும் இங்கே கவனிக்கத்தக்கதாகும். கிருஷ்ணசாமி சர்மா ஆங்கிலேய அரசால் தொடர்ந்து கண்காணிக்கப்படும் தண்டனைக் குற்றவாளி என்பதும், காந்தியின் காங்கிரசு கோட்பாடுகளில் முரண்படுபவர் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். தமிழ்மொழியில் நூல்பல எழுதியவர்; சாதி - மத வேற்றுமைகளை எதிர்த்தவர் வ.வே.சு நடத்திய குருகுலத்தின் உணவு தீண்டாமையை எதிர்த்தவர் என்பதாலும்; ருக்மணி அருண்டேல் திருமணத்தை ஆதரித்தவர் என்பதாலும்; அன்றைய ஆதிக்க சக்திகளால் புறக்கணிக்கப்பட்டவராக கிருஷ்ணசாமி உள்ளார். அதன் உச்சமாக அவர் காலமானபோது அவரை அடக்கம் செய்யக்கூட சொந்த சாதியினரோ உறவினரோ கூட வராமல் போனதுவரை அது நீடித்திருக்கிறது என்பது பெருந்துயராகும்.

1905 ஆம் ஆண்டு ஏற்பட்ட விடுதலைப் போராட்ட எழுச்சியில் பங்கேற்று 1908 இல் சிறைசென்றவர்கள் திலகர், வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, அரவிந்தர், நீலகண்ட பிரம்மச்சாரி விடுதலைக்குப்பின் திலகர் காலமானார், வ.உ.சி நொடிந்து வறுமையுற்று வாழ்வதற்கே அல்லாடினார், காந்தி-அன்னி பெசன்ட் அரசியலை எதிர்த்தார், திருக்குறள், தொல்காப்பியம் உள்ளிட்ட தமிழ் நூல் பதிப்பில் ஆர்வம் காட்டினார். பெரியாரின் வகுப்புரிமை கருத்திற்குத் துணைநின்றார். சுப்பிரமணிய சிவா தொழு நோயுற்று பாரதமாதா கோயில் அமைப்பு பணிக்கு தன்னை உட்படுத்திக்கொண்டார். வங்காளத்து அரவிந்தர் புதுச்சேரியில் ஆசிரமம் அமைத்து சாமியார் ஆனார். ஆஷ் கொலை வழக்கில் ஈடுபட்ட நீலகண்ட பிரம்மச்சாரி பாலாறு உற்பத்தி ஆகும் நந்தி மலையில் ஆசிரமம் கண்டார். இந்நிலையில் கிருஷ்ணசாமி அரசியல் கூர்மை பெற்று மீண்டும் சிறைக்குச் சென்று நூல் பல எழுதியதுடன் இந்தியாவில் 1923 ஆம் ஆண்டு கொண்டாடிய முதல் மேநாள் கூட்டத்தில் தோழர் சிங்காரவேலருடன் பங்கேற்றார் என்பது அவரின் அரசியல் வளர்ச்சியைக் காட்டுகிறது.

அவர் காங்கிரசுக் கட்சியின் அடுத்த மாநாடு காஞ்சியில் நடத்தவேண்டுமென 1924 நவம்பர் 15,16 இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற மாநாட்டில் முன்மொழிந்தார். காஞ்சிபுரத்தில் 1925 ஆம் ஆண்டு நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் வகுப்புரிமை வலியுறுத்தி பெரியார் வெளியேறினார். 1925 இல் முதல் கம்யூனிஸ்ட் கட்சி, தோழர் ம.சிங்காரவேலர் தலைமையில் தொடங்கப்பட்டது... விடுதலைப்போராட்ட வீரரும் சாதி மத வேற்றுமை கடந்து பொருளாதார சமத்துவம் விரும்பும் ஒருவராகவும் விளங்கிய கிருஷ்ணசாமி காலமாகாமல் இருந்திருந்தால் அவரின் நிலை தமிழ்நாட்டின் அரசியலை வேறுவிதமாக மாற்றி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சென்னையில் நடைபெற்ற 1923 மே நாள் விழாவில் தலைமையுரை ஆற்றிய கிருஷ்ணசாமி சர்மா தனது தலைமை உரையில் தோழர் சிங்காரவேலர் வெளியிட்ட அறிக்கையைச் சுட்டிக்காட்டினார். கம்யூனிஸ்டுகளை, போல்ஷ்விக்கர்கள் என்று குறை கூறுவோரைக் குறிப்பிட்ட பொழுது உண்மையான கேள்வி சமூக மாற்றம் பற்றியது எனக் கூறினார். மதவேற்றுமைகள், சாதி வேற்றுமைகள் ஒழிக்கப்பட வேண்டும். இதில் பல தடைகள் எழலாம். ஆயினும் இதைப்பற்றி சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்றும் கிருஷ்ணசாமி சர்மா பேசினார். சிங்காரவேலர் வெளியிட்ட லேபர் கிசான்கட்சி அறிக்கையை இன்று நான் சொன்னேன் என்பதற்காக கையெழுத்திட்டுவிட்டு நாளை போலீசைக் கண்டதும் பயப்படக்கூடாது என்றும் சிங்காரவேலரின் இந்துஸ்தான் தொழிலாளர் விவசாயிகள் கட்சியின் கொள்கை, சமூக சுயராஜ்யத்தை இந்திய மக்களுக்காக நிறுவுதே ஆகும் என்றும் சர்வதேச உழைக்கும் வர்க்கத்தின் நாளான இன்றைய மே தினத்தில் சிங்காரவேலர் மிகுந்த முயற்சிகள் எடுத்து, இந்த இயக்கத்தை நிறுவி உள்ளார் என்றும் கிருஷ்ணசாமி சர்மா பாராட்டி உள்ளார்......என இந்நூலில் 134 ஆம் பக்கத்தில் முத்துக்குமார் குறிப்பிட்டுள்ளார். அவர் பேசிய இடத்தில்தான் இப்போது காமராசர் ஆட்சியின் போது உழைப்பாளர் சிலை அமைக்கப்பட்டுள்ளது வரலாற்றுப் பெருஞ்சிறப்பாகும்.

அன்றைய ஆட்சியாளர்களால் தேச விரோதிகள் என குற்றம் சாட்டப்பட்ட வ.உ.சி-கிருஷ்ணசாமி முன்வைத்த கருத்துகள் இன்றும் பொருத்தம் உடையதாக இருப்பதைக் காண வியப்பாக உள்ளது. வ.உ.சி மொழிவழி அமைவது தனிநாடு என மெய்யறத்தில் முன்வைத்தார். கிருஷ்ணசாமியும் தமிழில் அரசியல் நூல்கள்வழி மக்களுக்கு விழிப்பூட்டினார். சாதி-மத வேற்றுமைகள் கடந்த உழைக்கும் மக்களின் உரிமைக்கான குரல்களாக அவர்களின் குரல் இருந்ததோடு, தொழிலாளி வர்க்க விடுதலைக்கும் தான் முன்வைத்த கொள்கைகளுக்காக களத்தில் நின்றனர். இவர்களின் கருத்துகளை காலத்திற்கேற்ப வளர்த்தெடுக்க அமைப்புகள் இல்லாத நிலையில் அரசுப்பணியில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் நூற்றாண்டு ஆவணங்களைப் புரட்டி வரலாற்றில் மறைக்கப்பட்ட விடுதலைப்போராட்ட வீரர் கிருஷ்ணசாமி சர்மா 1908 ஆம் ஆண்டு கரூரில் கைதான வரலாற்றை 'கரூர் சதி வழக்கு கிருஷ்ண சுவாமி சர்மா' எனும் நூலைத் தெளிவான எழுத்து நடையில் நம்முன் தோழர் முத்துக்குமார் முன்வைத்துள்ளார். இந்நூலை தமிழ் மக்கள் கற்று-உணர்ந்து சமூக மாற்றத்திற்குத் துணை நிற்க வேண்டியது அவ் வீகியர்களுக்கு நாம் செய்யவேண்டிய சமூகக் கடமையாகும். நூற்றாண்டு நினைவு நாள் காணும் விடுதலைப்போராட்ட வீரர் கிருஷ்ணசாமி சர்மாவுக்கு செவ்வணக்கம்.... நூலை ஆக்கித் தந்த தோழர் முத்துக்குமாருக்கு வாழ்த்துகள்.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்

₹ 90/-

₹ 200/-

₹ 80/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடாக

மீள் புரிதல் நோக்கில் செவ்வியல் நூல்கள்

தமிழாய்வு வரலாற்றில் ஓர் அரிய முயற்சி

கூர்மையான, பல அடுக்குத் திட்டமிடலுடன்
பல முறை பலரால் மதிப்பீடு செய்யப்பெற்று
‘விழி’ - இணைய அமர்வில் விவாதித்து மேம்படுத்தப்பட்ட

64 அறிஞர்களின் ஆய்வுரைகள் 1300 பக்கங்களில்
12 தொகுதிகளாக விரைவில் வெளிவருகின்றன

எழுத்தாளர் எஸ்.கமலாவின் நினைவுத் தீ

முனைவர் ஏ.இராஜலட்சுமி

பெண் படைப்புகள் தமிழிலக்கியப் பரப்பில் தனித்துவமான இடத்தினைப் பெறக்கூடியவை. 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழிலக்கியப் பரப்பில் தங்களின் படைப்பாற்றலாலும், உணர்வு வெளிப்பாட்டு முறையினாலும், தங்களைச் சுற்றியுள்ள சமூகத்தினைப் பற்றிய புரிதலாலும் எழுத்துலகில் பெண் படைப்பாளர்கள் பலர் தங்கள் படைப்புகளைப் படைத்தனர். அத்தகைய பெண் படைப்பாளுமைகளில் தனக்கென தனித்த முத்திரைப் பதித்தவர் எழுத்தாளர் எஸ். கமலா. 1931ஆம் ஆண்டு தினமணி பாரதி மலரில் 'வீடும் வெளியும்' என்ற இவரின் கதை முதன்முதலாக வெளிவந்தது. இக்கதை குடும்பம் சார்ந்த கதையாக இருப்பினும் கணவன், மனைவி இருவரின் மனநிலையினை அவரவர் நிலையில் நின்று மிக எதார்த்தமாக சித்தரிக்கப்பட்ட கதை. இச்சிறுகதை எழுத்தாளர் எஸ். கமலா அவர்களின் படைப்பு உத்தியினையும், மொழிச் சீர்மையினையும் நேர்த்தியாகப் புலப்படுத்தியமையைக் காணமுடிகிறது.

எழுத்தாளர் எஸ்.கமலா என்று தன் பெயரிலேயே தன் அடையாளத்தினை நிறுவிய கமலா விருத்தாசலம் அவர்கள் தமிழ்ச் சிறுகதை உலகின் மன்னனான எழுத்தாளர் புதுமைப்பித்தனின் மனைவி. கமலா அவர்கள் தன் கணவரின் பெயரினை தன் பெயருடன் இணைக்காமலேயே தன் படைப்புகளை எழுதினார். எழுத்தாளர் புதுமைப்பித்தன் அறிமுகமான அளவிற்கு எழுத்தாளர் கமலா அவர்கள் பெரிய அளவில் தமிழ் இலக்கியப் பரப்பில் அறிமுகமாகவில்லை என்பது வருத்தமே. பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி, எழுத்தாளர் கமலா அவர்களின் 22 கதைகளை நினைவுத் தீ என்ற தலைப்பில் தொகுத்துள்ளார். காலச்சுவடு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது. 1971ஆம் ஆண்டு ஸ்டார் பிரசுரம் காசுமாலை என்ற பெயரில் வெளியிட்ட இந்நூல் 2025ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளிவந்துள்ளது.

"கதை எழுதும் விஷயத்தில் நீயும் என்னுடன் தொடர்ந்து வரவேண்டும். அதனால்தான் உன்னை எழுது எழுது என்று தொந்தரவு செய்கிறேன். மனதில் உள்ள துன்பங்களுக்கு வடிகால் எழுத்துதான்"(தினகரி சொக்கலிங்கம்; 2025) என்ற அப்பாவின் வார்த்தைகள் அம்மாவையும் எழுத வைத்தன என்று இவர்களின் மகள் தினகரி சொக்கலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

மேலும்,"எல்லாப் பெண்களைப் போல், நீயும் சமையலும், வீட்டு வேலைகள் செய்வதுமான சாதாரண வாழ்வை வாழக் கூடாது"(தினகரி சொக்கலிங்கம்; 2025) என்பது அம்மாவிடம் அப்பா சொன்ன வார்த்தைகள் என்கிறார் மகள் தினகரி சொக்கலிங்கம்.

தமிழின் மிகச்சிறந்த படைப்பாளி புதுமைப்பித்தன் அவர்கள், தான் படைப்பாளியாக இருப்பதோடு மட்டுமல்லாமல் தன்னுடைய மனைவியும் தன்னைப் போன்று படைப்பாளியாக உருவாக வேண்டும் என்ற தீராத தாகத்துடன் இருந்தார். ஒவ்வொரு முறையும் தன்னுடைய மனைவிக்கு சிறுகதை எழுதுவதற்கான உத்வேகத்தினை வழங்கியதோடு தானே அதற்கு வழிகாட்டியாகவும் விளங்கினார்.

"நீ படிக்காத புத்தகங்கள் இங்கே நிறையக் கிடக்கிறதே. அனுப்பவா...? நீ நிறைய படிக்க வேண்டும், எழுத வேண்டும். உன்னால் முடியும்... இந்த விஷயத்தில் நீயும் என்னுடன் தொடர்ந்து வரவேண்டும். என்னுடன் சரிசமமாக இருக்க வேண்டும் என்பதே எனது ஆசை." (ஆ.இரா.வேங்கடாசலபதி.2025)

புதுமைப்பித்தன் தன்னுடைய மனைவி தனக்கு இணையான படைப்பாளியாக உருவாக வேண்டும் என்ற பேராவலை பல நிலைகளில் பதிவு செய்துள்ளார். இந்தப் பதிவினை 1930களில் புதுமைப்பித்தன் செய்துள்ளார். அன்றைய சூழலில் பெண்களின் உலகம் வீடாக மட்டுமே இருந்த நெருக்கடியான நிலையில் அவரின் இச்சிந்தனை வியக்க வைக்கிறது. பாலின சமத்துவம் குறித்த பெரும் புரிதல் ஏற்பட்ட இன்றைய சூழலில் கூட எத்துணை ஆண் படைப்பாளிகள் தன் மனைவி எழுதுவதற்கு ஒத்துழைப்பாகவும் உறுதுணையாகவும் இருக்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

"நீயும் இந்த விஷயத்தில் என்கூட தொடர்ந்து வரவேண்டும் என்றுதான் ஆசை. அதனால்தான் உன்னை எழுது எழுது என்று தொந்தரவு செய்கிறேன் கண்ணா. உன் புத்தியில் எனக்கு ரொம்ப நம்பிக்கை. நீ மனசு வைத்தால், நடக்காத காரியம் கிடையாது" (ஆ.இரா.வேங்கடாசலபதி.2025).

புதுமைப்பித்தன் அவர்கள் தன் மனைவி கமலாவின் அறிவின் மீதும், படைப்பாற்றலின் மீதும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதை இப்பதிவுகள் உறுதிசெய்கின்றன.

மனைவியின் அறிவைக் கண்டு அஞ்சி, எங்கே தன்னை விட உயர்ந்துவிடுவாளோ என்று அவளின் ஆளுமையினைத் தட்டித் தட்டி வைக்கும் சமூக இயங்கியலில் புதுமைப்பித்தன் அவர்கள் சத்தமில்லாமல் தன் காலத்தில் பெரும்புரட்சியை சாத்தியமாக்கினார்.

"நான் என்னதான் எழுதிக் குவித்தாலும் நீயும் ஒத்தாசை செய்தால் தானே எனக்கும் திருப்தி, மகிழ்ச்சி. நம்மைப் போல் அமைந்த ஜதை... யார் இருக்கிறார்கள்" (ஆ.இரா.வேங்கடாசலபதி. 2025) என்று தன் மனைவி எழுதுவதைத் பெருமிதமாக எண்ணியுள்ளார்.

அவரின் எண்ணத்திற்கேற்ப எழுத்தாளர் கமலா அவர்களும் மிக நேர்த்தியாகத் தன் படைப்புகளைப் படைத்தார்.

"'மணிக்கொடி' கமலாவின் இரண்டு கதைகளை வெளியிட்டது. 'காசுமாலை' என்ற நெடுங்கதை வெளியானபோது அதன் ஆசிரியர் கூற்றை இங்கு மேற்கோள் காட்ட வேண்டும்."

“ஸ்ரீமதி எஸ். கமலாம்பாள் எழுதிய ‘காசுமாலை’ இதுவரையில் வெளிவந்துள்ள தமிழ்க் கதைகளில் முதன்மை ஸ்தானம் பெற்றவைகளுள் சேர வேண்டியது” (ஆ.இரா.வேங்கடாசலபதி.2025).

மணிக்கொடி இதழின் ஆசிரியர் எழுத்தாளர் எஸ். கமலா அவர்களின் எழுத்துக்கள் சிறுகதைப் படைப்பிற்குரிய முழுமைத் தன்மையோடு இருப்பதைப் பதிவு செய்துள்ளார். மேலும்,

“ஸ்ரீமதி எஸ். கமலாம்பாள் இதே ரீதியில் எழுதுவாரானால் இன்னும் வெகு சீக்கிரத்திலேயே நம்முடைய சிறந்த எழுத்தாளர்களை வெகுதூரம் பின்னே விட்டு விடுவார் என்பதில் சந்தேகமில்லை” (ஆ.இரா.வேங்கடாசலபதி.2025) என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சிறப்பிற்குரிய படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளர் கமலா அவர்களின் 22 கதைகள் நமக்குக் கிடைக்கின்றன. 1935இல் இவரின் முதல் கதை தினமணி, பாரதி மலரில் வெளிவந்ததிலிருந்து அடுத்தடுத்தக் கதைகளை எழுதத் தொடங்கினார்.

‘காசுமாலை’ என்ற இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள முதல் கதை குடும்பத்திற்குள் நிகழும் பொருளாதாரம் சார்ந்த நுண் அரசியலை நுட்பமான இழையாகக் கொண்டு உணர்வுப்பூர்வமாக தன் படைப்பாற்றலால் செதுக்கியுள்ளார் இவ்வெழுத்தாளர். இக்கதையில் இடம்பெற்றுள்ள பாத்திரப்படைப்பு, மொழி நடை என்று ஒவ்வொன்றையும் குறித்து மிக விரிவாக உரையாடலுக்கு உட்படுத்தலாம். அம்மா குறித்து நம் சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஒற்றை பிம்பத்தினை உடைத்து நொறுக்கும் இக்கதை அவரின் மற்றொரு வடிவத்தை எவ்வித பூச்சுமில்லாமல் உள்ளது உள்ளபடி பதிவு செய்துள்ளது. சொற்களின் வலிமை, யாரை நோக்கி அச்சொற்களைக் கையாள்கிறோம், அதன் பாதிப்பு எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை காட்சிகளாக நம் கண்முன் மொழிவழி கடத்தியுள்ளார் இப்படைப்பாளி. நீண்ட கதையாக இருப்பினும் சற்றும் அலுப்பில்லாமல் மிக சுவாரசியமாக அமைந்துள்ளது இக்கதையின் தனிச்சிறப்பு.

‘ஆசை’ என்ற அடுத்த கதை பிரிவின் வேதனையைச் சொல்லும் நிலையில் மனதின் நுட்பமான மாய வித்தைகளை உண்மையில் நடப்பது போல காட்சிப்படுத்தியுள்ளார் இவ்வெழுத்தாளர்.

‘முதலைச் சட்டை’ என்ற சிறுகதையில் இடம்பெற்றுள்ள காட்சிகள் சற்று இயல்பிகந்தவை என்பதை உணர்ந்தாலும் கதையின் போக்கும், விவரணைகளும் தொடர்ந்து வாசிக்கத் தூண்டுகிறது. இளம்பெண்ணின் எண்ண ஓட்டம், பெற்றோரின் தவிப்பு என்று ஒவ்வொன்றையும் தனக்கே உரிய தனித்தன்மையான மொழியில் வாசகர்களுக்குக் கடத்திவிடுகிறார் இப்படைப்பாளி. மேலும் இக்கதையில் காட்சிப்படுத்தப்படும் நேர்த்தியான இயற்கை வருணனை ரசிக்கத்தக்கதாக உள்ளது.

‘குழந்தை மீனாள்’ என்ற சிறுகதை தனித்தன்மை வாய்ந்த கதை. இக்கதை 1931 ஆம் ஆண்டு மணிக்கொடி இதழில் வெளியானது. இவரின் சமகாலத்தில் படைப்புலகில் இயங்கிய பெண்கள் தொடாத கதைக்கருவினை மையமாகக் கொண்டு இப்படைப்பைப் படைத்துள்ளார். சாதி – சாதி சார்ந்த மனநிலை பெண்களின் உலகில் எவ்வாறு செயல்படுகிறது என்று இக்கதை லஷ்மி, ஜானகி என்ற இருபாத்திரங்கள் வழி மிகக் கூர்மையாக நமக்குள் கடத்திவிடுகிறது. ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் இச்சாதியின் வேர் எவ்வாறெல்லாம் நுட்பமாக செயல்படுகிறது என்பதற்கு இக்கதை ஒரு சிறந்த சான்று. நம் சமூகத்தில் சாதி எந்த அளவிற்கு வினையாற்றுகிறது என்ற புரிதலோடு இக்கதையை இவர் படைத்துள்ளார்.

‘அந்தக் குடித்தனக்கார ஸ்திரீ’ “என்னடீ குழந்தை சொல்றது? சூத்ராள் வீட்டில் குழந்தைக்குச் சாதம் ஊட்ட விடுவாளோ? ரொம்ப...” என்று வெறுப்பு நிறைந்த ஆத்திரத்தில் சொன்னாள். (ஆ.இரா.வேங்கடாசலபதி.90.2025)

என்று கூறுபவளின் வார்த்தைகள் தரும் வலியை உணரும் லஷ்மி இறுதியாக “கல்மிஷம் யார் மனதிலிருந்ததென்பதை எப்படிச் சொல்ல முடியும்?” என்று கூறி இக்கதையை நிறைவு செய்கிறார். சாதி வேற்றுமை மனிதனை மனிதன் எவ்வாறு வேறுபடுத்திப் பார்க்கிறது. மனங்களை எத்தகைய காயங்களுக்கு ஆட்படுத்துகிறது என்பதை இக்கதை வழி எழுத்தாளர் எஸ்.கமலாம்பாள் அவர்கள் புலப்படுத்தியுள்ளார்.

‘வார்த்தை – விஷம்’ என்ற சிறுகதை குடும்ப உறவுகளில் பெண்களுக்கிடையே நடைபெறும் நுண் அரசியலை உரையாடல் வழி நேர்த்தியாகக் கடத்திவிடுகிறது. திருமணமாகி கணவன் வீட்டிற்கு வரும் பெண்ணின் மன உணர்வு மற்றும் காலப்போக்கில் மாமியார்,

நாத்தனாரின் எதிர்பார்ப்புகள் கூடிய மன வெளிப்பாடு என்று ஒவ்வொன்றையும் சிறப்பாகக் காட்சிப்படுத்தியுள்ளார்.

ஆணின் தடுமாற்றத்தினை செறிவாக பதிவுசெய்த படைப்பு 'திறந்த ஜன்னல்!' பெரும்பாலும் குடும்பத்தில் பெண்களிடையே நடக்கும் உணர்வுகளையே கதைகளாக்கிய 1937இல் கமலா விருத்தாசலம் அவர்கள், ஆணின் உலகினை சமரசமற்று பதிவுசெய்துள்ளார். கணவன், மனைவிக்கு இடையிலான நெருக்கத்தினைப் பேசும் அதே வேளையில் கணவன் மனைவிக்குத் தெரியாது என்று எண்ணி செய்யும் தவறு புரியும்போது அப்பெண்ணின் மனம் படும்பாடு, அதேநேரத்தில் தன்நிலையை மனைவி அறிந்துவிட்டாளோ என்று கணவன் படும் மன உளைச்சல் என்று ஒவ்வொன்றையும் வார்த்தைகளில் வடித்துள்ளார் இப்படைப்பாளி. அதேநேரத்தில் இக்கதையில் நிறைவுப் பகுதியைக் கவிதையைப் போல் நிறைவு செய்துள்ளமை இப்படைப்பை மேலும் கொண்டாடத் தூண்டுகிறது.

வாய் பேச இயலாத காதும் கேட்காத மாற்றுத் திறனாளிப் பெண்ணின் எண்ணவோட்டத்தினையும், மன எழுச்சியையும் நேர்த்தியாகப் பதிவு செய்த சிறுகதை 'ஊமைச்சியின் கலியாணம்'. வசதியான வீட்டுப் பெண்ணான அவளின் எதிர்பார்ப்புகள், திருமண வாழ்வில் அவள் எதிர்கொள்ளும் அவமானங்கள், ஏமாற்றங்கள் என்று ஒவ்வொன்றையும் வலியோடு கடத்துகிறது இப்படைப்பு.

உமா என்ற மாற்றுத்திறனாளிப் பெண்ணின் புரிதல் உணர்வையும், செயல் திறனையும் மெச்சும் இவ்வெழுத்தாளர் அதேநேரத்தில் அப்பெண் உளவியல் சார்ந்து கணவனால் அலைக்கழிக்கப்படுவதையும், உதாசீனப்படுத்தப்படுவதையும் உள்ளது உள்ளபடி உணர்வுப்பூர்வமாக வாசகர்களுக்குக் கடத்தியுள்ளார்.

வரலாற்றுப் பின்புலம் கொண்ட 'இரத்த சாந்தி' என்ற சிறுகதையை 1937 இல் எழுத்தாளர் கமலா விருத்தாசலம் அவர்கள் எழுதியுள்ளார். குடும்பக் கதைகளைக் கடந்து வரலாற்றுத் தரவுகளைக் கொண்டு இவரால் இத்தகைய சிறந்த கதையை எழுத முடிந்தது என்பது இவரின் படைப்பாற்றலின் பலம் என்றே கூறவேண்டும். நவாபின் படைத்தலைவன் அனந்தகிருஷ்ணன் நம்பி, சீதாலஷ்மி என்ற முதன்மைப் பாத்திரங்களைக் கொண்டு இயங்கும் இக்கதை அரசியல் பேசுவதோடு அரசியல் சூழ்ச்சியையும் பதிவு செய்யத் தவறவில்லை. சீதாலஷ்மி என்ற பெண் பாத்திரத்தின் ஆவேசத்தினையும், அறச்சீற்றத்தினையும், வீரத்தினையும் உணர்வுப்பூர்வமாக இக்கதையில் எழுத்தாளர் கமலா விருத்தாசலம் பதிவு செய்துள்ளார். பிற கதைகளில் இருந்து முற்றிலும் மாறான நிறைய உழைப்பினை வேண்டும் கதைக்களனை எடுத்து மிக அழுத்தமாக இப்படைப்பினை வழங்கியுள்ளார் இப்படைப்பாளி.



நினைவுத் தீ | கமலா விருத்தாசலம் | விலை: ரூ. 330
வெளியீடு: காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்

'நினைப்பும் நடப்பும்' என்ற சிறுகதை உடல்நலம் குன்றியுள்ள மீனா மற்றும் அவள் கணவன் ராமசாமிக்கு இடையில் நடக்கும் உறவுப் போராட்டத்தினை, அன்பின் வெளிப்பாட்டினை வெவ்வேறு கோணத்தில் எழுதியுள்ளார்.

“மனச்சோர்வு வியாதிக்குக் காரணமா? வியாதி மனச்சோர்வுக்குக் காரணமா? என்று அவள் எத்தனையோ தடவை ஆலோசித்துப் பார்த்தும் சரியான பதிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் படுக்கையில் விழுந்து இன்றோடு இருபது நாட்கள் ஆயிற்று.” *(ஆ.இரா.வேங்கடாசலபதி.145.2025)*

உடல்நலம் குன்றிய பெண்ணின் மனநிலையினையும், அவள் கணவனின்

ஒத்துழைப்பையும் இக்கதை பேசுகிறது. கணவன், மனைவிக்கிடையில் காணப்பெறும் அதிகாரமற்ற புரிதலோடு கூடிய உறவினை மிக அழகாகக் காட்சிப்படுத்தியுள்ளார் இப்படைப்பாளி.

மனித மனம் இருப்பது, இல்லாதது என்று பலவற்றையும் கற்பனையில் மிகுவித்துக்கொண்டு அதன்வழி அச்சத்திற்கும், தடுமாற்றத்திற்கும் ஆளாவது இயல்பு, அந்த வகையில் 'அடைத்த கதவு' என்ற சிறுகதை மர்மங்களும், கற்பனைகளும் நிறைந்த ஒரு வீட்டைப் பற்றிய நேர்த்தியான சித்தரிப்பு. அத்தகைய வீட்டிற்கு குடிவரும் கணவன், மனைவி அவர்கள் எதிர்கொள்ளும் வினோதமான உணர்வுகளையும், மர்மமான காட்சிகளையும் சற்றும் சுவை குன்றாமல் எழுதியுள்ளார் எழுத்தாளர் கமலா விருத்தாசலம்.

ஆண், பெண் உறவை தேர்ந்த படைப்பழகியலுடனும் நேர்மையுடனும் தன் படைப்புகளில் பதிவு செய்த சிறப்பு எழுத்தாளர் கமலா விருத்தாசலத்திற்கு உண்டு. அந்த வகையில் 'அவனும் அவளும்' என்ற சிறுகதை சமூக ஒழுங்கியலில் இருந்து சற்று விலகிய ஆண், பெண் நட்பினை அப்பெண்ணின் உணர்வின் வழியும், அந்த ஆணின் உணர்வின் வழியாகவும் கடத்திய இவரின் மொழியாளுமை சிறப்பாக அமைந்துள்ளது. மன உணர்வுகளை இவ்வளவு யதார்த்தமாக மொழியில் கடத்திவிட முடியும் என்பதற்கு இக்கதை பெரும் சான்று.

'புறை ஓடிய ஆசை' என்ற சிறுகதை இன்றும் கூட பேச இயலாத பொருண்மையைக் கொண்ட படைப்பு. 1944 ஆம் ஆண்டு இக்கதையை கமலா விருத்தாசலம் அவர்கள் எழுதினார்கள் என்பதே வியப்பை ஏற்படுத்துகிறது. பெண் படைப்புகள் பேசுவதற்கான பொருண்மைகள் என்ற எல்லைக்கோடுகளைக் கடந்த படைப்புகளை இவர் சாத்தியமாக்கினார். பெண்ணின் உணர்வுப் போராட்டத்தினை நுணுக்கமாக மொழியில் செதுக்கிவிடும் வல்லமை இவருக்குண்டு என்பதை இப்படைப்பு உறுதிசெய்கிறது.

குடும்பத்தில் கணவன், மனைவியிடையே நடைபெறும் சண்டை - அதன் உள்ளீடான பெரும் கோபம் என்று ஒவ்வொன்றையும் அடுத்தடுத்து மிக இயல்பாகப் பதிவுசெய்துள்ளார் எழுத்தாளர் கமலா விருத்தாசலம். 'வாய்த் துடுக்கு' என்ற இச்சிறுகதை யதார்த்தத்தின் உச்சத்தினை செறிவாக முன்வைக்கும் படைப்பு.

'வேறுபாடு உண்டா?' என்ற சிறுகதை மனதின் பல்வேறு கேள்விகளின் விடையறியாப் பக்கங்களை பெண்ணின் கோணத்தில் பதிவு செய்யப்பட்ட படைப்பு.

"போக்கிரி செத்தாலும், யோக்கியன் செத்தாலும் பெயர் பிணந்தானே? சுடுகாட்டில் எரியும்போது நாற்றத்தில் வேறுபாடு உண்டா? எனக்கும் தெரியாது; அந்தச் செத்துப்போன பிணத்துக்கும் தெரியாது" என்று இக்கதையை நிறைவு செய்கிறார் எழுத்தாளர் எஸ்.கமலா.

'காதல் பூர்த்தி' என்ற சிறுகதை பங்கஜம் என்ற பெண்ணை மையமாக வைத்து நகர்கிறது. "பெண்ணுக்கு வயது வந்துவிட்டது என்று சுதந்திரத்தை எல்லாம் கட்டி மூலையில் போட்டுவிட்டு, சதா வீட்டிற்குள்ளேயே அவர்களைப் பூட்டிப்போடும், திருநெல்வேலி ஜில்லாவல்ல அது. அவ்வூரில் அக்கம் பக்கம் எங்கு வேண்டுமானாலும் போகலாம். வரலாம்" என்று திருநெல்வேலிப் பகுதியில் பெண்களுக்கிருந்த கட்டுப்பாட்டினை எள்ளலோடு பதிவு செய்யும் அதேவேளையில் இந்நிலையில் மாற்றங்கள் அவசியம் என்பதையும் துணிச்சலாக முன்வைத்துள்ளார்.

வாசகரின் மனதைப் பிசையும் கதை 'பாசக்கயிறு'. குழந்தைகளிடம் நாம் காட்டும் கண்டிப்பின் அளவினை பொட்டில் அறைந்தாற் போல் உரைக்கிறது இச்சிறுகதை. குழந்தைகள் மீதான பெற்றோரின் அதிகாரம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இக்கதையில் மிக இயல்பாகப் பதிவு செய்துள்ளார் இப்படைப்பாளி.

'வீடும் வெளியும்' என்ற படைப்பு கணவன், மனைவி இருவரின் உலகையும் ஒருநாள் நிகழ்வின் வழி கட்டமைத்துள்ளது. ஒரு நாளை நாம் நினைக்குமாறு திட்டமிட்டாலும் அன்றைய நாள் அப்படியாக நிறைவு பெறுவது கடினம் என்பதையும் அதனூடான உணர்வுப் போராட்டத்தினையும் சுவை குன்றாமல் கூறிச் சென்றுள்ளார் எழுத்தாளர் எஸ்.கமலா அவர்கள்.

அன்பான கணவனின் மரணம் அதுதரும் வேதனை, பிறந்த வீட்டின் வேறுபாடு – உறவுகளின் கூரிய வார்த்தைகள் என்று ஒவ்வொன்றையும் அவருக்கே உரிய தனித்தன்மையுடன் நேர்த்தியான மொழிநடையில் எழுதியுள்ளார். அடுத்தடுத்தக் காட்சிகள், தங்கு தடையற்ற மொழியாளுமை நிறைந்த 'நினைவுத் தீ ' சிறுகதை இத்தொகுப்பின் ஆகச் சிறந்த படைப்பு.

“கணவனைக் கொன்றுவிட்டு களிப்போடிருக்கும் நீ என்னையும் கொன்று விட்டுத்தான் நிம்மதி அடைவாய் போலிருக்கிறது” (பக்.220) என்ற சகோதரனின் வார்த்தைகளை சொற்களா அவை, எரியும் தீப்பந்தங்கள் என்கிறார். இவ்வாறு அலைவுறும் நெஞ்சத்தின் வேதனை மொழி பேசும் அதேநிலையில் நெருங்கிய உறவுகள் ஏற்படுத்தும் அவமானங்களின் வலியினையும் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார் இவ்வெழுத்தாளர்.

‘காற்றினிலே வந்த கீதம்’ சிறுகதை நிறம் சார்ந்து நம் சமூகத்தில் நிரம்பி வழியும் ஏற்றத்தாழ்வினை உடைத்து நொறுக்குகிறது. பெண்ணின் கருமை நிறம் திருமணத்திற்குத் தடையாகப் பார்க்கும் சமூகக் கருத்தாக்கத்தை இக்கதையில் கேள்விக்குட்படுத்தியுள்ளார் இப்படைப்பாளி. பெண்ணின் அறிவையும், திறமையையும் கொண்டாடும் ஆணை இக்கதை வழி முன்னிறுத்தியுள்ளார் இப்படைப்பாளி.

“ஆண் மலடு சொன்னாலும் சொல்லலாம். அப்பனே பெண் மலடு யாருமில்லை என்று யாரோ ஒரு மகான் சொன்னதாக ஞாபகம். இதை அறிந்து நடக்கிறார்களா என்றால் அதுதான் இல்லை. கலியாணமாகி மூன்று வருஷங்களுக்குள் ஒருத்தி குழந்தை பெறாவிட்டால் பிள்ளையைப் பெற்றவர்கள் தங்கள் மகனுக்கு இரண்டாந்தாரமோ, மூன்றாம் தாரமோ எது வேண்டுமானாலும் நடத்தப் பின்வாங்குவதில்லை” (ஆ.இரா. வேங்கடாசலபதி.230.2025)

குழந்தையில்லாமல் இருக்கும் பெண்ணைக் குடும்பமும், சமூகமும் எவ்வாறு பார்க்கும் என்பதையும் அதன் வழி அப்பெண் அடையும் வேதனையையும் மட்டும் பதிவு செய்யாமல் சமூகத்தின் இத்தகைய மூடத்தனமானப் பார்வைக்கு எதிரான தன் கருத்தினை ஆணித்தரமாகப் பதிவுசெய்துள்ளார் எழுத்தாளர் கமலா. 1950ஆம் ஆண்டு தினமணி கதிரில் வெளிவந்த இக்கதை இப்படைப்பாளியின் முற்போக்குச் சிந்தனையின் உச்சம்.

ஆண், பெண் உறவின் மீதான பொதுப்புத்திப் பார்வையினைக் கடந்து ஆழமான நட்பும் இவ்வுறவில் சாத்தியமே என்பதை ‘சந்தேகம்’ என்ற சிறுகதையில் பேசியுள்ளார் இப்படைப்பாளி. கணவன், மனைவியிடையே ஏற்படும் சந்தேகம் கணவன் தன் பெண் தோழியைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல் என்று ஒவ்வொரு காட்சியினையும் மிக இயல்பாகப் படைப்பாக்கியுள்ளார் இவ்வெழுத்தாளர்.

‘வெள்ளை தாடி தாத்தா’ என்ற சிறுகதை குழந்தை இலக்கியத்தின் தனிச்சுவடற்ற காலகட்டத்தில் குழந்தைகளின் உலகை நுட்பமாக இவர் எழுதியுள்ளமை வியப்பிற்குரியது. தொடர்பில்லாத ஒரு மனிதன் துன்புறும்போது அத்துன்பத்தினைப் போக்க வேண்டிய கடப்பாடு சக மனிதர்களுக்கு உண்டு என்பதை குமார் என்ற சிறுவன் பாத்திரம் மூலம் பதிவுசெய்துள்ளார்.

‘நினைவுத் தீ’ என்ற இச்சிறுகதைத் தொகுப்பு பொதுவாக பெண் படைப்பாளிகள் குடும்பக் கதைகளை மட்டுமே எழுதுவார்கள் என்ற அடிப்படைக் கருத்தாக்கத்தினைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது. 1935இல் தொடங்கிய இவரின் எழுத்துப் பயணம் 1950 கடந்தும் நீள்கிறது. தமிழின் முதல் தலைமுறைப் பெண் படைப்பாளியான இவரின் எழுத்துகள் அப்படியான எந்தத் தோற்றத்தினையும் தரவில்லை. வளமான மொழிநடை, இயல்பான கதை கூறும் திறன், ஆற்றல் வாய்ந்த மையப்பொருள் என்று ஒவ்வொரு சிறுகதை குறித்தும் விவாதிக்க ஏராளமான செய்திகள் உள்ளன. இதை மட்டுமே ஒரு பெண் படைப்பாளி எழுதவேண்டும் என்று எந்த முகமூடியும் இல்லாமல், மிகுந்த நேர்மையுடனும், படைப்பழகியலுடன் படைத்துள்ள எழுத்தாளர் கமலா விருத்தாசலம் அவர்களை எழுத்துலகம் கொண்டாடத் தவறியது தமிழிலக்கிய உலகின் வழமையான பொருள் பொதிந்த மௌனமாக இருக்கிறது. சமகால எழுத்தாளர்களைக் கடந்து நிற்கும் இப்படைப்புகள் தமிழிலக்கிய உலகிற்கு இவரின் பெருங்கொடை என்றால் அது மிகையில்லை.

துணைமை நூல்கள்;

1. எந்தையும் தாயும் –2025 - தினகரி சொக்கலிங்கம், காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்.
2. நினைவுத் தீ – 2025 - (பதி.ஆ) ஆ.இரா. வேங்கடாசலபதி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

●

கட்டுரையாளர்: துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுவை.

என்னை உலுக்கிய உப்புவேலி

க. பழனித்துரை

நண்பர் ஒருவர் என்னை ஒரு நிகழ்வில் பார்த்ததும் அவர் துணிப்பையில் இருந்த புத்தகங்களை எடுத்து, ஐயா உங்களுக்கான புத்தகம் ஒன்றை நான் நீண்ட நாட்களாக சுமந்த வண்ணம் இருக்கின்றேன், பெற்றுக் கொள்ளுங்கள் என்று என்னிடம் கொடுத்தார். கொடுத்துவிட்டு ஐயா, நீங்கள் இந்தப் புத்தகத்தை படித்திருக்கிறீர்களா? என்று கேட்டார். இல்லை என்றேன். உடனே நான் பயனுள்ள பணியைத்தான் இன்று செய்துள்ளேன் என்று கூறிவிட்டு பார்வையாளர் பகுதிக்குச் சென்றுவிட்டார். அந்த நூலைப் பெற்றுக்கொண்டு சென்ற நிகழ்வில் பங்கேற்றுப் பேசிவிட்டு வீடு திரும்பியதும் அந்த நூலைப் புரட்டினேன். அந்த நூலின் முகப்பில் ஒரு எழுத்தாளரின் வசைபாடல் இருந்தது. அந்த வசைபாடல் இன்றைய பல்கலைக்கழக பேராசிரியர்களை நோக்கியதாக உணர்ந்தேன். கோடிக்கணக்கில் மக்கள் வரிப்பணத்தை அரசு இவர்களுக்கு அளிக்கிறது, இவர்கள் இன்று சுகபோக வாழ்க்கையில் தோய்ந்து கல்வி என்ற பெயரில் பம்மாத்து செய்கின்றார்கள் என்பதுதான் அந்த எழுத்தாளரின் குற்றச்சாட்டு. பொதுவாக விமர்சனங்கள் எவரைப் பற்றியதாக இருந்தாலும் அதில் உண்மை இருக்கிறதா என்று

பார்ப்பவன்தான் ஒரு ஆய்வாளன் என்பதை என் ஆய்வுக்கு வழிகாட்டிய நெறியாளர் எனக்குக் கற்றுத் தந்தார். இந்த எழுத்தாளர் ஒரு முறை தன் புத்தகத்தில் நான் பணி செய்த நிறுவனத்தை விமர்சனம் செய்து எழுதி இருந்ததை ஆசிரியர்கள் பலர் விமர்சனம் செய்தனர். என் நண்பர் ஒருவர் அதை முழுவதுமாகப் படிக்காமல் அவரையே ஒரு நிகழ்வுக்கு பல்கலைக்கழகத்திற்கு அழைத்திருந்தார். அந்த நிகழ்வுக்கு நான் சென்று வந்தவுடன், என் நண்பர்கள் என்னைக் கேட்டார்கள், "அவர் நம் நிறுவனத்தைப் பற்றி எழுதி இருந்ததைப் படித்தீர்களா? படித்தேன் என்றேன். படித்துவிட்டுமா அங்குச் சென்றீர்கள் என்றார்கள். ஆம். படித்தேன் பல கருத்துக்கள் அவர் கூறியதில் எனக்கு உடன்பாடு இருந்தது என்றேன்." உடனே ஒரு பேராசிரியர் உங்களுக்கு நிறுவனப்பற்று கிடையாது என்று விமர்சித்தார். அவர் விமர்சித்திருப்பது நிறுவனத்தை அல்ல நிறுவனச் செயல்பாடுகளைத்தான். நம் நிறுவனம் எதற்காக உருவாக்கப்பட்டதோ அது நடைபெற்றிருக்கிறதா என்பதை கேள்வியாக்கி, நம் செயல்பாடுகளை விமர்சனம் செய்துள்ளார். நாமெல்லாம் பேராசிரியர்கள்தானே, நமக்கு அவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் எழுத துணிவு உண்டா என்றேன். பக்கத்தில் நின்றவர் கூறினார், அப்படி எழுதினால் இன்று எழுதியதைவிட இன்னும் ஆழமாக அழுத்தமாக அவர் அடுத்த புத்தகம் ஒன்றையே எழுதுவார், விட்டுவிட்டு வாருங்கள் போவோம் என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். இன்றுவரை அதற்கு பதில் எழுதவில்லை, காரணம் அவர் எழுதியது உண்மை. அதேபோலத்தான், இந்தப் புத்தகத்திலும் ஆராய்ச்சி என்ற பெயரில் நடத்தும் அவலங்களை தோலுரித்துள்ளார் அந்த எழுத்தாளர். காரணம் நம் நாட்டில் ஆய்வு செய்யப்பட வேண்டிய விஷயங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அதை இன்று வெளிநாட்டிலிருந்து ஒருவர் வந்து செய்திருக்கிறார் என்றால் நம் ஆய்வாளர்கள் எங்கே என்ற கேள்வியில்தான் அவர் ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளார். இந்த "உப்பு வேலி" என்ற நூல் நாம் ஆய்வு செய்யவேண்டியவை எண்ணிலடங்கா உள்ளன என்பதை நமக்கு எடுத்துக்கூற வந்த நூல்போல் இருப்பதால்தான் அதைப் பற்றி எழுத வேண்டி இருக்கின்றது.

இந்த நூல் எதைப்பற்றியது என்பதில்தான் இதன் சிறப்பே அடங்கியுள்ளது. இந்தியாவில் வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் 1500 கிலோ மீட்டர் தூரத்திற்கு இமயத்திலிருந்து ஒரிசா வரை உயிர் வேலி ஒன்று போடப்பட்டிருந்தது. இந்த வேலிதான் அன்றைய ஆட்சியாளர் இந்திய மக்களிடமிருந்து உப்புவரி வசூலிக்க உபயோகப்படுத்தியிருந்தனர் என்பதை இதுவரை எவரும் கொண்டுவந்து ஆய்வு செய்து தரவில்லை. இதனால்தான் இந்தப் புத்தகம் மிகப்பெரிய ஆவணமாகத் தெரிகிறது.

எங்கோ ஒரு வெள்ளையனுக்கு எதையோ படிக்கும்போது, ஏதோ ஒரு தேடல் ஓர் உணர்வாக மாறி, அதில் தன்னைக் கரைத்துக்கொள்ளச் செய்த சாகசத்தின் வெளிப்பாடுதான் இந்த நூல். இது ஒரு வரலாற்று ஆவணம்தான், இதில் ஒரு இலக்கியம் இருக்கிறது, இதில் ஒரு பயணக் குறிப்பு இருக்கிறது, இதில் ஒரு மானுட வரலாறு இருக்கிறது, இதில் ஒரு ஆளுகை இருக்கிறது, ஒரு பொது நிர்வாகம் இருக்கிறது. இது அனைத்துமே ஒரு குறிப்பிட்ட கொள்ளைக்காரர்கள் மக்களை அடக்க, மேய்க்க அச்சுறுத்த கற்றுக்கொண்டு துணிந்து ஒரு அரசாங்கத்தின் துணையோடு நடந்திருப்பதை இந்த நூல் படம் பிடித்துக் காண்பிக்கிறது. ஒரு நாட்டில் ஒரு அரசாங்கம், அரச குடும்பம், பாராளுமன்றம் அதிகாரவர்க்கம், அனைவரும் இணைந்து உலகைக் கொள்ளையடித்து ஒரு சுகபோக வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். அப்படி ஒரு குறிப்பிட்ட வர்க்கம் வாழ வெள்ளைய அரசாங்கம் 1600இல் கம்பெனிச் சட்டம் போட்டு, ராணுவ அதிகாரத்தையும் அந்தக் கம்பெனிக்கு வழங்கி அனுப்புகிறது. அந்தக் கம்பெனி துணிந்து வணிகத்திற்கு வந்தது, ஆட்சியைப் பிடித்துக்கொண்டு கம்பெனி இந்தியாவைக் கொள்ளையடிக்கின்றது. இந்திய மக்களைச் சுரண்டுகின்றது, அச்சுறுத்துகிறது, மக்களின் வாழ்க்கையைச் சீரழிக்கின்றது. இங்கு இந்த நிலப்பரப்பில் கோலோச்சிய மன்னர்களும் அதற்கு உடந்தையாய் இருந்து தங்கள் சுகபோக வாழ்க்கையை கட்டமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். அப்படி வெள்ளையர்களுக்குக் கொள்ளையடிக்க உதவிய அரசர்களும்கூட சகிக்க முடியாத அளவுக்கு மக்களை வாட்டி வதைப்பதை எதிர்க்க ஆரம்பித்தவுடன் அவர்களையே காலி செய்து தன் கொள்ளை ராஜ்யத்தை விரிவாக்குவதில்தான் கவனமாக இருந்தது வெள்ளையர் கம்பெனி. அந்தக் கம்பெனியின் முகவர்களாக இருந்தவர்கள் கம்பெனியை ஏமாற்றுவது, முகவர்களாக இருந்தவர்களை, நிதி வசூலிப்பவர்கள் ஏமாற்றுவது, வெள்ளைய அரசை கம்பெனி ஏமாற்றுவது, கொள்ளையடிப்பதில் பங்கு போடுவது என்பதை நிதி நிர்வாகம்

என பெயரிட்டு மக்களை ஏமாற்றுவது என அனைத்தையும் வெள்ளையர்கள் செய்து வந்ததை இந்த ஆய்வு எடுத்துக் காண்பிக்கிறது. இந்த ஆய்வாளர் உப்பு வேலியை கண்டுபிடிக்க ஆரம்பித்து வெள்ளையரின் கொள்ளை ராஜ்யம் பற்றி விரிவான வரலாற்றையே தன் கடின உழைப்பால் கொண்டுவந்து தந்துள்ளார். இந்தக் கொள்ளையடிக்கும் வெள்ளையர்களின் வரலாற்றை ஏன் அமெரிக்கா இங்கிலாந்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று இங்கிலாந்து தேச பொதுச் சிந்தனையாளன் தாமஸ் பெயின் தன் 'காமன் சென்ஸ்' என்ற நூலில் எழுதி அமெரிக்க மக்களுக்கு விடுதலைக்கான எழுச்சியை ஊட்டினான். அதன் பிறகு பிரெஞ்ச் தேச பொருளாதார நிபுணர் இந்த காலனியாதிக்க ஆட்சிகள் என்பது ஒரு கொள்ளைக் கூட்டம் நடத்தும் ஆட்சி, இதில் கொள்ளையடிப்பதை வாழ்வியலாக்கி, அதிகாரத்தைப் பிடித்து அதன் மூலம் எல்லையில்லா கொள்ளைகளை நிகழ்த்தி, அதை சட்டபூர்வமாக்கிக் கொள்ள சட்டங்களை அவர்களே கொண்டுவந்து மக்களை மிரட்டி அச்சுறுத்தி செயல்படுவதும், இந்தக் கொள்ளையடிக்கும் வெள்ளையர்களின் வாடிக்கை என்பதை விளக்கினார். இந்த வெள்ளையர் கொள்ளைக் கூட்டம் தாங்கள் ஆட்சியில் இருக்க சாதாரண மக்களை ஏமாற்றிட அவ்வப்போது மக்கள் பிரச்சினைகளுக்கு ஓரிரண்டு தீர்வினைக் காண்பார்கள். அதையே சாதனையாக்கி, மக்களுக்கானதுதான் இந்த அரசாங்கம் என்று ஏழை எளிய மக்களை நம்ப வைப்பார்கள். இதை ஆட்சியில் உள்ளவர்கள் நாங்கள் மக்களுக்காகத்தான் ஆட்சி நடத்துகின்றோம் என்று அவர்களே நிறுவிக்கொண்டு தங்களைப் பாராட்டி மகிழ்ந்து கொள்வார்கள் என்று பிரடெரிக் பஸ்த்தியட் என்ற பொருளாதார வல்லுனர் எழுதினார். சட்டம் போட்டு கொள்ளையடிப்பதுதான் இவர்களின் பணி என்று விளக்கினார். இவர் இதை எழுதிய காலம் என்பது 19ஆம் நூற்றாண்டு. அது காலனிய காலம்.

இதைத்தான் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் லாலா லஜபதிராய் இங்கிலாந்து இந்தியாவுக்குத் தரவேண்டிய கடன் என்று ஒரு புத்தகம் எழுதினார். அக்கால பொது நிதியை ஆய்வு செய்து துல்லியமாக வெள்ளையர்கள் நம் மக்களை ஆட்சி என்ற பெயரில் கொள்ளையடித்தனர் என்பதை எழுதியுள்ளார். அதையே இன்னும் விபரமாக வெள்ளையர்கள் தங்கள் காலனியாதிக்க நிர்வாகத்தின் மூலம் இந்தியாவை கொள்ளையடித்த வரலாற்றை

உப்புவேலி | ராய் மாக்ஸம் | தமிழில்: சிறில் அலெக்ஸ்
விலை: ரூ. 440 | வெளியீடு: தன்னறம் நூல்வெளி

'இந்தியாவின் இருண்ட காலம்' எனத் தலைப்பிட்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சசி தரூர் ஒரு புத்தகம் வெளியிட்டார். இன்றைய சூழலில் வெள்ளையர்களால் அந்தத் தொகை இந்தியாவுக்கு திரும்பத் தர இயலாது. தரக்கூடிய சூழலில் அவர்களின் பொருளாதாரமும் இல்லை. குறைந்த பட்சம் இந்திய மக்களிடம் மன்னிப்பாவது கேட்பார்களா என்று எழுதியது மட்டுமல்ல, பல பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பேசவும் செய்தார்.

ராய் மாக்ஸம் 'உப்புவேலி'யில் உப்பை வைத்து ஒரு பெரிய கொள்ளையை கம்பெனி மற்றும் ஆங்கில அரசாங்கம் நடத்தி மக்களை வாட்டி வதைத்ததையும், அந்த வரிவசூலை செய்ய உலகின் மிகப்பெரிய உயிர்வேலி அமைத்து சுரண்டியதையும், இந்த உயிர் வேலியை ஆவணப்படுத்தும் முயற்சியில் ஒரு வரலாற்று ஆவணத்தை இந்திய மக்களுக்குத் தந்துள்ளார். இதை ஒரு இந்திய வரலாற்று ஆசிரியரால் தர இயலவில்லை.

தன் தணியாத ஆய்வுத் தாகத்தால் ஓர் ஆய்வாளனாக அவர் நடத்திய ஆய்வு, அதற்காக

அவர் ஆவணங்களையும், அதற்குச் சான்றாக உயிர் வேலியின் தடங்களைக் கண்டுபிடிப்பதற்கு அவர் செய்த பயணங்கள், அவர் சென்ற ஆவணக் காப்பகங்கள், அவர் தேடிய ஆவணங்கள், அவைகளை ஆய்வு செய்த முறைமைகள் அத்தனையும் இந்த நூலில் தந்து வாசிப்போரை ஒரு நாவல் படிக்கும் உணர்வுக்குக் கொண்டு வந்ததுதான் இந்த ஆவணத்தின் தனிச்சிறப்பு.

இதில் ஒரு ஆய்வாளனாக அவர் சந்தித்த தோல்விகள், தன் தோல்வியிலிருந்து மனம் தளராமல் வெற்றிப்படிக்கட்டுகளாக அந்த ஆய்வை நடத்தி அந்தத் தடத்தை கண்டுபிடித்தது என்பது ஒரு சாதனை மட்டுமல்ல, அது ஒரு சாகசம் என்பதை அந்த நூலைப் படிக்கும்போது நம்மால் உணரமுடியும்.

இதில் வெள்ளையர்கள் இந்த நாட்டில் செய்தது கொள்ளைதான். அதை தாங்கள் ஒரு அரசாங்கம் என மக்களிடம் ஒரு கருத்தை உருவாக்கி, அச்சுறுத்தி, மேய்த்து மக்களைச் சுரண்டினாலும், அந்த நிகழ்வுகளை ஆவணப்படுத்தி வைத்திருந்ததை நாம் மறுக்க இயலாது. அந்த ஆவணங்கள்தான் இன்று நமக்கு நம் வரலாற்றைத் திரும்பிப் பார்க்க உதவுகிறது, அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, அன்று மக்களின் நிலை, மக்களின் வாழ்வியல் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுத் தரவுகள் தேடும் படலத்தில் மக்களின் வாழ்வுநிலை என்ன என்பதையும் பதிவு செய்து விளக்கி இருப்பது இந்தப் புத்தகத்தின் தனிச் சிறப்பு. அடுத்து நம் வரலாற்று ஆய்வுக்கு முறைமை இயலில் என்னவெல்லாம் புதுமைகள் கொண்டுவர முடியும் என்பதையும் இந்த நூலைப் படிக்கும் ஆய்வாளர்கள் அறிந்து கொள்ளலாம். இவற்றையும் கடந்து பல கேள்விகள் எழுவதற்கான வாய்ப்புக்களையும் அந்தத் தேடுதலில் அவர் உருவாக்கி வைத்திருக்கிறார்.

இவர் தரவுகளை தேடியது 18ஆம் நூற்றாண்டு நிகழ்வுகளை உறுதிப்படுத்த. ஆனால் அவர் நடத்திய ஆய்வு 1990களில். 1991ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா உலகமய பொருளாதாரத்திற்குள் நுழைந்துவிட்டது. அந்தக் காலத்தில் அதாவது சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகள் கடந்து இந்தியக் கிராமங்கள் எப்படி இருக்கின்றன என்பதையும் தன் ஆய்வுத் தடத்தை விளக்கும்போது கூறியிருப்பது அடுத்த சிறப்பாகும். மக்களின் வாழ்க்கை நிலை என்பது எந்த அளவுக்கு சுதந்திர இந்தியாவில் குடியரசால் நடத்தப்படும் ஆட்சியில் உள்ளது என்பதைப் படம்பிடித்துக் காண்பித்து மற்றொரு மையக்கேள்வியை எழுப்பி வைத்திருக்கிறது.

உப்பு வரியை ஆய்வு செய்யும்போது இந்திய ஆட்சியாளர்களுக்கும், வெள்ளைய கொள்ளையர்களுக்கும் வரி விதிப்பதில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நம்மால் புரிந்துகொள்ளும் அளவுக்கு தரவுகளுடன் விளக்குகிறது இந்த நூல். உப்பு வரி என்பது சந்திர குப்த மௌரியர் காலத்திலிருந்து இன்றுவரை இருந்தாலும், இந்திய அரசர்கள் சற்று மக்கள் மீது கருணை காட்டினார்கள். வெள்ளையர்களோ கொள்ளையடிப்பதைத் தவிர மக்கள் மேல் எந்தக் கவலையும் கரிசனமும் இன்றி ஈவு இரக்கமின்றி அரக்கக் குணத்துடன் செயல்பட்டது என்ற ஒரு கொடுமையான நிர்வாக அமைப்பை அப்பட்டமாக ஆவணப்படுத்தியுள்ளது மிக முக்கியமான சிறப்பம்சமாகும்.

இந்த வரலாற்று ஆவணத்தை நுணுக்கமாகப் படிக்கும்போது ஒரு கேள்வி எழும். ராபர்ட் கிளைவ் எப்படி கம்பெனி நிர்வாகத்திற்கு தலைமை ஏற்று இங்குவந்து கம்பெனியையும், ஏமாற்றி, இங்கிலாந்து அரசையும் ஏமாற்றி இங்கிலாந்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை பணம் தந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டான் போன்ற சம்பவங்களைப் படம்பிடித்துக் காண்பித்திருப்பது ஒரு நாவலுக்குரிய தன்மை இந்த நூல் பெற்று இருக்கிறது. இன்று சுதந்திரமான நம் நாட்டில் அரசியல் நடத்துவதாக மக்களுக்காக அரசியலில் பதவிக்கு வருவதாகக் கூறி தங்களைப் பணக்காரர்களாக ஆக்கிக்கொண்டு, தாங்கள் சம்பாதித்த பணத்தை வைத்து பாதுகாத்துக் கொண்டிருக்கும் நவீன கால ராபர்ட் கிளைவ்களாக நம் அரசியல்வாதிகள் இருப்பதையும் உணர வைக்கிறது இந்த ஆய்வு நூல்.

ராபர்ட் கிளைவ் இந்தியாவில் கொள்ளையடித்து சொத்து சேர்த்ததை விசாரிக்க ஆங்கிலேய அரசு விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்தது அந்த கமிஷன். ஆனால் பொதுமக்கள் சபை உறுப்பினர்கள் ராபர்ட் கிளைவ் அவர்களின் கவனிப்பால், கிளைவ் நாட்டுக்குத் தொண்டாற்றினார் என்று பாராட்டி அதை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டனர். அந்த அளவுக்கு அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நியாயவான்கள். ஆனால் இயற்கை வேறு ஒன்றைச் செய்தது. வயிற்று வலியால் பாதிக்கப்பட்ட

அவர் மது அருந்தி கடைசியில் 49வது வயதில் தற்கொலை செய்துகொண்டார். அதன்பின் அவர் கல்லறைகூட அடையாளமற்றதாக மாற்றப்பட்டது.

அதன் பின் வந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் நிர்வாகச் சீர்திருத்தம் என்று கூறி லண்டனில் அதிகார மையத்தை திருப்திப்படுத்த மக்கள்மீது வரியைத் தாங்க முடியாத அளவிற்கு விதித்து பெருநிதி லண்டனுக்குத் தந்தார். முன் அரசர்களைப் பயன்படுத்தி இந்த வரிவசூல் நடைபெற்றது. அதற்கு அவர்களுக்கு சன்மானமாக உதவித்தொகை சலுகைகள் என வழங்கப்பட்டிருந்தன. அவைகளையெல்லாம் நிறுத்தி கஜானாவைப் பெருக்க முனைந்தார். அதுமட்டுமல்ல, வரிவசூலை நேரடியாகவே செய்தார். இவர் வந்தபிறகு உப்பு தயாரிக்கும் நிலங்கள் வைத்திருந்தவர்கள். தங்கள் நிலங்களை இழந்து அதில் கூலி வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டதுதான் இவரின் சாதனை.

உப்பு அன்றாடத் தேவைக்கான பொருள். அதனை வணிகப் பொருளாக்கி, வரி விதித்து, மக்களின் வாழ்க்கையைச் சீரழித்தது வெள்ளைய அரசாங்கம். உப்புக்காக அன்று மக்கள் அதிகம் செலவழிக்க வேண்டியிருந்தது. இந்த உப்பு வேலி வரலாற்றைப் படிக்கும்போது வெள்ளைய அரசாங்கம் மக்களை எப்படிச் சுரண்டியது என்பதை அப்பட்டமாகப் படம்பிடித்துக் காண்பித்தது. அதே நேரத்தில் இன்று நம் நாட்டில் மக்களாட்சி நடைபெற்று வருகிறது. இந்த சுதந்திர நாட்டில் நடைபெறும் அரசியல் ஆட்சி என்பதெல்லாம் எப்படி நடக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்கு அடித்தளமாக இந்த ஆய்வு நூல் விளங்குகிறது.

இன்று ஒரு மையக்கேள்வியை எழுப்புகிறது இந்த நூல். இன்றைய அரசியல்வாதிகள் அதிகாரத்தைப் பிடித்து அடித்த கொள்ளை எவ்வளவு, இன்றைய அரசியல்வாதிகள் நவீனகால ராபர்ட் கிளைவ்களாக, வாரன் ஹேஸ்டிங்ஸ் போல இருப்பதைத்தான் நம்மால் பார்க்க முடிகிறது. வரிவிதிப்பு என்பதில் கூட மக்களை இந்த வரிவிதிப்பு எப்படி சாதாரண மக்களைப் பாதிக்கும் என்பது அறியாது மக்களை வாட்டும் நிலையில் வரிவிதிப்பது நடக்கத்தான் செய்கிறது. நிர்வாகச் சீர்திருத்தம் என்று கூறி. சந்தைக்கு லாபம் சம்பாதிக்க நிர்வாகம் சீர் செய்யப்படுகிறதேயன்றி சாதாரண மனிதனின் வாழ்வைச் செம்மைப்படுத்த நிர்வாகம் சீர் செய்யப்படுகிறதா என்ற கேள்வியைக் கேட்க வைக்கிறது இந்த நூலைப் படிக்கும்போது.

ஒரு பாராளுமன்றம் எப்படிக் கொள்ளைக்காரர்களை நாட்டுக்கு நல்ல பணியாற்றியோர் என்று பாராட்டுத் தெரிவிக்கிறதோ அதேபோல்தான் குற்றப் பின்னணி கொண்டவர்கள் அரசியலில் புகுந்து பாராளுமன்றத்திற்குள் சென்று பாதுகாப்புத் தேடிக்கொள்கின்றனர் இன்று. காலம்தான் வித்தியாசம், செயல்கள் அனைத்தும் ஒன்றுதான். ஒரு அரசாங்கம் எப்படி இருக்க வேண்டும் என்று நம் விடுதலைக்காகப் போராடிய இந்திய தேசிய காங்கிரஸ் தன் லாகூர் மாநாட்டில் ஓர் தீர்மானம் 1929இல் இயற்றி 1930இல் வெளியிட்டது. அதில் கூறுகிறது, அரசாங்கம் என்பது: மக்களைப் பாதுகாக்க வேண்டும்; மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும்; மக்களை அச்சுறுத்தக்கூடாது; மக்களை யாரும் சுரண்ட அனுமதிக்கக்கூடாது, மக்களை அரசும் சுரண்டக் கூடாது, மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துகொடுத்து; மரியாதையுடைய வாழ்க்கையை வாழ வைக்க வேண்டும்; மக்களின் சுயமரியாதையை நிலைநாட்ட வேண்டும், மக்களுடன் இணைந்திருக்க வேண்டும், மக்களை அந்நியப்படுத்தக்கூடாது. இவைகள்தான் மக்கள் அரசாங்கத்தின் பண்புகள். இதை வைத்துப் பார்க்கையில் வெள்ளைய அரசு எங்களுக்கான அரசு அல்ல, நீ வெளியேற வேண்டும் என்று தீர்மானம் இயற்றினர். இன்று அதை வைத்து நம் சுதந்திர நாட்டில் மேற்கூறிய அனைத்துக் குறியீடுகளையும் வைத்துப் பார்க்கையில் நம் அரசாங்கம் யாருக்கானது என்பதை எளிதில் தீர்மானித்து விடலாம்.

இந்த நூல் ஆய்வாளர்களுக்கான நூல் மட்டுமல்ல, நல்ல பொதுக்கருத்தாளர்களாக செயல்படுபவர்களுக்கான நூலும் கூட. இதை நாம் படிக்கும்போது பல புதிய தடங்கள் நோக்கி நம் வரலாற்று ஆய்வை தகவமைத்துக்கொள்ள வழிவகை காட்டுகிறது. அடுத்து நம் நாட்டின் வரலாற்றை நாம் திரும்பிப் பார்த்து நாம் எவ்வளவு தூரம் சுரண்டப்பட்டுள்ளோம் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. அது மட்டுமல்ல, இன்றும் அந்த சுரண்டல் நடைபெறுவதை நம்மால் உணர முடிகிறது. அதற்குத் தீர்வுகாண நம்மை இந்த நூல் தூண்டுகின்றது.

●

கட்டுரையாளர்:

பேராசிரியர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

இறையன்பு

ஓராண்டு உரைகள்

4 தொகுதிகள்

1800 பக்கங்கள் ரூ 1750/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

திருமதி நாகேஸ்வரி அண்ணாமலை

நாகேஸ்வரி (20.6. 1940 - 1.8.2025) என்னும் எழுத்தாளரை தமிழில் அரசியல் நூல்களை வாசிக்கும் பழக்கமுடையவர்களே அறிந்திருக்க முடியும். 60 வயதுக்கு மேல் எழுதத் தொடங்கிய நாகேஸ்வரி, தன் இறுதிக்காலம் வரை தொடர்ந்து எழுதி பல நூல்களை வெளியிட்டு இருக்கிறார். இவர், தான் பயணம் செய்த நாடுகளைப் பற்றிய ஒரு ஆழமான சமூகவியல் பார்வையைப் பதிவு செய்திருப்பதே இவரது நூல்களின் சிறப்பு. அதுவும் பொதுவாக சுற்றுலாவுக்காக அல்லாமல், பல நாடுகளுக்குச் சென்றுள்ள இவர், அங்குள்ள மக்கள் நிலைமைகளை ஆராய்ந்து அரசியல் சமூக பொருளாதார கண்ணோட்டத்துடன் தனது கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார். இத்தனைக்கும் அவர் நீண்ட காலம் வாழ்ந்திருந்தது வடஅமெரிக்காவில் தான். அந்தப் படாடோபத்திற்கு மனதைப் பறிகொடுத்து விடாமல் ஏழை உழைக்கும் மக்களின், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை எவ்வாறு துயரமானதாக முதலாளித்துவக் கொள்கைகளால் மாற்றப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து இந்த நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

- (வட) அமெரிக்காவின் மறுபக்கம் - ஒரு சமூகப் பொருளாதாரப் பார்வை - 2009.
- பாலஸ்தீன இஸ்ரேல் போர் - ஒரு வரலாற்றுப் பார்வை - 2014.
- போப் பிரான்சிஸ் - நம்பிக்கையின் புதிய பரிமாணம், 2017.

அமரந்த்தா

- கியூபாவின் விடுதலை - அன்று முதல் இன்றுவரை, 2020.
- வியட்நாமில் வட அமெரிக்கப் போர்: வென்றது யார்? 2021.
- அமெரிக்க ஜனநாயகத்திற்கு ஆபத்தா? 2023.

பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்காத காலகட்டத்தில், அதற்கு எதிரான ஒரு சமூகத்தில் பிறந்த நாகேஸ்வரி, தந்தையுடன் போராடி பட்டப்படிப்பை முடித்துள்ளார். திருமணத்திற்குப் பின் வட அமெரிக்கா செல்லும் வாய்ப்பைப் பெற்றவர் அங்கே தங்கி இருந்த ஐந்தாண்டுகளில் ஒரு கணினிப் பயன்பாடு டிப்ளொமா மட்டுமே படிக்க முடிந்திருக்கிறது. இரு பெண் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி, 45 வயதில் மீண்டும் பட்டமேற்படிப்பு படித்து, சமூகவியலில் முனைவர் பட்டமும் பெற்றிருக்கிறார். இளம் பருவத்திலேயே நிறம், தோற்றம், செல்வம், சமூக உயர்நிலை போன்றவற்றின் அடிப்படையில் பாரபட்சமாக மக்கள் நடத்தப்படுவதை அறிந்து நாகேஸ்வரி மிகுந்த மனவேதனைக்கு உள்ளாகி இருக்கிறார். அதன் நீட்சியாகவே அவரது உயர் கல்வியும் அவர் படைத்த நூல்களும் அமைந்துள்ளன.

அனைவரும் அறிந்த வட அமெரிக்காவின் உண்மை நிலையை (வட) அமெரிக்காவின் மறுபக்கம், (வட) அமெரிக்க அனுபவங்கள் : ஒரு சமூகவியல் பார்வை ஆகிய நூல்களில், முன் வைத்திருக்கிறார். கியூபா, வியட்நாம் ஆகிய நாடுகள் வட அமெரிக்க ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் போராடிய வரலாற்றை அவர் பதிவு செய்திருக்கிறார். 50 வயதுக்கு மேல் இந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, தங்கி இருந்து, ஆய்வு செய்தபிறகு, தனது 60-வது வயது முதல் அவர் எழுதத் தொடங்கி இருக்கிறார். மொத்தம் 9 நூல்களை அவர் எழுதி இருக்கிறார். ஆர்.கே.நாராயணனின் 'மால்குடி டேஸ்' நூலை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். 'ஐந்து தலைமுறை நாடார் பெண்களின் கதை' (2016) என்கிற இவரது நூலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இன வரைவியல் நூலாகும்.

"லத்தீன் அமெரிக்காவில் இருந்து எப்போது ஒரு பாதிரி வாட்டிகனில் தலைமைப் பதவிக்கு வருகிறாரோ, எப்போது வட அமெரிக்காவில் ஒரு கறுப்பினத்தவர் குடியரசுத் தலைவர் பதவிக்கு வருகிறாரோ, அப்போது வட அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையிலான பிரச்னைகள் இலகு ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது" என்று கியூபா தலைவர் மாவீரன் ஃபிடல் காஸ்ட்ரோ பல ஆண்டுகளுக்கு முன்பு கூறி இருந்தார். அது 2013இல் போப் பிரான்சிஸ் வாடிகன் தலைவராக பதவி ஏற்றபோது பலித்தது. ஆம்... 2016 மார்ச் மாதம் பராக் ஒபாமா கியூபாவுக்கு விஜயம் செய்து ராவுல் காஸ்ட்ரோ உடன் செய்துகொண்ட உடன்படிக்கையால், இரு நாடுகளுக்கும் இடையே நிலவிய பனிப்போர் சற்றே விலகியது.

கியூபாவின் விடுதலை நூலை வாசித்து நான் எழுதிய விமர்சனக் கட்டுரையை, நூலை எழுதிய திருமதி நாகேஸ்வரிக்கு அனுப்பும் வாய்ப்பு எதேச்சையாக எனக்கு வாய்த்தது. கல்பாக்கத்தில் இயங்கும் ரிவார்ட் ட்ரஸ்ட் செலவுகளுக்கு நீண்டகாலமாக நிதி அளித்துவரும் 'ஆஷா ஃபார் எஜூகேஷன்' என்ற வட அமெரிக்காவாழ் தமிழர்களின் அமைப்பைச் சேர்ந்த மெல்லியல் என்பவரை நான் கல்பாக்கத்தில் சந்தித்தேன். ஆண்டுக்கு ஒருமுறை கல்பாக்கம் வந்து ரிவார்ட் ட்ரஸ்ட் நடவடிக்கைகளைக் கவனித்து ஆஷா ஃபார் எஜூகேஷன் உறுப்பினர்கள் அமைப்புக்கு கருத்துப் பதிவு செய்து அனுப்புவது வழக்கம். 2024 ஆம் ஆண்டு இவ்வாறு வட அமெரிக்காவில் இருந்து வந்தவர்தான் மெல்லியல். அவரது இனிமையான பெயரைக் குறித்து அவரிடம் விசாரித்த போது தான், மொழியியல் அறிஞரான தந்தையும் எழுத்தாளரான தாயும் தனக்கு இருப்பதை அவர் கூறினார். எழுத்தாளர் என்றதும் ஆர்வத்தினால் நான் அவரிடம் உங்கள் தாயின் பெயர் என்ன என்று கேட்டேன். நாகேஸ்வரி அண்ணாமலை என்றார். முதல் நாள்தான் புத்தகக் கண்காட்சியில் நாகேஸ்வரி அண்ணாமலை என்பவர் எழுதிய 'கியூபாவின் விடுதலை - அன்று முதல் இன்று வரை' (அடையாளம் பதிப்பகம்) என்ற நூலை நான் வாங்கி இருந்தேன். என்னைத் தவிர கியூபா குறித்து வேறொரு பெண்மணி எழுதுகிறார் என்பதில் வியந்து நான் வாங்கிய நூல்தான் அது என்றேன். அப்படியானால் படித்துவிட்டு ஒரு விமர்சனம் எழுதுங்கள் என்று அவர் கேட்டுக் கொண்டார். மகள் மூலம்தான் நான் எழுதிய விமர்சனம் திருமதி நாகேஸ்வரி அண்ணாமலை அவர்களைச் சென்றடைந்தது. பொருத்தமான விரிவான விமர்சனம் என்று திருமதி நாகேஸ்வரி தெரிவித்தாராம். மெல்லியல் எனக்குச் செய்தி அனுப்பி இருந்தார். அடுத்த முறை வட அமெரிக்கப் பயணம் மேற்கொண்டால் திருமதி நாகேஸ்வரியை சந்திக்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், காலம் அவரை நம்மிடம் இருந்து பிரித்துச் சென்றுவிட்டது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்


சென்னைக்காஞ்சி

இஃது
சென்னையின் முந்நூற்றாண்டு
நிறைவை முன்னிட்டு
எழுதியது.

இயற்றியவர்
வித்துவான் ரா. கிருஷ்ணமூர்த்தி, பி. ஏ.,
...கார் ஹைஸ்கூல்,
...ட்டை.

1249

...ள் அச்சுக்கூடம்,
...காட்டை.
...939.

பதிப்புரிமை]
[விலை 2 அணா

மதுரைக்காஞ்சியைப் போல ஒரு சென்னைக்காஞ்சி

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக்காஞ்சியைப் போல சென்னைக் காஞ்சி என்ற நூல் வந்திருக்கிறது. மாங்குடி மருதனாரின் மதுரைக்காஞ்சி 782 வரிகள் கொண்டது. இது பத்துப்பாட்டு நூலில் அதிக வரிகள் கொண்டது. பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உலகியலை உணர்த்துவதற்காக பாடப்பட்டது. மதுரையின் அழகு, ஐந்து வகை நிலம், நாளங்காடி அல்லங்காடி என எல்லாவற்றையும் வர்ணிப்பது, மதுரையை நாள் முழுக்க ஒருவன் சுற்றி வந்தால் என்ன அனுபவம் கிடைக்கும் என்பதை விவரிப்பது இந்த நூல்.

சென்னைக் காஞ்சி என்ற நூல் மதுரைக்காஞ்சி போன்றது; ஒரு வகையில் அதை முன்னோடியாக வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்டது சென்னை பட்டினத்தைப் பற்றிய விரிவான வர்ணனையைக் கூறுவது. ஆனால் இந்த நூல் மதுரைக்காஞ்சி போல் காஞ்சித் திணையை (நிலையாமை) கூறுவதற்காக எழுதப்பட்டதல்ல. இதில் நாட்டிற்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்ற ஆதங்கம் கோடிட்டு, காட்டப்படுகிறது.

அ.கா. பெருமாள்

இங்கிலாந்து அரசனான ஆறாம் ஜார்ஜ் மன்னரின் அரசியல் அதிகாரிகளைப் பார்த்து எங்கள் நாட்டை எங்களுக்கு தந்து விடுங்கள் என்று வேண்டும் தொனியில் நூல் ஆரம்பிக்கிறது.

அரசும் நில்லா ஆட்சியும் நில்லா
அளப்பரு வான்பெரு செல்வமும் நில்லா
உரோமா புரியின் உரை பெறு நிலையும்
சுமேரிய நாட்டின் பழமையும் பெருமையும்
கிரேக்க மாக்களின் நாட்டாண் முறையும்
எகிப்து மக்களின் ஏற்றமும் எழிலும்
எல்லாம் தேய்ந்து மண்ணாகியது அறிவியல்
அதனால் யான் உமக்கு உரைக்க வந்தது
சென்னை தன்னில் முன்னூறு ஆண்டு
முன்பு நீர் நட்ட மூவா மொய்ம்புடை
வித்து முளைத்து மரமாய் காய்த்து
மூத்து பழுத்து முழுமுதல் அசைந்து
நெக்கு விட்டு இனி தரும் நேரம் வாய்த்தது
இக்குறி தன்னை அறிந்து இனி இந்தியர்க்கு
ஈதல் வேண்டும் இந்திய நாட்டை

என்று நூலாசிரியர் வேண்டுகிறார்

இந்நூலின் ஆசிரியர் வித்துவான் ரா. கிருஷ்ணமூர்த்தி சிந்தாதிரிப்பேட்டை பள்ளி ஆசிரியராக இருந்தவர். இந்த நூல் 1939இல் வெளியாகி இருக்கிறது. விலை இரண்டு, மொத்தம் 26 பக்கங்கள், 402 வரிகள், ஆசிரியப்பா வடிவில் அமைந்த நீண்ட பாடல்.

சூரியன் எப்போதும் அஸ்தமனம் ஆகாத நாடு இங்கிலாந்து. 6000 மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து இந்திய நாட்டைப் பிடித்து ஆட்சி செய்கின்ற ஆறாம் ஜார்ஜ் அரசே எங்களது அவலத்தைக் கேட்பீராக! உலகில் எந்த அரசும் நிலையானதாக இருக்கவில்லை. பழைய வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். எங்களை நீங்கள் 300 ஆண்டுகளாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறீர்கள்; இனியாவது எங்களுக்கு எங்கள் நாட்டின் உரிமையை தரக் கூடாதா?

கிழக்கு இந்தியக் கம்பெனி அனுப்பிய பிரான்சிஸ் டே என்பவர் கடற்கரை அருகே இருந்த ஒரு ஊரை விஜயநகர அரசர் ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். இன்றைக்கு (1939) 300 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது அப்போது சென்னையை ஆண்ட பூந்தமல்லி நாயக்கர் என்பவர் பிரான்சிஸ் டே வணிகம் செய்வதற்கு என ஒரு இடத்தைக் கேட்டபோது பெருந்தன்மையாகக் கொடுத்து விட்டார். அவர்கள் கோட்டையையும் கட்டினார்கள்.

கொஞ்ச ஆண்டுகள் கழிந்த பின்பு உங்கள் கோட்டையை சுற்றி இருந்த கருப்பு இந்தியர்களை தனி குடியிருப்பில் அமர்த்தினீர்கள்; அதற்கு கருப்பரின் குடியிருப்பு பிளாக்டவுண் எனப் பெயரிட்டீர்கள். ஏற்கெனவே அந்தப் பகுதியில் குடியிருந்த ஆர்மீனியர், பாலஸ்தீனிய யூதர், பாரசீகர் போர்ச்சுக்கீசியர் ஆகியோர்களை விரட்டி விட்டீர்கள்; உங்களது வணிகமும் அரசியலும் நிலை பெறுவதற்கு இப்படியாக எத்தனையோ காரியம் செய்தீர்கள்.

ராபர்ட் கிளைவ் என்ற இளைஞன் உங்களுக்கு வெற்றி தேடித் தந்தான். இதன் பிறகு உங்கள் கோட்டையைச் சுற்றி உள்ள பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துக் கொண்டீர்கள். மயிலாப்பூர், நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி போன்ற இடங்களில் சில பகுதிகளை நீங்கள் வாடகைக்கு என்று அமர்த்திக் கொண்டீர்கள். உங்களது தந்திரத்தால் உங்கள் நன்மைக்காக சென்னையை நகரத் தன்மையோடு வளர்த்து வந்தீர்கள், நகரமும் வளர்ந்தது.

குளங்கள், சோலைகள், பெரிய தோட்டங்கள் இயற்கை எழிலோடு கொஞ்சிய இடங்கள் எல்லாவற்றிலும் மக்களைக் கொண்டு நிரப்பினீர்கள். எல்லாம் உங்கள் தேவைக்கு. இதனால் எங்கும் நெரிசல், மக்கள் கூட்டம் மோட்டார்களின் ஒலக்குரல், ரேடியோவின் அமைதியான குரல், படித்த பெண்கள் சாலைகளில் சுதந்திரமாகச் செல்லும் நிலையை உருவாக்குனீர்கள்; கல்லூரிகள் பெருகின; பெண்கள் படித்தார்கள்; இப்படி இந்த நகரத்தின் பெருமையை எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம்.

ஆறாம் சார்ஜ் அரசே எங்களுக்கு "நிலையில்லாத இத்தனை நிலை உள்ளது என்று மலையுறு மதியின் மனமகிழ்ந்து உற்ற ஒரு குடை ஆட்சியை ஒருவி எமக்கு நலம் பெரு நாடு நல்குவீர்" என்று வேண்டுகோள் விடுத்து நூலை முடிக்கிறார் ஆசிரியர். சென்னை நகரைப் பற்றி என். எஸ். ராமசாமி, முத்தையா, ஸ்ரீராம், நரசய்யா என பலரும் விரிவாகவே எழுதியுள்ளனர். திருவிகவின் வாழ்க்கை குறிப்பு உட்பட தனிப்பட்டவர்களின் தன் வரலாற்று நூல்களிலும் சென்னை பற்றிய விரிவான செய்திகள் வருகின்றன. கர்ணல் டி. எம். ரெய்டு எழுதிய புனித ஜார்ஜ் கோட்டையின் வரலாறு (1905), கிளின் பார்லோ எழுதிய சென்னை நகரின் வரலாறு (1921) என எத்தனையோ புத்தகங்கள் வெளிவந்துவிட்டன.

2016 இல் பாரதி புத்தகாலயம் வழி வெளிவந்த சென்னப்பட்டணம் மண்ணும் மக்களும் (இராமச்சந்திர வைத்திய நாத்) என்ற நூல் முந்தைய நூல்களை எல்லாம் ஒருசேர வைத்து விரிவாகச் சொல்லுவது.

சென்னை நகரம் முதலில் உருவாகக் காரணமாக பிரான்சிஸ் டேயைக் கூறினாலும் ஆண்ட்ரு கோகன், பெரிதிம்மப்பா, நாக பத்தன் என்ன வேறு பலருக்கும் இதில் பங்கு உண்டு Madras என்று பொதுவாக அழைக்கப்படும் இந்த நகரத்தின் சில பகுதிகள் மதரஸா என்று அழைக்கப்பட்ட பள்ளிகள் இருந்தன. இஸ்லாமிய அறிஞர்கள் வாழ்ந்த பகுதி என்னும் பெயரில் அழைக்கப்பட்ட மதரசா என்ற பெயர் பிற்காலத்தில் ஆங்கிலேயர்களின் வழக்கில் Madras ஆயிற்று என்று சொல்லுகிறார்கள்.

பிரான்சிஸ் டே 1639 ஆகஸ்ட் 22ஆம் நாளில் விஜயநகரப் பேரரசுக்கு சொந்தமான இடத்தை சந்திரகிரி மன்னரிடமிருந்து ஆண்டு வாடகைக்கு (600 பகோடா), வாங்கினார். 2290 பவுண்ட் செலவு செய்து மூன்றரை ஆண்டுகளில் ஒரு கோட்டையை கட்டினார் கோட்டை சுவர் 6. மீட்டர் உயரமுடையது கோட்டை இதன் பிறகு சென்னை நகரம் கொஞ்சம் கொஞ்சமாகப் பறந்து விரிந்தது.

கோட்டை கட்டப்பட்ட ஆரம்பத்தில் கோட்டையைச் சுற்றி இருந்த மக்கள், கோட்டையைச் சுற்றி இருந்த மண் வெளிகளில் மலம் கழிப்பதற்காக வந்தார்களாம். இது ஆங்கில வணிகருக்கும் அதிகாரிகளுக்கும் வெறுப்பைத் தந்தது. இதனால் அவர்களை வேறு இடங்களில் குடியமர்த்தினார்கள். இப்படி மாற்றிய பின்பு அந்தக் குடியிருப்புகளை பிளாக் டவுண் (கருப்பர்கள் வாழும் இடம்,) என்று அழைத்தார்களாம்.

இப்படி ஒரு நிகழ்ச்சியை சொல்லிவிட்டு நகரும் நூலாசிரியர் சென்னையில் ஒவ்வொரு பகுதிகளும் உருவான காரணத்தையும் அதன் பின்னணியில் உருவான கதைகளையும் மிகச் சுருக்கமாக சொல்லிக் கொண்டே செல்லுகிறார். இப்படி சொல்வதற்குத் தனித்தமிழை அவர் பயன்படுத்தவில்லை; ஆங்கிலச் சொல்லை சர்வ சாதாரணமாக கலந்துவிட்டுச் செல்லுகிறார்.

கம்பெனி வணிகர்கள் தங்களின் சுயலாபத்திற்காக, வசதிக்காக நகரத்தில் பல்வேறு இடங்களில் குடியிருப்புகளை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்கினார்கள். அதோடு போக்குவரத்து வசதிக்காக சாலைகளைப் போட்டார்கள். ரயிலையும் டிராம் வண்டியையும் கொண்டு வந்தார்கள் என்பதை எல்லாம் விரிவாகவே சொல்லுகிறார்.

ஆரம்பகாலத்தில் மூர் மார்க்கெட்டுக்கு வசதி உள்ளவர்களோ நாகரீகம் உடையவர்களோ செல்லவில்லை, அங்கு எல்லாம் மலிவாகக் கிடைக்கும். தரம் இருக்காது என்ற நம்பிக்கை இருந்ததையும் மேம்போக்காகச் சுட்டிச் செல்கிறார். இந்த நூலைப் படித்ததுமே 1930 - 1940 ஆம் ஆண்டுகளில் இருந்த சென்னையைப் பற்றிய சித்திரம் மனதில் உருவாகிவிடும்.

இந்த நூலில் 1939 ஆம் ஆண்டில் பேச்சு வழக்கில் இருந்த ஆங்கிலச் சொல்லுக்கு வழக்கமாகப் பயன்படுத்திய தமிழ்ச் சொல்லையும் நூலில் கையாளுகிறார். Microphone என்பதை கரிக்கடை என்றும் ரயிலை மரவட்டை வண்டி, தொடர்வண்டி என்றும் General Hospital ஐ சர்வ சிகிச்சை சாலை என்றும், கார் டிரைவரை வலவர் என்றும் Race Course என்பதை பலி விடுபாதை என்றும் பேசப்பட்டதை நூலில் கையாண்டிருப்பதைப் பார்க்கலாம்.

இந்த நூல் வரலாற்று ஆசிரியர்களுக்குக் கொஞ்சம் உதவக்கூடும்.

●

கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்.

தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்
விலை: ரூ.2200 | வெளியீடு: என்சிபிஎச், சென்னை

போராடும் மனிதனின் புதிய உண்மைகள்

நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகிய இருவேறு வர்க்கங்களின் தீய பண்புகளை எதிர்த்துத் தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு இலக்கியம் படைப்பவன் என்ற முறையிலும் புதிய சமுதாய அமைப்பைக் காணப்போராடும் சிந்தனையாளன் என்ற முறையிலும் இவ்வறிக்கையை நான் வெளியிடுகிறேன். பணமோ, பக்கபலமோ அற்ற நிலையில், சமூகத்தின் தாழ்ந்த படியிலே வளர்ந்து, தலைநிமிர்ந்த என்னை, நிலப்பிரபுத்துவப் பிற்போக்கும், முதலாளித்துவ 'முற்போக்கும்,' இருட்டடிப்புச் செய்துள்ளன! அதன் காரணமாகவே, மக்கள் மன்றத்தின் முன் மறைக்கப்பட்டிருந்த என்னை, நானே அறிமுகப்படுத்திக்கொள்ள முன்வந்தேன். *(2025:6:407)*

தான் யார்? தன் சமூக நிலைப்பாடு என்ன? என்பதை 1961 இல் தெளிவாகவே வெளியிட்டிருக்கிறார் தோழர் தமிழ்ஒளி (1925-1965); இப்பதிவில் இவர் முன்வைத்திருக்கும் சிக்கல்களைக் கவனிக்கும்போது இன்றும் இந்த ஒளியின் தேவையைச் சமூகம் வேண்டிநிற்பதே கசப்பான உண்மையாக இருக்கிறது. பாரதியை அடுத்து பாரதிதாசன் தொடங்கிவைத்த கவிதைப் பரம்பரையிலும் திராவிட இயக்க வரலாற்றிலும் பொதுவுடைமை இயக்கத்தின் பரவலாக்கத்திலும் மட்டுமல்ல, தர்க்கபூர்வமாகச் சிந்திக்கின்ற தமிழ் ஆய்வுலகிலும் தமிழ்ஒளிக்குக் கணிசமான இடமுண்டு. அறிவின் விகசிப்பு வியப்பை ஏற்படுத்துகிறது. ஆனால், அது முறையாகக் கவனப்படுத்தப் பட்டிருக்கிறதா என்பது கேள்வியே! நாற்பதாண்டுகள் மட்டுமே வாழ்ந்த இந்த ஆளுமையின் எழுத்துக்கள் பன்முகத்

முனைவர் அ.மோகனா

தன்மை கொண்டவையாக இருக்கின்றன. கவிஞர் என்பது இவர் விரும்பியேற்ற அடையாளம்; பாரதிக்கு அடுத்துச் சமூகத்தின் சலனங்களைக் கூர்மையாக அவதானித்துச் சிறுகதைகளாகவும் கட்டுரைகளாகவும் நாடகங்களாகவும் எழுதிய ஆளுமையாகத் தமிழ்ஒளி இருப்பது கவனத்திற்குரியது. இவருடைய எழுத்துக்கள் அனைத்தையும் ஆறுதொகுதிகளாகப் பேராசிரியர் வீ.அரசு தொகுத்துப் பதிப்பித்து இருக்கிறார். தொகுப்பின் அரசியலை அதன் தர்க்கத்தைத் தெளிவாக முன்வைக்கின்ற பேராசிரியரின் கையளிப்பில் ஏற்கெனவே வ.உ.சி. நூல் திரட்டு (2002), ப.ஜீவானந்தம் ஆக்கங்கள் (2007), சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத்திரட்டு (2009), மயிலை சீனி வேங்கடசாமி தொகுதிகள் (2013), அத்திப்பாக்கம் வேங்கடாசலனார் ஆக்கங்கள் (2013), சென்னை லௌகிக சங்கம், The Thinker (6 தொகுதிகள்) (2014) ஆகியவை வெளிவந்துள்ளன. அந்த வரிசையில் தமிழ்ஒளியின் ஆக்கங்களும் அதன் கனபரிமாணத்தோடு வெளிவந்துள்ளன.

வெறுமனே செய்திகளையும் படைப்புகளையும் அடுக்கித் தருவதல்ல தொகுப்புப் பணி; ஓர் ஆளுமையின் ஆக்கங்களைத் தொகுக்கும்போது அவர்குறித்த முழுப்புரிதலையும் இச்சமூகம் தெளிவாக உள்வாங்க வேண்டும்; அதற்கான நேர்த்தியை அத்தொகுப்பு தாங்கியிருக்க வேண்டும். இத்தன்மை எளிதில் வாய்ப்பது இல்லை. சமூக வரலாற்றை அறிந்து அதன் போக்கினை அசைவியக்கத்தை எதிர்காலத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவம் தேவைப்படும். பேராசிரியர் தொகுத்துப் பதித்துள்ள தமிழ்ஒளியின் ஆக்கங்களை வாசிக்கும்போது இத்தன்மையை உணரமுடிகின்றது. கவிதைகள், காவியங்கள், சிறார் பாடல்கள்-கதைகள், சிறுகதைகள்-ஓரங்க நாடகங்கள், ஆய்வுகள் - கட்டுரைகள்- தன் வரலாறு என வகைமை அடிப்படையிலும் கால வரிசையிலும் தமிழ் ஒளியின் ஆக்கங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தொகுப்பின் தொடக்கத்திலும் 'தோழர் தமிழ்ஒளி எனது பயணம்', தோழர் தமிழ்ஒளி காலம்-கருத்து, தோழர் தமிழ் ஒளி ஆய்வுப் பயணம், கவிதைகள் உருவாக்கப் பின்புலம்... ஆகிய பதிவுகள் தரப்பட்டிருக்கின்றன. இவை 'தமிழ்ஒளி' என்ற ஆளுமை குறித்த அறிதலே இல்லாதவருக்கும் அவர்பற்றிய ஒரு சரியான அவதானிப்பை வழங்கக் கூடியவை. இப்பதிவுகளைத் தொடர்ந்து தமிழ்ஒளியின் எழுத்துக்களுக்குள் பயணித்தோமானால் அவற்றின் வீரியத்தை நம்மால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

இந்த ஆறு தொகுதிகளினூடாகப் பெற்ற மன அவசங்களைக் கீழ்க்கண்ட வகையில் தொகுத்துக் கொள்வோம்.

- தமிழ்ஒளி எழுதத் தொடங்கிய காலத்தில் தமிழ்நாடு - தமிழ் (1944-1947) உள்ளிட்ட உணர்வுகள் கொந்தளிப்பை அடைந்திருந்தன. பாரதிதாசனின் கவிதைகள், குறுங்காவியங்களின் மீதான இளைய சமூகத்தின் ஈர்ப்பு மிகுந்திருந்தது. தமிழ்ஒளியும் அதற்கு விதிவிலக்கில்லை. ஒடுக்கப்பட்ட பின்புலத்தில் இருந்து வந்த விஜயரங்கத்திற்குச் சமூக விடுதலை மீதான ஈடுபாடு; இயல்பாக திராவிட இயக்க செல்நெறியில் பாதை அமைத்துக் கொடுத்துள்ளது. 1944 முதல் திராவிட நாடு, குடியரசு, பிரசண்ட விகடன் தமிழ் முரசு, கவிமலர், புதுவாழ்வு ஆகிய திராவிட இயக்கச் சார்பான இதழ்களில் இவருடைய கவிதைகள் வெளிவந்தன. தொடர்ச்சியாக மரபுப் பாவடிவங்களில் சமூகநீதிக் கருத்துகளைப் பெரும் வீச்சுடன் எழுதியுள்ளார்.
- கரந்தைக் கல்லூரியிலிருந்து வெளிவந்த பிறகு சாதிய முரண்களோடு வர்க்க முரண்பாடும் முதலாளித்துவச் சுரண்டலும் மிகப்பெரிய வன்முறையை மக்களின் மீது நடத்தப்படுவதை விமர்சிக்கிறார். இதற்குப் பொதுவுடைமை இயக்கம் அவருக்கு விரிவான களத்தைத் தருகிறது. மேலும் திராவிட இயக்கத்தோடு நேர்ந்த சில கருத்து முரண்களும் அவரைப் பொதுவுடைமை இயக்கத்திற்குள் இணைத்துக் கொள்ள காரணமாகின. மேதினக் கவிதையொன்று எழுதித் தருமாறு பாரதிதாசனைக் கேட்டபோது குயில் நினைத்தபோதெல்லாம் கூவாது என்று அவர் கூறியதாகச் செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. அவர் தொடர்ச்சியில் வந்த தமிழ்ஒளி மேதினக் கவிதை எழுதுகிறார். எண்ணிக்கை அடிப்படையில் திராவிடக் கருத்தியலோடு பொதுவுடைமை சார்ந்த பதிவுகள் தமிழ் ஒளியின் எழுத்துக்களில் மிகுந்திருக்கின்றன. இந்தியாவில் இடதுசாரி இயக்கம் எவ்வாறு கால்கொண்டது என்ற வரலாற்றுப் பின்புலத்தையெல்லாம் கவிதையாக வடிவத்த ஒரே கவிஞர் தமிழ்ஒளிதான். இவருடைய பல கவிதைத் தொகுதிகள், குறுங்காவியங்களை வெளியிட்ட பெருமை இடதுசாரி இயக்கத்தையே சாரும்.
- 1955 - 1965 காலம் தமிழ் ஒளி மிகச் சுதந்திரமாக எழுதிய காலமாக வீ.அரசு அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். உண்மையில் திராவிடக் கருத்தியலோடு வளர்ந்து இடதுசாரி இயக்கத்தில் கிளைவிட்டதால்

சமூகப் பிரச்சினைகள் குறித்த தீர்க்கமான தெளிவு தமிழ்ஒளிக்கு ஏற்பட்டிருக்கிறது. இத்தன்மை குறிப்பிடத்தக்கது. அந்தத் தெளிவு படைப்புகளிலும் வெளிப்படுகிறது. மனிதனின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை, சமசுகிருதம் - தமிழ் தொடர்பான கட்டுரை, சிலப்பதிகாரம், திருக்குறள் எனப் பலதளங்களில் தர்க்கபூர்வமான ஆய்வுகளைத் தமிழ்ஒளி செய்திருக்கிறார். இவை இத்துறை சார்ந்த முன்னோடி ஆய்வுகளாக இருக்கின்றன. மேலும் சமகால நிகழ்வுகள் குறித்தும் அவ்வப்போது பல்வேறு கட்டுரைகள் எழுதியுள்ளார்.

- தமிழ்ஒளியின் ஆக்கங்களில் வெளிப்படும் மிக முக்கியமான கூறு அதன் மொழி; பாரதிதாசனின் தாக்கம் கவிதைகளில் இருந்தாலும் மாறுபட்ட சிந்தனை மரபு அக்கவிதைகளில் தனித்தன்மையைக் கொண்டு வந்து விடுகின்றன. அடுத்து, இதழ்வழி உருப்பெற்ற சிறுகதைப் படைப்புகள்; முற்போக்கு மரபு சார்ந்த கருத்துகளைக் கொண்டிருந்தன. இதில் யாருடைய தாக்கமும் இன்றி இயல்பாகத் தமிழ்ஒளிக்கே உரித்தான மொழியை அடையாளங் காணமுடிகின்றது. பிற்காலத்தில் சிறுகதைகளுக்காகக் கொண்டாடப்பட்ட பல ஆளுமைகளும் குறிப்பிட்ட காலகட்டத்தில் இடதுசாரிக் கருத்துநிலைகளைக் கொண்டவர்களாகவே இருந்திருக்கின்றனர். அவர்களுள் தமிழ் ஒளியும் இருக்கிறார். அவருடைய சிறுகதை மொழி தனித்த ஆய்விற்கு உரியது. கவிதை, குறுங்காவியம், ஓரங்க நாடகம், ஆய்வு, தன் வரலாறு, சிறுகதை என வகைமை எதுவாக இருந்தாலும் அதில் தமிழ்ஒளியின் முத்திரை தனித்துத் தெரிவதை மொழியினூடாக உணரமுடிகின்றது.

இந்த ஆறுதொகுதிகளும் இதுபோன்ற மேலும் பல திறப்புகளைத் தருகின்றன. இன்றளவும் பேசத் தயங்கும் பல சமூகப் பிரச்சினைகளை எளிதாகப் பகடி மொழியில் எழுதிச் சென்றிருக்கிறார் தமிழ் ஒளி. அவருடைய பிக்ஷுவுக்குக் கல்யாணம் என்ற கவிதை, மேல்நாடு சென்றிருந்த பிக்ஷுவுக்குக் கல்யாணம் / தோல் உணர்ச்சி பிக்ஷுதனைத் தூண்டி விடுகிறது. என்று தொடங்குகிறது. அக்கவிதையில்,

காவியுடை போர்த்திருந்தும் காமவுடல் சாகவில்லை / மேவும் ஜெயம் எங்கே / ஆசைவென்ற நோன் பெங்கே /... போலந்து தேசத்தில் மக்கள் புதுவாழ்வைக் / காலால் மிதித்துவிக் காதகர்கள் கூடிநின்றார் / கூடிநின்ற காதமின் கூட்டத்தில் ஓர் பெண்ணின் / ஜோடி கிடைத்ததினால் சொக்கிவிட்டார் பிக்ஷு மகான் / இந்து தருமமெல்லாம் எங்கேயோ விற்றுவிட்டார்/ அந்த இன்பம் யார் தருவார்?/ ஆதிசிவன் கொடுப்பானோ/... சோவியத்தைத் திட்டுவதே தன்தொழிலாய்க் கொண்டிருந்த/ காவி உடைக் காரனுக்குக் கல்யாணம் இப்பொழுது/ ‘மூத்துநரைத்து விட்டான்; மூப்பு வந்து நிற்குங்கால் / கூத்தோ இதுவென்று கூட்டம் சிரிக்கிறது... *(2025:1:161)*

இன்றைய சூழலில் கவிந்துகிடக்கும் காவி அதிகாரத்திற்கு எதிரான குரலாகவும் தமிழ்ஒளியின் இக்கவிதையை நாம் கொள்ளமுடியும். இப்படிப் பாடிய பிறிதொரு கவிஞனை அவர் சமகாலத்திலும் காணமுடியவில்லை. அவன் அமரன் என்ற சிறுகதையின் பகுதியொன்று வருமாறு,

பழைய சம்பிரதாயங்கள், பண்புகள் என்ற மூடு திரையினுள் மக்களின் கழுத்தை நெரித்துக் கொல்லும் ஏகாதிபத்தியவாதிகள் அமரனைக் கண்டு சீற்றங் கொண்டனர். பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றதற்காக அவனைக் குற்றவாளியென்று தீர்ப்பளித்தனர். அமரன் தலைமையில் தேசத்தொண்டு புரிந்து வந்த புரட்சி இயக்கம் சட்ட விரோதம் ஆக்கப்பட்டது. அமரனை சிறைப்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது’ *(2025:5:95)*.

இறுதியில் அரச வன்முறையால் இறந்தாலும் அமரன் அமரனாகவே இருக்கிறான். மக்கள்மனதில் என்று முடிகிறது இக்கதை. ஆண்டாண்டு காலமாகச் சமூகத்தின் நலம் விரும்பும் அமரன்கள் தேசத் துரோகிகளாகவே சித்திரிக்கப்படுகின்றனர். படுகொலை செய்யப்படுகின்றனர். அதையேதான் இச்சிறுகதையும் காட்சிப்படுத்துகின்றது. இறுதியாக இன்றளவும் பொருந்தும் மனிதாபிமானம் குறித்த தமிழ்ஒளியின் கருத்தோடு இப்பதிவை நிறைவு செய்யலாம்.

மனிதாபிமானம் மரக்கறி வாதமல்ல; மலட்டுத்தனமான அஹிம்சா வாதமல்ல; அது சுரண்டலைப் பற்றி ஒப்பாரி வைப்பதில்லை. சுரண்டலை ஒழிக்கும் போராட்டத்தின் பேராயுதமாக விளங்குகிறது. அது யுத்தத்தைப் பற்றித் தார்மீகக் கண்டனம் செய்வதில்லை; யுத்த வெறியர்களை அழிப்பதற்கான போராட்ட ஆயுதமாக விளங்குகிறது. மனிதனை மனிதன் சுரண்டும் முறையையும் யுத்தத்தையும் ஒழிக்கும் போராட்டத்தில் வெற்றியடைவதே மனிதாபிமானத்தின் வெற்றியாகும். *(2025:6:453)*

●

கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர்,
தியாகராாசர் கல்லூரி, மதுரை

திண்டுக்கல் வரலாறு

எம்.எஸ்.முத்துசாமி ஐபிஎஸ்.

திண்டுக்கல் சீமை | தொகுப்பாசிரியர்: பூர்ணா
விலை: ரூ.170 | வெளியீடு: என்சிபிஎச், சென்னை

திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் அருகில் உள்ள பொன்னிமான்துறையைச் சேர்ந்த ஏசுதாஸ் என்ற இயற்பெயர் கொண்ட பூர்ணா என்பவர் தொகுத்த நூல் இது.

மூவர், ஆளுக்கு இரண்டு கட்டுரைகள், ஏனைய இருபத்திநான்கு பேர், ஆளுக்கு ஒரு கட்டுரை, என மொத்தம் முப்பது கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் வித்தியாசமானவைகள். திண்டுக்கல், சித்தரேவு, கன்னிவாடி, கொடைக்கானல், பழனி, வேடசந்தூர், அய்யலூர், நத்தம், நிலக்கோட்டை என திண்டுக்கல் மாவட்டத்தின் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், பண்பாடு, இலக்கியம் என பல்வேறு அம்சங்களை 360 டிகிரியில் படம்பிடித்து இருக்கிறது இந்தத் தொகுப்பு.

திண்டு என்றால் தலையணை. 1210 அடி நீளம், 900 அடி அகலம், 280 அடி உயரம் கொண்ட தலையணை போன்ற கல், திண்டுக்கல்.

கி.பி. 1605 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கப்பட்டு, 1659 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, வேலு நாச்சியார், மருது சகோதரர்கள் போன்ற பல தலைவர்கள் இக்கோட்டையில் தங்கியுள்ளனர்.

பத்மகிரி என்பது திண்டுக்கல். ‘பத்மகிரியார் தென்றல் விடு தூது’ என்ற தலைப்பில் உள்ள நூல், திண்டுக்கல்லின் பெருமை பேசும் நூல். தமிழ் இலக்கியத்தில், தென்றலைத் தூதுவிட்ட முதல் நூல் இதுதான்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில், ஆங்கிலேயரைத் தோற்கடிக்க முதன்முதலாக தென்னிந்திய கூட்டமைப்பை (Southern Federation) ஏற்படுத்தியவர் விருப்பாச்சி கோபால் நாயக்கர். ஆங்கிலேயர்களிடம் இறுதி வரை, சரணடைய மறுத்த இவர், 1801 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள், தற்போது திண்டுக்கல்லின் தலைமை அரசு மருத்துவமனையின் அருகிலுள்ள கோபாலசமுத்திரம் குளத்தின் கரையிலிருந்த மரத்தில், ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்.

இந்தக் குளம், வேலு நாச்சியாருக்காக திரட்டப்பட்ட படைகளின் தாகம் தீர்க்க கோபால் நாயக்கர் வெட்டிய குளம் என்பது கண்ணீர்க் கதை.

திண்டுக்கல் பகுதியில் இருபத்தி ஆறு பாளையக்காரர்கள், ஜமீன்தாரர்களாக இருந்தார்கள். அவற்றில் அளவில் பெரியது கன்னிவாடி.

கன்னிவாடி மகாராஜாவின் மந்திரியாக இருந்த திண்டுக்கல் வீர முத்துப் பிள்ளை ஏற்பாட்டில்தான் கி.பி.1851 ல் நாலடியார் என்னும் இலக்கிய நூல் உரையுடன் பதிப்பிக்கப்பட்டது.

2400 ஆண்டுகளுக்கு முன்பு பாடப்பட்ட புறநானூறு, இன்றைய பழனியை, பொதினி என்று குறிப்பிடுகிறது. குளிரில் நடுங்கிய மயிலுக்கு, போர்வை தந்த பேகன் ஆட்சி செய்த இடம் பழனி.

பல்வேறு குறிப்புகள், பழனிமலை இறைவனை, சிவபெருமானின் இளைய மகன் என்று குறிப்பிட்டபோது, கி.பி. 1520 ஆம் ஆண்டுக் கல்வெட்டு.

பழனிமலையை முருகன்மலை என்று கூறுகிறது. கலையம்புத்தூரில் கிடைத்த ரோமானிய நாணயங்கள், பழனியை வணிகத் தலமாகவும், பழனிப் பாவலர்கள் பட்டியல், பழனியை இலக்கிய நகரமாகவும் எடுத்தியம்புவது தமிழுக்குச் சிறப்பு.

1871 ஆம் ஆண்டு வேடசந்தூர் பகுதிகளில் நடந்த பண்டுக்கலவரம், மற்றும் அய்யலூர் பகுதியின் சிறப்புக்கள், நமக்கு ஆச்சரியம் அளிக்கின்றன.

2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஊர் நத்தம்.வடநாட்டு முஸ்லீம்கள் படையெடுப்பின் போது மதுரையைக் காக்க நத்தம் பகுதி கள்ளர் இன மக்களின் பங்களிப்பு அளப்பரியது. கி.பி. 1757,1760,1774 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நத்தம் போர்கள் சிறப்பு வாய்ந்தவை.

10.2.1755ம் தேதி மணப்பாறையிலிருந்து மதுரைக்கு வந்த ஆங்கிலேயப் படை தளபதி ஹெரான், நத்தம் சிவாலயத்தைக் கொள்ளையடித்தான். 25.5.1755ம் தேதி மதுரையில் இருந்து ஆயிரம் வீரர்களுடன் மணப்பாறைக்குத் திரும்பிய அவனது படையில், 970 பேர்களை, நத்தம் கணவாய் பகுதியில் வெட்டிக் கொலை செய்தனர், நத்தம் பகுதியில் வாழ்ந்த கள்ளர் இன மக்கள்.

கி.பி. 1520,1525ம் ஆண்டுகளில் மொகலாயப் படைகள் விஜயநகரப் பேரரசை தாக்கிய போது, திண்டுக்கல் பகுதியிலிருந்து முண்டாசு கட்டிக்கொண்டு முதலில் ஓடியவர் மாக்காளசாமி நாயக்கர்.

மொகலாயர்கள் விரட்டப்பட்டதன் விளைவாக மாக்காளசாமி நாயக்கருக்கு ஒன்பது ஊர்கள் வழங்கப்பட்டன. இப்போதைய நிலக்கோட்டைக்கு தெற்கே அணைப்பட்டிக்கு மேற்கே 26 ஏக்கரில் கட்டப்பட்டதே நிலக்கோட்டை ஜமீன். நிலக்கோட்டைக்கு ஒன்பதூர், நவபுரி, பெஞ்சை என்ற பெயர்களும் உண்டு.

நிலக்கோட்டையின் புகழ்மிக்க ஜமீன்தார் நாகம கூளப்ப நாயக்கர். இவர் சிறந்த வீரர். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படையுடன் நாய்ப் படையும் வைத்திருந்தார்.

மதுரை நாயக்க மன்னர்களைக் காக்க இலங்கை சென்று போரிட்டு கண்டி அரசனைக் கொன்றவர்.

அம்மைய நாயக்கனூர் ஜமீனில், மக்கள் விளைவித்த பொருட்களில், மூன்றில் இரண்டு பங்கை ஜமீனே சுருட்டிய போது, உழவர் பெருங்குடி மக்கள் அம்மையநாயக்கனூர் ஜமீனை எதிர்த்துப் போரிட்டனர் என்பது வரலாறு.

ஆனால், நிலக்கோட்டை ஜமீனான கூளப்ப நாயக்கரோ, கடுமையான பஞ்சத்திலும் வரிவசூல் உயர்த்தாதவர். ஆங்கிலேயர்களின் அடக்குமுறையால், வரிவசூல் என்ற பெயரில் இவரைக் கைதுசெய்ய ஆங்கிலேயர்கள் முயன்ற போது, எண்பத்தியோரு கிராம மக்கள் இவரைச் சூழ்ந்துநின்று காத்தனர் என்பது மக்கள் வரலாறு.

இவரைப் பற்றிய சிற்றிலக்கியங்களே, கூளப்ப நாயக்கன் காதல், விறலி விடு தூது, ஆகியவை.

மக்களை நேசித்த மாமனிதர்கள் இன்றும் இலக்கியங்களில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள், என்பதைச் சொல்வதே'திண்டுக்கல் சீமை.'

●

கட்டுரையாளர்: காவல்துறை தலைவர் (ஓய்வு)

இணை நாவலும் பெண் வெளியும்

ஜெ.ராஜா

இணை நாவல் ஜமீந்தாரர் காலத்திலிருந்து இன்று வரை சமூகத்தில் பெண்களின் வளர்ச்சிக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்டிருக்கும் கட்டுகளைத் தகர்க்கிறது. நான்கு தலைமுறை பெண்களான வேதவல்லி, திலகவதி, கல்யாணி, சாரதா, சுசித்ரா, பீனு என எழுத்தாளர் இந்துசெல்லா உருவாக்கியுள்ள பெண்கள் துடுக்குத்தனம் நிறைந்தவர்களாகவும், வாழ்க்கையைத் துணிவாக எதிர்கொள்பவர்களாகவும், அறம் உடையவர்களாகவும் உள்ளனர். புனை கதையாக மட்டும் எடுத்துச் செல்லாமல் சில புரிதலுக்காக தொன்மங்களையும், அன்றைய இந்திய அரசியல் சூழலையும், பொதுவுடைமைப் போராட்டங்களையும் அதன் விளைவால் சமூகம் அடைந்த வளர்ச்சிகளையும் பெண்களின் பங்களிப்புகளையும் திறம்பட எடுத்தியம்புகிறார்.

பெண்களின் வெவ்வேறு மன நிலைகள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், நிராசைகள், பாலின சமத்துவம், பெண்ணின் சுயசிந்தனை, குடும்பம், திருமண உறவு என நாவல் விரிவடைகிறது. ஒவ்வொரு காலப் பெண்களும் நாவலில் மையக் கதாபாத்திரமாகி ரிலே ஓட்டப்பந்தயம் போல் நாவலை அடுத்த தலைமுறை பெண்ணிடம் கொடுத்துவிட்டு மறைகின்றனர். அந்தக் கதாபாத்திரத்தைச்

சுற்றியே பிற பாத்திரங்களும் அந்தப் புனைவிற்கு வலுசேர்க்கின்றன.

வேதவல்லி நாவலில் தேவதாசியாக அறிமுகம் செய்யப்படுகிறாள். ஜமீன் மனைவியான வேதவல்லியிடம் ஆங்கிலேய சப்-கலெக்டர் துரை கடவுளின் மனைவியாக வாழ்கின்ற இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறதா எனக் கேள்வி கேட்கிறார். அதற்கு வேதவல்லி கடவுளுக்காகப் படைக்கப்பட்ட நாங்கள் மனிதர்களின் இச்சையைப் பூர்த்தி செய்கிறோம் எனக் கூறும் பதிலானது, தேவதாசி பெண்களின் எதிர் கதையாடலாக அமைகின்றது. விருப்பம் இல்லாத தகப்பன் வயதுள்ள கணவனுடன் வாழ்ந்தவளான வேதவல்லி வெள்ளைக்கார துரையிடம் தன் இதயப்பூர்வமான காதலை வெளிப்படுத்துவது அக்காலகட்டத்தின் சம்பிரதாயங்களை எல்லாம் உடைத்தெறிவதாக அமைகின்றது. தன் மகளான திலகவதி ஒருபோதும் தன்னைப்போல இருக்கக் கூடாது அவளைச் சமுதாயம் மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மகளுக்குத் தமிழ், சமஸ்கிருதத்தோடு ஆங்கிலம் கற்றுத்தர ஏற்பாடு செய்வது கல்வி அனைவருக்குமானது; மற்றும் தான் வாழும் சமூக நிலையினைக் கல்வியே மாற்றும் என்பதையும் நிறுவுகிறாள் வேதவல்லி. அதன் அடிப்படையில் நான்காம் தலைமுறை நவீனப் பெண்ணான சுசித்ரா நன்றாகப் படித்து பட்டம் பெற்று ஐடி கம்பெனியில் பணியாற்றி கை நிறைய பணம் சம்பாதித்தாலும் அவள் மாமியார் எப்படியாவது மருமகளைக் குற்றம் கண்டுபிடித்து தனக்குக் கீழ் வைத்துக்கொள்ள வேண்டும் என நினைத்து தன் கணவனிடம் குறைகூறுகிறாள். சுசித்ராவின் படிப்பும் அவள் வேலையும் அவளுக்கென்று தனி அந்தஸ்தைக் கணவனிடமும் மாமனாரிடமும் பெறவே மாமியாரால் அதிகாரம் செலுத்த முடியாமல் போகிறது.

திருமணம் என்பது பெண்ணிற்கு புதிய மதிப்புகளையும், புதிய நிலைகளையும் கொடுத்து புதிய கடமைகளையும் இச்சமூகம் அவளிடம் எதிர்பார்க்கிறது. அத்துடன் அவளுக்குச் சில குண நலன்களையும், அக்குண நலன்கள் இல்லாத நிலையில் அவளைச் சமுதாயம் இழிவுபடுத்துவதையும் சமுதாய வரலாற்று வழி நாம் காணமுடிகிறது. அந்தவகையில் திலகவதி தேவதாசி வேதவல்லியின் மகளாக இருந்தாலும் அக்காலகட்ட பெண்ணடிமைத்தனங்களை உடைத்தெறியும் புரட்சிகரப் பெண்ணாக நாவலில் வலம்வருகிறாள். ஆரம்பக் காலங்களில் தேவதாசிப் பெண்களைக் கோயில் திருவிழா, திருமணம் போன்ற வைபவங்களில் மட்டுமே காணமுடியும் என்றிருந்தது. இந்நாட்களில் இப்பெண்களைத் தனிமையில் பார்க்க முடியாது என்ற மரபினை தன் காதல் மூலம் கட்டுடைக்கிறாள் திலகவதி. திருவேங்கடத்தைக் காதல் செய்யும்போது சிலப்பதிகார கோவலனைக் கையிலெடுத்து ஆண்கள் மட்டுமே தேன் உண்ணும் வண்டுகளாக ஒவ்வொரு மலராய்ச் சென்று சுவைக்கின்றனர் என எள்ளி நகையாடி கண்ணகி, கோவலனாக மாறியிருந்தால் இளங்கோவடிகளின் எழுத்தாணிக்கு வேலையில்லாமல் போயிருக்கும் என உரையாடுவது திலகவதி பெண்ணியப் புரிதல் உள்ளவளாக இருப்பதை அறிய முடிகிறது. தாய்வழி தேவதாசி அடிமைத்தனத்தை ஒழித்து அக்காலகட்டத்தில் வாழும் பிறபெண்களைப்போல் வாழ்வியலைத் தொடங்கி மற்ற தேவதாசி பெண்களும் இம்மரபிலிருந்து வெளியில் வரலாம் என்று வழிகாட்டியாகிறாள். பின் தான் கற்ற ஆங்கில மொழியறிவை ஊரிலுள்ள தலித் மக்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி ஊரின் தலைமையைக் கல்வியறிவால் ஏற்றுப் புது சமுதாயம் படைப்பவளாக இயங்குகிறாள் திலகவதி. கணவனான திருவேங்கடத்தின் அரசியல் ஈடுபாடுகளிலும் போராட்டங்களிலும் தானும் கலந்துகொண்டு உற்ற இணையாகவும் செயல்படுகிறாள். திலகவதி மரித்தபின் திராவிட இயக்கம் இவரின் சமூக கடமைகளை மறக்கமுடியாமல் சிலை வைத்து கௌரவிப்பது என்பது நல்லது செய்ய, நல்ல குலத்தில் பிறக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை அழுத்தமாகக் கூறுவதாக அமைகின்றது.

நான்காம் தலைமுறையான சாரதாவிலிருந்து நாவல் தொடங்குகிறது. அவளுக்கு இரண்டு பிள்ளைகள். சாரதாவின் ஆரம்பகாலப் புரிதலானது பெண்கள் சகமனிதர்களிடம் எல்லா சந்தர்ப்பத்திலும் விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் நாட்களை நகர்த்திச் செல்வது அவர்களின் சாமர்த்தியத்தைப் பொறுத்தது. ஏனெனில் அவள் அழகாகக்கூட இருக்கத் தேவையில்லை, அவள் பெண்ணாக இருந்தால் போதும் என்ற அளவில் இருந்தது. கணவன் மறைவிற்குப்பின் சாரதா தான் செய்த பணியைத் துறந்து ஜெகதீசன் கம்பெனிக்கு வேலைக்குச் செல்கிறாள். அங்கு ஜெகதீசனுக்கு சாரதா மீது நன்மதிப்பு வருகிறது.

இங்கு ஜெகதீசன் மனைவியாகிய ஜீவிதாவைப் பிரிந்து வாழ்பவர். ஜெகதீசன் மனைவியாகிய டாக்டர் ஜீவிதா அரசியல் தலைவரின் மகனுடன் உணவு விடுதியில் தங்கியிருந்ததைப் பார்த்தவன் கோபத்துடன் மனைவி என்கிற அந்தஸ்தை இழந்தவளோடு இனி இணைவது என்பது தெரிந்தே எச்சில் சோற்றை உண்பது போல என தன் இணையான அதாவது தனக்கெனவே படைக்கப்பட்ட புத்தகம் என்று புகழ்ந்தவளை விட்டுப் பிரிகிறான். ஜெகதீசன் போன்ற ஆண்கள் பெண்களை எவ்வாறு புரிந்துள்ளனர் என்ற அவலங்களை குறிப்பிடுகிறார் இந்து செல்லா.

இக்காலகட்டத்தில் ஜெகதீசன் உடல்நலக்குறைவு பெற்ற தருணங்களில் சாரதாவே ஜெகதீசனின் கம்பெனியைக் கவனிப்பது மட்டுமல்லாமல் ஜெகதீசனையும் கவனித்துக்கொள்கிறாள். ஜெகதீசனுக்கு சாரதாவை இணையாக்கிக்கொள்ளவே வெளிப்படையாகவே முயல்கிறான். இங்குச் சாரதாவின் பிள்ளைகள் தாயின் விருப்பங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஏனெனில் ஒரு பெண் ஐம்பது வயதைக் கடந்தவளாக இருந்தால் இன்னொரு இணையை அவள் தேடக்கூடாது என்ற மரபைக் கட்டி வைத்துவிடுகின்றனர். இங்கு முதுமையில் ஜெகதீசன் இணையைத் தேடுகிறான். சாரதா ஜெகதீசன் இருவரும் ஐம்பது வயதைக் கடந்தவர்களாக இருந்தபோதும் அவர்கள் நட்பைத் தவறான புரிதலுடன் சுசித்ரா மாமியார் தன் கணவனாகிய தண்டபாணியிடம் கூறுகிறாள். அதற்கு தண்டபாணி "அறுபது வயதுக்கு மேல் என்ன பண்ண முடியும்? இரவு முழுவதும் ஒன்றாகத்தான் படுத்துக்கொண்டிருக்கிறோம். நமக்குள் இந்த வயதான காலத்தில் என்ன நடந்துவிட்டது?" என உரையாடுவது இணைக்கான அர்த்தங்களாக இச்சமூகம் புகட்டும் அனைத்தையும் கேள்விக்குரியதாக மாற்றுகிறது.

சாரதா உடல்நலம் சரியில்லாத ஜெகதீசனை படுக்கை அறையில் ஒரே மெத்தையில் படுத்திருந்து மருந்து கொடுத்துக் கவனித்தாலும் அவர்களுக்குள் எந்த உடல் பகிர்வும் ஏற்படவில்லை. ஜெகதீசன் சாரதாவிடம் 'துணையாக இருக்கக்கூடிய பெண் என்பவள், உடல் இன்பத்தை அளிக்க வேண்டும் என்பதில்லை. ஒரே படுக்கையில் கைக்கு எட்டும் தூரத்தில் படுத்து எழுந்தால் கூடப் போதும். ஒரு ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் துணை என்கிற அந்த இருப்பே ஆனந்தத்தையும் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் கொடுக்க வல்லது' இவ்வாறு கூறுவது என்பது ஜீவிதாவிற்கு இழைத்த அநீதி இங்குப் புலப்பட்டாலும் உடல் அரசியலைச் சுட்டுகிறார் இந்து செல்லா. இங்கு சாரதாவை வைத்து இணை என்பது உடல் உறவுக்கானது மட்டும் இல்லை, அது அக உணர்வுக்கானது என்பதை இணைக்கான அர்த்தங்களாக வெளிப்படுத்துகிறார் இந்து செல்லா.

குடும்பங்களின் உணர்ச்சியின் வெளிப்பாடே நாவல். மனிதன் சேர்ந்து வாழும் இயல்புடையவன். துணையுடன் இருக்கும் இயல்பை உடையவன். அதற்கு சமூக அங்கமான ஓர் இணை தேவை. அன்பும் அக்கறையும் இருக்கும் இணை வேண்டும். பெரும்பாலும் இரண்டு இணையை வைத்தே கதை நகர்வு அமைகின்றது. ஓர் இணையுடன்தான் வாழவேண்டும் என்று பெண்களுக்கு எழுதப்படாத சட்டம் இருந்த காலங்களில் அவள் மற்றொரு இணையுடன் சேர்ந்து வாழ்ந்தால் பல கெட்ட பெயர்களை வைத்து பெண்களை இழிவுபடுத்தும் காலங்களில் கதையில் உள்ள பெண்கள் தங்களுக்குப் பிடித்த இணையுடன் வாழ்வதையே விரும்புகின்றனர். இங்குக் கணவன் மறைவிற்குப் பின் வேதவல்லி சீனிவாச ரெட்டியுடனும், ஜீவிதா ஜெகதீசனுடனும் வாழ்ந்தாலும் அரசியல் தலைவரின் மகனுடனும் வாழவே ஆசைப்படுபவளாகத் தனக்கான துணையைத் தாங்களே தேர்ந்தெடுத்து வாழ்வதையே விரும்புகின்றனர். இப்பெண்கள் ஒரே துணைதான் காலத்திற்கும் என்ற மரபை உடைத்து சமகாலத் துணைகளைத் தேர்ந்தெடுப்பவளாக உள்ளனர். காமம் இல்லாமலும் ஒரு பெண்ணால் இணையாய் வாழமுடியும். அதனால் ஒரு மனிதனின் ஆயுளும் ஆரோக்கியமும் ஆனந்தமும் கூடும் என்ற கருத்தை முன்வைத்து நாவல் நிறைவடைகிறது.

துணைநூற்பட்டியல்:

1. இணை - இந்துசெல்லா, வேரல் புக்ஸ், ஜூலை - 2024
2. தமிழ்ச் சிறுகதை வரலாறும் விமர்சனமும் - (தொ.ஆ) சுப்பிரமணி இரமேஷ், காலச்சுவடு, டிசம்பர் - 2019.

●

கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர், தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக்கல்லூரி, சென்னை – 600072.

அம்பேத்கரை இந்தியச் சமூகத்தின் ஒடுக்கப்பட்டோருக்கான அடையாளப்படுத்துதலில் இருந்து விடுவிக்கும் பணியை இத்தொகுப்பு செவ்வனே செய்கிறது.

அம்பேத்கர் ஆக்கங்கள்

அண்ணலுக்கு ஓர் அறிவஞ்சலி

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி உலக வரலாற்றிலும் - இந்திய வரலாற்றிலும் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்திய காலகட்டம். தொடர்ந்த உலகப் போர்கள், பிரித்தானியத்திற்கு எதிரான கிளர்ச்சிகள், இந்திய விடுதலைப் போராட்டம் ஆகியவை மட்டுமே அந்த நூற்றாண்டின் முக்கியத்துவத்திற்குக் காரணமல்ல. பழமைவாதமும், பிற்போக்குக் கருத்தியலும் ஊறிப்போய்க் கிடந்த இந்திய நிலப்பரப்பில் உருவான சமூக மறுமலர்ச்சி குறித்த சிந்தனைகளும் அவற்றை முன்னெடுத்த ஆளுமைகளும் 19 ஆம் நூற்றாண்டினை வரலாற்றின் முக்கியப் புள்ளியாக மாற்றினர். ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, ஈஸ்வர சந்திர வித்யாசாகர், M.G. ரானடே போன்றோர் சமயம் சார்ந்த சிக்கல்களையும் காந்தி, திலகர், அம்பேத்கர், பெரியார் போன்றோர் அரசியல் முன்னெடுப்புகளையும் தீவிரமாகக் கைக்கொண்ட காலகட்டம் அது. இவர்களில் அண்ணல் அம்பேத்கரை ஒரு தலித் தலைவராகவே இன்றளவும் பொதுச்சமூகம் முத்திரையிட்டு வைத்திருப்பது அறியாமையினால் மட்டுமல்ல, அது ஒரு வகையான செயல் திட்டம் (Planned Conspiracy). மாயைகளை உடைக்கவேண்டியதும், உண்மைகள் பொதிந்து கிடக்கும் ஆவணங்களைப் பரவலாக்குவதும் அறிவுச் செயல்பாட்டின் முக்கியக் கடமை. இப்படியான பணிகளின் சமீபத்திய ஆச்சரியமே தமிழக

செ. சதீஸ்குமார்

அரசின் தமிழ்வளர்ச்சித்துறையின் வெளியீடாக மலர்ந்திருக்கும் அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் (10 தொகுதிகள்) ஆகும்.

உருவாக்கம் : தனித்தன்மைகள்

என்.சி.பி.எச். நிறுவனம் மூலமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கும் இப்பணியின் மூலம் முதற்கட்டமாக 10 தொகுதிகள் வெளியாகியுள்ளன. செயல்திட்டத்தில் இன்னும் 90 தொகுதிகள் வரவுள்ளன. அம்பேத்கரின் சிந்தனைகள், பேச்சு, எழுத்து என இரு நிலைகளில் தொழிற்பட்டவை. இவற்றைத் தொகுத்து முதலில் மகாராஷ்டிர அரசு 17 தொகுதிகளாக வெளியிட்டது. அம்பேத்கர் பற்றிய பரவலான வாசிப்புக்கு அத்தொகுதிகள் வகைசெய்தன. பிறகு என்.சி.பி.எச். நிறுவனம் டெல்லியில் இயங்கி வந்த அம்பேத்கர் ‡பவுண்டேசன் அறக்கட்டளை உதவியுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட அறிஞர்களின் உதவியுடன் பல ஆண்டுகள் உழைப்பில் (1993-2005) மொழிபெயர்த்து அம்பேத்கர் : பேச்சும் எழுத்தும் எனும் பெருந்தலைப்பில் வெளியிட்டது. இவ்விரு முயற்சிகளுக்குப் பிறகு தற்போது நவீன வடிவத்தில் தமிழ்நாடு அரசின் முன்னெடுப்பில் வெளியாகியிருக்கும் அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் பல்வேறு சிறப்புக் கூறுகளைக் கொண்ட பணியாகும். இந்தத் தொகுப்புகளை உருவாக்க சம்பந்தப்பட்ட குழுவினரின் உழைப்பும் திட்டமிடலும் அதன் மூலம் கிடைத்திருக்கும் விளைச்சலும் அசாத்தியமானவை.

அம்பேத்கரின் கருத்தியல் சாமானிய - நடுத்தர மக்களுக்கும் சென்று சேர வேண்டுமென்ற நோக்கில் இத்தொகுதிகள் மக்கள் பதிப்பாக வெளிவந்துள்ளன. இதன் நெறியாளுகைக் குழுவில் தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை.ந. அருள், புலவர் செந்தலை கௌதமன், பேராசிரியர்கள் வீ. அரசு, மு. வளர்மதி, அ. மதிவாணன் உள்ளிட்டோர் செயல்பட்டுள்ளனர். குறிப்பாக மக்கள் பதிப்புப் பணியில் முதன்மைப் பதிப்பாசிரியராகச் செயல்பட்டுள்ள பேராசிரியர் வீ. அரசுவின் எழுதியலும் தரவுகளின் நுணுக்கமும் எளிதில் கடந்துவிடக் கூடியவை அல்ல. சுமார் 30 பக்கங்களுக்கு அவர் எழுதியுள்ள அம்பேத்கர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு 1891 முதல் 1956 வரையான அவரது பயணத்தைத் திரட்சியான எழுத்துகளில் முன்வைக்கிறது. ஆகச்சிறந்த மார்க்சியவாதியான வீ. அரசு அந்தக் குறிப்புகளின் இறுதியில்,

இந்தியச் சமூகத்தை அவர் அளவுக்குப் புரிந்து கொண்டவர்கள் வேறு யார்? என்று எழுப்பும் கேள்வி அம்பேத்கரின் பல்லாயிரம் பக்க எழுத்துகளை விடையாகக் கொண்ட கேள்வி. முதல் தொகுதியில் அரசு அவர்கள் வழங்கியுள்ள இந்தியச் சமூக முரண்கள் : சாதி - சூத்திரர் - தீண்டப்படாதோர் குறித்த அம்பேத்கர் உரையாடல்கள் எனும் கட்டுரை மற்ற எல்லாத் தொகுதிகளையும் வாசிப்பதற்கான வழிவிளக்காக அமைகிறது. அம்பேத்கரின் ஆய்வுகளைக் கற்றறிவதன் மூலம் இந்தியச் சமூக அமைப்பைப் புரிந்துகொள்ள முடியும் என முடியும் அந்தக் கட்டுரை சாதியத்தின் தோற்றுவாய், இயங்கியல், வர்ணம் - சாதி இரண்டுக்குமான வேறுபாடு, சூத்திர மரபு உருவாக்கம், தீட்டுக் கற்பிதம் ஆகியவை பற்றிய அம்பேத்கரியல் வாசிப்பனுபவக் குறிப்புகளைப் பகிர்கிறது.

மேலும் சாதியின் பாதுகாவலாக விளங்கும் அகமண முறை, குலக்குழு முறை, மனுதர்மம் வழியான பிற்போக்கியல், நால் வருணத்தில் நான்காம் வர்ணம் உருவான விதம், சாதிய அழித்தொழிப்புக் கூறுகள், காந்திக்கும் அம்பேத்கருக்குமான முரண்கள், ஐரோப்பிய அறிஞர்களின் மேற்கோள்களை அம்பேத்கர் சான்று காட்டிய தன்மை என்று இக்கட்டுரை அம்பேத்கரியலுக்கான முகப்புரையாக அமைந்துள்ளது. அவரை இந்தியச் சமூகத்தின் ஒடுக்கப்பட்டோருக்கான அடையாளப்படுத்துதலில் இருந்து விடுவிக்கும் பணியை இத்தொகுப்பு செவ்வனே செய்கிறது. நூல் தொகுதிகளின் பொருண்மை ஒவ்வொரு தொகுதியின் தொடக்கத்திலும் தரப்பட்டுள்ளது.

சாதியம் எனும் பெருந்தலைப்பின் கீழ் சாதியம் :

வரலாறு - ஆய்வு எனும் நிலையில் நான்கு தொகுதிகளும், சாதியம்: கருத்து நிலை எனும் நிலையில் மூன்று தொகுதிகளும், சாதியம் : போராட்டம் - விடுதலை எனும் நிலையில் இரு தொகுதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்து மதம் எனும் பெருந்தலைப்பின் கீழ் இந்து மதம் :

வரலாறு - ஆய்வு என்ற துணைத்தலைப்பில் மூன்று தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இந்து மதம் பற்றிய கருத்துநிலை என்ற தலைப்பில் மூன்று தொகுதிகள் வெளிவரவுள்ளன. மொத்தச் செயல்திட்டத்தில் உள்ள 100 தொகுதிகளில் 10 தொகுதிகள் திறம்பட முழுமை பெற்றுள்ளன.

ஒவ்வொரு தொகுதியின் வேலைப்பாடு பொறுப்புடனும் அழகுடனும் நெய்யப்பட்டுள்ளது. தொகுதிகளின் கூடுதல் சிறப்புகளைப் பின்வரும் கவனக்குறிப்புகள் மூலம் புரிந்துகொள்ளலாம்.

- மராட்டிய மொழியிலிருந்து மலையாளத்துக்கு மொழியாக்கம் செய்யப்பட்ட அம்பேத்கர் எழுத்துகள் பின்னர் அங்கிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதுகுறித்த விவரங்கள் மக்கள் பதிப்பில் இடம்பெற்றுள்ளன.

- ஒவ்வொரு தொகுதியும் சுமார் 300 பக்கங்களைக் கொண்டது. அம்பேத்கர் ஆய்வில் உருவான அவரது பெருநூல் வடிவங்கள் இந்த முந்நூறு பக்க வரையறை கருதி பகுதி - 1, பகுதி - 2 எனும் இரு பிரிவுகளாக வெளியிடப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு பெருந்தொகுப்பிலும் உள்ள பொருண்மை குறித்துத் (சாதியம், இந்துமதம்) தெளிவுபெறும் வகையில் பொருண்மையின் முதல் தொகுதியில் அறிமுகக் கட்டுரை ஒன்று விரிவாகத் தரப்பட்டுள்ளது.

- அம்பேத்கர் நூல்கள் எங்கிருந்து மொழிபெயர்க்கப்பட்டன? ஆதார மூலங்களான கையெழுத்துப் படிகள் எவை? அரசு சார்ந்த நிறுவனங்களில் எடுக்கப்பட்ட ஆவணங்கள் - இதழ்கள் - கூட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட உரைகள் முதலியன துல்லியமான விவரங்களாகத் தரப்பட்டுள்ளன.

- மராட்டிய மொழியில் உள்ள எழுத்தாக்கங்கள் நீண்ட தொடரமைவாக அமைவது இயல்பு. பதிப்புக்குழுவினர் அதை மாற்றித் தமிழ் வாசிப்புக்கேற்ற வகையில் எளிமையாகப் பொருளாழம் மிக்க தொடர்களாக அமைத்த விதம் பாராட்டுக்குரிய பணியாகும்.

- தலைப்புக்களும், துணைத்தலைப்புக்களும் பதிப்புக்குழுவால் பொருத்தமாகத் தரப்பட்டுள்ளன. இதைக் குறிக்கும் வகையில் தலைப்புகளைத் தனித்துக் காட்டும் விதமாக (ப.ஆ. - பதிப்பாசிரியர்) எனச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

- பல்வேறு பண்பாட்டுப் பின்புலம் கொண்ட சொற்களை அம்பேத்கர் தமது ஆக்கங்கள் முழுவதும் பயன்படுத்தியுள்ளார். இவற்றைப் புரிந்துகொள்ள உருவாக்கப்பட்டுள்ள கலைச்சொல் அகராதி இப்பணியில் தனித்துவமிக்கது. சான்றாக 'நாசிசம்' என்ற சொல்லுக்கு NAZI - தேசிய சோசலிச தொழிலாளர் கட்சி என்ற அதன் பொருளை மட்டுமே வழங்காமல் அதன் பின்புலம் சார்ந்த தகவல்களைத் திரட்சியாக வழங்கும் அகராதித்தன்மை தொகுதிகள் முழுவதையும் இலகுவாக வாசிப்பதற்கான திறப்பாகும்.

- தரவுகள் மொழியாக்கம் செய்யப்பட்ட மூல நூல்களை வாசகர்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் தரப்பட்டுள்ள நூல்களின் விபரம் இந்த ஆக்கங்கள் குறித்த நம்பகத் தன்மையைப் பன்மடங்கு அதிகரிக்கிறது.

- பின் இணைப்பில் தரப்பட்டுள்ள சுட்டி (Index) தொகுதிகள் முழுவதும் பயின்றுவரும் இடங்கள், மனிதர்கள், பொருண்மைகள் பற்றி விரைவாக அறிய உதவுகிறது.

- நூறாண்டுகள் கடந்துவிட்ட எழுத்தாக்கங்களை வாசிக்கும் ஒருவர் செய்திகளோடு அந்நியப்படாமல் தடுக்கும் சமகால மொழிநடை இப்பணியின் தனிச்சிறப்பாகும்.

- சமீபகாலத் தமிழ்ப் பனுவல்களில் தவிர்க்க முடியாத ஒன்றாக எழுத்துப்பிழை (Spell Error) ஆகிவிட்டது. தமிழின் ஆகச் சிறந்த பதிப்பகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் அரசு சம்பந்தப்பட்ட பணிதானே, என்ற வழக்கமான அலட்சியப்போக்கு துளியும் இன்றி 20 க்கும் மேற்பட்ட மொழியார்வலர்களைக் கொண்டு மெய்ப்புத் திருத்தம் (Proof Reading) செய்யப்பட்டுள்ளது.

- மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழியாக்கம் செய்யும் அரும்பணியைப் பேராசிரியர் பா. ஆனந்தகுமார் தலைமையிலான குழு செய்துள்ளது. இவர்களின் பணியானது வாசிக்கப்படுவது ஒரு மொழியாக்கம் என்பதை மறக்கடித்து மூலநூலை வாசிப்பதைப் போன்ற நெருக்கத்தை ஏற்படுத்துகிறது.

- குறிப்பிட்டே ஆகவேண்டிய மற்றொரு முக்கிய அம்சம் இந்தப்பணிக்கு வைக்கப்பட்டுள்ள பெயர். அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் என்ற தலைப்பில் உள்ள அண்ணல் என்பதே பலருக்கு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ள சொல். தமிழின் சிறந்த அகராதிகளில் ஒன்றெனக் கருதப்படும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி இச்சொல்லுக்கு அரசன், தலைமை, புத்தன், பெருமை, பெருமையில் சிறந்தோன், முதல்வன், திருமால், கடவுள் எனப் பல்வேறு பொருள்களைத் தருகிறது. க்ரியாவோ, வணக்கத்துக்குரியவர் என்ற பொருளை வழங்குகிறது. கம்பர் மொழியில் ‘அண்ணலும் நோக்கினான்’ என்ற தொடரில் சுட்டப் பெறும் ‘இராமன்’ அகராதிப் பொருள்களுக்கேற்ப அமைவது சனாதன இயல்பு. பிறகு இந்திய

வரலாற்றில் இச்சொல் காந்திக்கே உரிய முன்னொட்டாகச் சுட்டப்பட்டது. காந்தியைத் தவிர இங்கு யாரும் அண்ணலாக முடியாது, கூடாது என்ற வலதுசாரிக் கருத்தியலை உடைத்த பெருமகனாக நாம் அம்பேத்கரை வாசிக்க வேண்டிய சமகாலத் தேவை உள்ளது. இதற்குத் திறவுகோலாக ஓர் அரசின் செயல்திட்டப் பணியான இந்தப் புத்தக உருவாக்கத்திற்கு ‘அண்ணல்’ என்ற பெயரை முன்மொழிந்த - வழிமொழிந்த அத்தனை பேரும் மாண்புக்குரியவர்கள். குறிப்பாக இதுபோன்ற உடைப்புகளைச் செய்வதில் எப்போதும் முன்நிற்கும் பேராசிரியர் வீ. அரசு எதிர்ப்புகளையும் இழப்புகளையும் அதிகம் சந்தித்தவர். நெறியாள்கைப் பணியில் செயல்பட்ட புலவர் செந்தலை கௌதமன் உள்ளிட்ட அனைவருமே நினைத்துப்பார்க்கத் தக்கவர்கள். இந்தப் பொருள் குறித்தறிய 1936 இல் ஜாத்பாத் தோடக் மண்டலுக்கு சாதியை அழித்தொழித்தல் எனும் தலைப்பில் அமைந்த உரையின் பொருட்டு காந்திக்கும் அம்பேத்கருக்கும் நடந்த உரையாடல் முரணை வாசிக்க வேண்டியது (தொ : I, பக்: 187,197) அவசியமாகிறது.

- தொகுதிகளின் வடிவமைப்பில் பெருஞ்சிரத்தையெடுத்து உழைத்த ஜீவமணி குழுவினரின் பணி பிரமாதமானது. அடர் நீலமே அம்பேத்கரியலின் அடையாளம் என்பதை இலகுவாக்கி வெளிர்நீலத்தில் உருவாக்கப்பட்ட அட்டையின் நிறம் அம்பேத்கர் எல்லோருக்குமான ஆளுமை என்பதைக் காட்டுகிறது. முகப்பட்டையில் இடம்பெற்றுள்ள அம்பேத்கரின் கோட்டோவியம் கம்பீரமும் அறிவுத் தெளிவும் கொண்ட கண்களையும் அவருக்கே உரிய உடை நேர்த்தியையும் கொண்ட மாற்றுச் சித்திரம்.

- தொகுதியின் உள்ளடக்கத்தைச் சுருக்கமான சொற்களால் அட்டையிலே குறித்திருப்பதும் அதை மாற்று நிறத்தில் (பச்சை) தனித்துக் காட்டியிருப்பதும் (High Lighted) சிறப்பான உத்தி முறைகளாகும். ஒரு பெருந்தொகுப்பைக் கையாள்வதற்கான சிரமங்களை இதுபோன்ற முறைகள் எளிமையாக்குகின்றன.

- தாள்களின் தரமும் எழுத்துக்களின் உருவளவும் தேவையான இடங்களில் தரப்பட்டுள்ள தடிமையும் (Letter Boldings) ஒரு தேர்ந்த செய்நேர்த்தியுடன் இத்தொகுதிகளை மிளிரச் செய்கின்றன.

உள்ளடக்கம் : சில செய்திகள்

முன்னரே குறிப்பிட்டது போல் இரண்டு பெரும் தலைப்புகளின் படிதான் 10 தொகுதிகளும் சமைக்கப்பட்டிருக்கின்றன.

1. சாதியம்
2. இந்து மதம்

எனும் இரு தலைப்புகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள பல்வேறு கட்டுரைகளை

வாசிப்பு நலன் கருதிப் பதிப்புக்குழுவே சுருக்கமான தலைப்புகளைத் தந்துள்ளது. இது சம்பந்தப்பட்ட கட்டுரையை வாசிப்பதற்கான ஆர்வத்தைத் தூண்டுகிறது. இந்த இரு பொருண்மைகள் பற்றிய சில கூறுகளைப் பருந்துப் பார்வையில் காணலாம்.

சாதியம் :

படிநிலைப் பாகுபாடுகளைக் கொண்ட இந்தியச் சமூகத்தில் சாதியம் குறித்த ஆய்வுகள் என்பவை சார்பு நிலையிலும், எதிர் நிலையிலும் நிகழ்த்தப்பட்டு வந்த காலகட்டத்தில் அம்பேத்கர் தனது தேர்ந்த வாசிப்பின் மூலம் புதிய அணுகல் முறையைக் கண்டுபிடித்தார். வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், பிராமணங்கள், சூத்திரங்கள், உபநிடதங்கள் எனத் தேடித் தேடி வாசித்து சாதிய இயங்கியலை அம்பேத்கர் அறுவைச் சிகிச்சை செய்துள்ளார்.

முதல் தொகுதியின் இரண்டு நூல்களில் முதல் கட்டுரை 1916 மே - 19 அன்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மானிடவியல் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. இது பின்னர் இந்தியாவில் சாதிகள் - அவற்றின் இயங்கியல், தோற்றம், வளர்ச்சி எனும் தலைப்பில் 1917 இல் இந்தியன் ஆண்டிக்கொயரி ஆய்விதழில் வெளியானது.

இந்தியச் சமூக அமைப்பின் தவிர்க்க முடியாத தன்மையுடையதும் பல்வேறு விளைவுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டதுமான சாதியம் பற்றிய கெட்கரின் முக்கியமான கருத்தை மேற்கோள் காட்டுகிறார் அம்பேத்கர்.

இந்தியாவில் சாதிமுறை உள்ள வரை இந்துக்கள் சாதிக்கலப்பு மணம் செய்ய மாட்டார்கள். அயலாருடன் சமூக உறவு கொள்ளமாட்டார்கள். இந்துக்கள் உலகின் பிற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றால் இந்தியச் சாதி உலகளாவியதொரு சிக்கலாக உருக்கொள்ளும் (S.V. Ketker : History of Caste in India : Page.4)

எனும் கெட்கரின் கருத்தினை சாதியின் பேராபத்தை உணர்த்தும் வரிகளாக அடிக்கோடிடும் அம்பேத்கர், புறச்சாதியாரோடு உணவு உண்ணாமை, தனிமைப்படுத்திக் கொள்ளுதலின் இயல்புநிலை, சாதியின் காவல்மரமாக விளங்கும் அகமண முறை, சாதி முறைத் திருமணத்தில் உள்ள உபரி ஆண்கள் - பெண்கள் என்று பரவலான கருத்துக்களை தீர்க்கப்பூர்வமாக எழுதுகிறார். பால்ய மணம், கைம்பெண் முறை, உடன்கட்டை ஏறுதல் போன்ற வழக்கங்கள் மனுவின் சூத்திரத்திலிருந்து எவ்வாறு நடைமுறையாக்கப்பட்டது? ஸ்மிருதியை மீறும்போது சாதிச்சட்டங்கள் எவ்வாறு கொடூரத்தன்மை பெற்று விளங்கின? நால் வருணத்தில் ஒவ்வொரு வர்ணமும் தங்களை எப்படி தனித்த சாதியாக மாற்ற முற்பட்டன? அதன் உளவியல் காரணி பற்றித் தெளிவாகக் குறிப்பிடும் அம்பேத்கர் ‘போலச்செய்தல்’ மூலம் சாதிகள் பல்கிப் பெருகியமை பற்றியெல்லாம் விரிவாக எழுதுகிறார். சாதியம் பற்றிய அவரது திடமான பின்வரும் கூற்று முக்கியமானது.

ஒரு சாதி என்று இல்லவே இல்லை. எப்போதுமே சாதிகள் தான் இருக்கின்றன. நான் சொல்வதைப் பின்வருமாறு விளக்குவேன். பார்ப்பனர்கள் தங்களைத் தனியாக ஒரு சாதி என்று ஆக்கிக் கொண்டதன் விளைவாகப் பார்ப்பனரல்லாதோர் என்றொரு சாதியை அதன்மூலம் உருவாக்கினர். அல்லது எனது பாணியில் சொல்வதானால் அவர்கள் கதவடைத்துக் கொண்டதன் மூலம் மற்றவர்களை வெளியில் நிறுத்திவிட்டனர் (தொ: I,பக்: 70)

என்ற அவரது பார்வை வித்தியாசமானது. புனிதம் கருதியோ, தூயவாதம் பேசிக்கொண்டோ பார்ப்பனர்கள் நடத்திய கதவடைப்பு பின்னாளில் பல்வேறு படிநிலை ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிற்று. இந்தத் தொகுதியின் மற்றொரு முக்கியமான கட்டுரை ‘சாதியை அழித்தொழித்தல்’ எனும் தலைப்பிலானது. மிகத்தீவிரமான சர்ச்சைகளைக் கிளப்பிய இக்கட்டுரை 1936 இல் லாகூரில் நடைபெற்ற ஜாக் பாத் தோடக் மண்டல் சார்பாக நடைபெற்ற கருத்தரங்கிற்காகத் தயாரிக்கப்பட்ட உரை. ஆனால் எதிர் வினைகளாலும் சில காரணங்களாலும் அவ்வுரையை அம்பேத்கர் நிகழ்த்தவில்லை. பின்னர் 1937 இல் இக்கட்டுரை நூலாக வெளியாகிப் பெரும் வரவேற்பினைப் பெற்றது. இவ்வுரையில் தீட்டு, அதை உருவாக்கும் மதச் சிக்கல்கள், வேலைப் பிரிவினை, கலந்து உணவுண்ணாமை எனப் பல காரணிகளைச் சாதியை வளர்க்கும் கருவிகளாகக் குறிப்பிடும் அம்பேத்கர் சாதியை அழித்தொழிக்கும் முக்கியக் கருவியாக சாதிக்கலப்பு மணத்தைப் பரிந்துரைக்கிறார். மேலும் இந்துச் சமூகத்தில் சாதியத்தால் ஏற்பட்ட சீரழிவு, மனிதர்களைச் சாதி எப்படிக் கோழையாக்குகிறது? நால்வருண முறையின் பித்தலாட்டங்கள் எனப் பலவற்றையும் விவரிக்கிறார். இதற்கு மறுப்புத் தெரிவித்து ஹரிஜன் இதழில் எழுதிய காந்தி இந்து மதவாதிகளில் ஒரு பிரிவினர் மீதுள்ள வெறுப்பை இந்து மதத்தின் மீது காண்பிக்கிறார் என்றும் ஒரு மதத்தை அது விளைவித்த சான்றோர்களைக் கொண்டே மதிப்பிட வேண்டுமேயன்றி மிகக் கேடான நபர்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு மதிப்பிடக்கூடாது என்றும் அம்பேத்கருக்கு எதிர்வினையாற்றினார். இதற்கு மறுப்பாக

அம்பேத்கர் காந்தி சிந்தனையை நம்புபவர் அல்லர். எனவே நடைமுறைக்கு உதவும் வழிகாட்டுதலை அவரால் அளிக்க முடியாது என்றும், அவர் வாய் திறந்தால் பிறர் வாயை மூடிக்கொள்ள வேண்டும் என்று கருதுகின்றார். அதற்குப் பிறகு தெருவில் போகும் நாய்கூட குரைக்கக் கூடாது என்ற அளவுக்கு அவருடைய சொற்கள் போற்றப்படுகின்றன. அதனால்தான் அவருக்கு மறுமொழி அளித்துள்ளேன் என்றும் மகாத்மா மீதான பெரும் புனிதத்தை மறுக்கிறார். இதன்மூலம் இருபெரும் ஆளுமைகளின் கருத்தியல் முரண் வெளிப்படுகின்றது.

VIII, IX ஆகிய தொகுதிகள் தயாரிப்பில் உள்ள நிலையில் X, XI, XII ஆகிய தொகுதிகள் இந்து மதம் பற்றிய விவாதங்களைக் கொண்டது.

இந்து மதம் :

பழைமைவாதப் போக்கும் சனாதனத் தன்மையும் மலிந்து கிடக்கும் இந்து மதம் பிற மதங்களை விடவும் விமர்சனப்பூர்வமாக அணுகப்படுகிறது. கிறிஸ்தவ - இஸ்லாமிய மதங்களை விட இந்து மதம் மேன்மைப்பட்டதாகப் பொதுப்புத்தி கொண்டவர்களால் காட்டப்படுவதுண்டு. மற்ற மதங்கள் சர்வாதிகாரப் பண்பு கொண்டவை என்றும் தோற்றுவித்தவர் ஒருவரே என்றும் கூறப்படுவதுண்டு. இந்து மதம் பலரால் பல சூழல்களில் தோற்றுவிக்கப்பட்ட ஜனநாயகப் பண்புடைய அமைப்பு என்பதே அதன் மேன்மைப் பார்வைக்குக் காரணம். பண்பாட்டு ஆய்வாளரான இ.பி. ஹேவல், சமயம் என்பது இந்தியாவில் மனிதனைக் கட்டுப்படுத்தும் ஒரு கோட்பாடன்று. வாழ்க்கையின் பல்வகைச் சூழ்நிலைக்கும் ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு படிகளுக்கும் ஏற்ப மனித நடத்தையை அமைத்துக் கொள்வதற்கு உதவியாக அமைந்த ஒரு கருதுகோள் (Hypothesis) ஆகும். (The History of Aryan rule in india, Page: 170) என்கிறார். அவரது கருத்தின்படி மதம் என்பது மனித நடத்தையை பண்படுத்த வேண்டும் என்பதே அறம். ஆனால் தோற்றுவாயிலிருந்து சமகாலம் வரையான இந்து மதக் கூறுகளை நாம் அந்தப்படி அணுகுவது சிரமம். அதற்கு தனித்த பார்வையும் அம்பேத்கரின் கண்ணாடியும் அவசியம்.

அம்பேத்கரின் சாதி குறித்த ஆய்வில் மூலகாரணமாக அவர் மதத்தைச் சுட்டுகிறார். எனவே மதம் பற்றிய பல்வேறு உரையாடல்களை நிகழ்த்தும் அம்பேத்கர், இந்துக்களின் பைபிள் எனப்படும் மனுஸ்மிருதியோடுதான் தன் ஆய்வுகளைத் தொடர்கிறார். மனுஸ்மிருதி மூலம் ஏற்பட்ட வருணப் பாகுபாட்டை - மோதலை வர்க்கப்போர் என்று கூறுவதுடன் பார்ப்பனர்களை மீயதிகாரம் பெற்றவர்களாகவும் நிறுவுகிறார். இந்து மதம் முன்னிறுத்தும் உருவ வழிபாடு, அதன் மூலம் உண்டாக்கப்பட்ட வைதீக நெறிகள், சம்பிரதாயங்கள் என அனைத்தையும் விரிவாகப் பேசுகிறார்.

இந்து மதத் தொகுதிகளுக்கான அறிமுகக் கட்டுரையில் பேராசிரியர் வீ. அரசு,

மதத்திற்கு ஒரு தத்துவ மரபு உண்டு என்பதை அம்பேத்கர் ஏற்றுக்கொள்ளவில்லை. மதத்திற்கு இறையியல் இருக்கலாம். அதைத் தத்துவம் என்று கூற முடியாது என்கிறார். இக்கருத்து இந்து மதத்தைக் கோட்பாடாக - தத்துவமாக அணுகும் ஆபத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

இவ்வாறு தலைப்பிடுதலில் - பகுப்பு முறையில் - கலைச் சொல்லாக்கத்தில் - விவரணங்கள் குறித்த நேர்மையில் - ரசனையும் அறிவும் மிளிரும் கட்டுமானத்தில் இன்னும்... இன்னும்... பல நிலைகளில் இந்தப் பணி ஒப்பற்றது. வாசிப்புச் சோர்வு ஏற்படாத வண்ணம் உளவியல் தன்மையோடு இப்பணியில் புகுத்தப்பட்டுள்ள படையல் நேர்த்தி உச்சிமுகர வேண்டியது. அந்த வகையில் சட்ட மேதையென்றும், ஒடுக்கப்பட்டோர் ஒளியென்றும் அடையாளம் கொண்ட அம்பேத்கரை இந்தியச் சமூகவியல் ஆய்வின் நேர்மையான முன்னோடியாக இந்தப்பணி அடையாளப்படுத்துகிறது. அந்த வகையில் அண்ணலுக்குச் செலுத்தும் அஞ்சலியாக இதனைப் புரிந்துகொள்ளலாம்.

துணை நின்றவை

1. அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் : தொகுதிகள் - I, II, III, IV, V, VI, VII, X, XI, XII தமிழ் வளர்ச்சித்துறை - என்.சி.பி.எச். வெளியீடு.
2. இந்து சமயத் தத்துவம் - டாக்டர். T.M.P. மகாதேவன் - தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியீடு.
3. வரலாறு பண்பாடு அறிவியல் (டி.டி. கோசாம்பியின் வாழ்க்கையும் ஆய்வுகளும்) - மூ. அப்பணசாமி, ஆறாம்திணை வெளியீடு.
4. மார்க்ஸ் - அம்பேத்கர் புதிய பரப்புகளுக்கான தேடுகை - ந. முத்துமோகன், விடியல் வெளியீடு.
5. இந்திய நாத்திகம் - தேவிபிரசாத் சட்டோபாத்யாய - பாரதி புத்தகாலயம் வெளியீடு.

●

கட்டுரையாளர்: உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

அரசுக் கல்லூரி, காங்கேயம்.



கருமிளகுக் கொடி | தெலுங்கில்: டாக்டர் வி.சந்திரசேகர ராவ்
தமிழில்: க.மாரியப்பன் | வெளியீடு: காலச்சுவடு | விலை: ரூ.250

தண்டோரா இயக்கத்தைப் பற்றிய நாவல்

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குச் சொற்கள் அல்லது சொற்றொடரைப் பெயர்ப்பது என்ற இந்தப் பொதுபார்வை, கலை இலக்கிய மொழிபெயர்ப்பைப் பொருத்தவரை கூடுதல் பொறுப்புடையவை. காரணம், அது ஒரு சமூகத்தினுடைய அனைத்து நிலைகளையும், தளங்களையும் (பண்பாடு, வரலாறு, அந்நிலமக்களின் உணர்வு) பெயர்ப்பது. எடுத்துக்கொண்ட, குறிப்பிட்ட அந்த இலக்கியத்தை மொழி வழியே மற்றொரு சமூக மக்களுக்குக் கடத்துவது. அத்தகைய நிகழ்வை அண்மையில் தெலுங்கில் இருந்து தமிழுக்கு வந்த மொழிபெயர்ப்புப் புதினமான 'கருமிளகுக் கொடி'யைக் காணலாம். இதனை மொழிபெயர்த்தவர் 'க.மாரியப்பன்'. இதற்குமுன் தெலுங்கு சிறுகதையாசிரியர் 'பி.அஜய் ப்ரசாத்'தின் சிறுகதைகளைத் தொகுத்து 'அத்தங்கி மலை' என்றும், தெலுங்கு சிறுகதையாசிரியர் 'தும்மல இராமகிருஷ்ணா'வின் சிறுகதைகளைத் தொகுத்து 'மஹாவித்துவான்' என்றும் இரு சிறுகதைத் தொகுப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். 'டாக்டர் வி.சந்திரசேகர ராவின் நல்லமிரியம்செட்டு' என்ற புதினத்தின் மொழிபெயர்ப்பானது இந்நூல். ஆந்திராவில் நிகழ்ந்த தண்டோரா இயக்கத்தை மையமாகக் கொண்ட தலித் அரசியலே இதன் கதைக் களம். ஆதெம்மாவின் இரு மகன்கள். மூத்தவர் ராஜய்யா (ராஜசுந்தரம்), இளையவர் கருணா குமார். இருவர் பயணிக்கும் இருவேறு தலித் அரசியல் தளங்களை ராஜய்யாவின் மகளான கிரேஸ்

ரா.வி. ஜீவநாத்

கமலாவின் கதைசொல்லலில் அமைந்துள்ளது இப்புதினம்.

தலித் மக்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் தருவது மட்டும் தண்டோரா இயக்கத்தின் பணியாக இல்லாமல், பொறுப்புள்ள மனிதனாகத் தேவுவை மாற்றியது; காதலுக்கு இன்னொரு நிறம் இருக்கிறது என்பதையும், இன்றைக்குக் கசப்பாக இருக்கும் வாழ்க்கை நாளை இனிமையாய் மாறும் என்பதையும் டில்லிக்கு உணரவைத்தது. இதுபோன்ற தனிமனித வாழ்விலும் இவ்வியக்கம் நிகழ்த்திய மாற்றங்களைக் காணமுடிகின்றது. இத்தகைய இயக்கத்தில் ராஜய்யாவின் தம்பி கருணாவும் மகள் கமலாவும் மகன் ரூமியும் இயங்கிக் கொண்டிருக்க, அதற்கு எதிரான ஆதிக்கம் மற்றும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய இயக்கத்தில் இயங்கும் ராஜய்யாவும் என இந்தக் கதைப்போக்கு அமைந்துள்ளது. ஏட்டறிவற்ற (உயர்கல்வி) கருணா தம் சமூக முன்னேற்றத்திற்காகத் தன்னலமற்றுப் போராடுவதும். தன் சமூகத்தில் முழுகல்வியறிவைப் பெற்ற ராஜய்யா சுயநலவிரும்பியாகத் தன்முன்னேற்றத்தையே கருத்தில் கொண்டு விளிம்பில் இருந்து அதிகாரத்தின் மையத்தை அடையும் முயற்சியில் நகர்கிறார். அதற்குத் தண்டோரா இயக்கத்தின் செயல்பாடுகள் ராஜய்யாவின் இயக்கத்திற்கு எதிராக அமைந்துள்ளது. ஆகையால், முதலில் அந்த இயக்கத்தில் செயல்படும் தன் உடன்பிறந்த தம்பியான கருணாவிற்குக் காவல்துறையின் மூலம் பல இன்னல்களை உருவாக்கியதுடன், இறுதியாகச் சூழ்ச்சியால் தம் தம்பியின் உயிரை ஆகுதியாக்கினார் (கொலை). அத்துடன் நில்லாது, இப்புதினத்தில் தண்டோரா இயக்கத்தைப் பற்றிய அறிமுகத்தைக் கதைசொல்லியான கமலாவிற்குக் கொடுத்ததோடல்லாமல், இயக்கத்தில் ஈடுபட வைத்தது. தன் தந்தையின் செயல்பாடுகளை, சூழ்ச்சிகளை ஆங்காங்கே பகடி செய்தும், இறுதியில் தன் தந்தையால் இனி பலி நிகழக்கூடாது எனத் தன்னைத் தானே ஆகுதியாக்கிய ரூமி, எனப் பல உணர்வுப்பூர்வமான மாந்தர்களையும், தருணங்களையும் சித்தரிப்பதாக அமைந்துள்ளது.

மேலும் தாய் ஆதெம்மா, மனைவி விஜயா, தம்பியின் இணையாள் காந்தம், மகள் கமலா ஆகிய பெண் மாந்தர்களிடம் வெளிப்படுகிறது ராஜய்யாவின் அதிகாரமுகம். தண்டோரா இயக்கத்திற்குச் சார்பாக ரூமியும் கமலாவும் இயங்கும்போது விஜயா மீதும் கமலா மீதும் நிகழ்த்தப்படும் வன்முறை இப்புதினத்தின் தொடக்கத்தில் இருந்து வெளிப்படுகிறது. புராணக்கதைகள் கூட்டு நனவிலியில் படிமங்களாக மாறி நவீன வடிவம் கொண்டு படைப்புகளில் வெளிப்படும். அதன் அடிப்படையில் படைப்பாளர் ஓர் இடத்தில் ரூமியின் வழி “பக்த பிரகலாதா சினிமா பார்ப்பது போலிருக்கிறது / இதோ அசுரன் / இப்படிப்பட்ட அப்பா கூட இருக்கிறாரா?” என்று குறிப்பிட்டிருப்பது, படைப்பில் கதை மாந்தர்களின் வடிவமைப்பைப் புரிந்துகொள்ளும் முடிச்சவிழ்ப்பாகவே காணமுடிகின்றது. ஆயினும் இங்கு இறுதியில் வெல்வது இரணியனாகிய ராஜய்யா என்பது குறிப்பிடத்தக்கது. விளிம்புநிலையினரைப் பொருத்தமட்டில் கல்வி மையத்தைத் தகர்க்கும் கருவி. இங்கு அந்தக் கருவியை எடுத்தவர்கள் அதனைக் கொண்டு மையத்தைத் தகர்க்கிறார்களா? அல்லது மீண்டும் மையத்தை விரிவடையச் செய்கிறார்களா? இவ்வாறு சிந்திப்பதற்குப் பல திறப்புகளை இப்புதினம் விதைக்கின்றது.

●

கட்டுரையாளர்: முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் 517426,
ஆந்திர மாநிலம்.

உங்கள் நூலகம் இதழுக்குக் கட்டுரைகள் அனுப்புவோர் கவனத்திற்கு...

- கட்டுரைகள் 1300 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும்
- யுனிக்கோட் (Unicode) எழுத்துருவில் தட்டச்சு செய்து அனுப்பவேண்டும்.
- கட்டுரையாளரின் புகைப்படம் இணைத்து அனுப்பவேண்டும்.
- தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் இருக்க வேண்டும்.
- ஆசிரியர்குழுவின் முடிவின்படியே கட்டுரைகள் தெரிவுசெய்யப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படாத கட்டுரையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

மகாபாரதமும் தமிழ் இலக்கியமும்

த. குணாநிதி

இந்திய மரபில் பிரதான இலக்கியங்கள் அதன் எழுத்திலக்கியப் படைப்புகளில் பிராந்திய மொழிகளில் பரிமாற்றங்கள் பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. அவ்வேளையில் அந்த மாற்றத்தின் கொடுக்கல் வாங்கல்கள், தருமொழி, பெறுமொழி நிலையில் தமிழில்தான் வீரியமான செயல்பாடுகள் நிகழ்ந்துள்ளன. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக மகாபாரதப் பிரதியைக் காணமுடியும். தமிழ்ச் சூழலில் மகாபாரதக் கதைகள் தமிழ் இலக்கிய, பண்பாட்டு வரலாற்றோடு கொண்டிருந்த ஊடாட்டங்களை கவனப்படுத்துவதாக உள்ளன. 'சங்க இலக்கியத்தில் பாரதக் கதைக் குறிப்புகள்' என்ற தலைப்பில் உரையாற்றிய பேரா. இரா.சீனிவாசன், சங்க இலக்கியச் சூழலில் பாரதக் கதை குறித்துப் பேசலாமா - என எல்லோருக்கும் எழும் கேள்விக்குப் பதிலாக அமைந்திருந்தது. 'திருமாவுண்ணி' பற்றிய சங்க இலக்கிய குறிப்பில் முலையைத் திருகி மதுரையை எரித்த கண்ணகி பற்றிய பழங்கதையைக் காண்பது இத்தகையதோர் ஆய்வுக்கு வழிவகை செய்கிறது என்று

கூறி, கீழ்க்காணும் சங்க இலக்கியப் பாடல்களில் காணுகின்ற குறிப்புகள்மூலம் பாரதக் கதை சங்க காலத்திலேயே தமிழர் அறிந்திருந்தனர். அவற்றில் பொதிந்துள்ள பாரதக் கதைக் குறிப்புகள் வழியே சங்க இலக்கியத்தில் பாரதக்கதை எந்த வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றிய இன்னும் ஆழமான புரிதலும் கிடைக்கிறது. சங்க காலத்திலேயே பாரதக் கதையைத் தமிழர் அறிந்திருந்தனர் என்ற கருத்திற்குத் தடையாக இருப்பது பாரதம் பற்றிய ஆய்வுகள் அதன் பரவலாக்கத்தைப் பல்லவர் காலத்தில் நிறுவி விட்டதுதான். இதனைக் கடந்து, காப்பியங்கள் பற்றிய ஆய்வுகளில் எவ்வாறு காப்பியம் தொன்மக் கதைகளாக இருந்து, பின்னர் காப்பிய வடிவம் பெற்றது என்று நோக்கும்போது நமக்கு இந்தத் தடை நீங்குகிறது. இந்த ஆய்வுப் பின்னணியில் கீழ்க்கண்ட சங்க இலக்கியப் பாடல்களை வாசிக்கும்போது நமக்கு அதனுள் பொதிந்துள்ள பாரதக் குறிப்புகளை அடையாளப்படுத்த முடியும். பாரதக் கூத்து பற்றிய களஆய்வில் கிடைக்கின்ற தரவுகள் இந்த வாசிப்புக்கு மேலும் வலு சேர்ப்பதாக உள்ளன.

அலங்கு உளைப் புரவி ஐவரோடு சினைஇ
நிலம் தலைக் கொண்ட பொலம் பூந் தும்பை
ஈர்-ஐம்பதின்மரும் பொருது களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!
(புறநானூறு 213-16)

இந்தப் பாடலில் வரும் பெருஞ்சோறு என்பதைப் பிண்டம் மேவிய பெருஞ்சோற்றுநிலை என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அதாவது பாரதப்போரில் இறந்த வீரர்களின் நினைவாக அளிக்கப்பட்ட பிண்டச்சோறு என்பது இதன் பொருள். இன்றும் திரௌபதி அம்மன் திருவிழாக்களில் தீமிதித் திருவிழா முடிந்ததும் கொடுக்கப்படும் உணவைப் பிண்டச் சோறு என்பார்கள். சில இடங்களில் இதனை 'வீரபந்தி' எனவும் கூறுவார்கள். இந்த நாட்டார் சடங்கின் பின்னணியில் இப்பாடலைப் பார்க்கும்போது 'ஐவரொடு' என்கிற சொல் பாண்டவரைக் குறிப்பதாக விளங்குகிறது. பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கலித்தொகை ஆகியவற்றிலும் பாரதக்கதைக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றில் துரியோதனனையும் துச்சாதனனையும் கொல்வதாக வீமன் சபதம் செய்து அதை நிறைவேற்றியதும், பாண்டவர் அரக்கு மாளிகையிலிருந்து தப்பியதும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட ஆறு இடங்களிலும், பாரதக் கதைக் குறிப்புகள் உவமைகளாகவே கையாளப்பட்டுள்ளன. இதன்மூலம் பாரதக் கதை காப்பியம் அல்லது கூத்து வடிவம் பெறுவதற்கு முன்னமே அக்கதைக் கூறுகள் பரவலாக வழக்காறுகளாகப் பரவி இருந்ததை உணரமுடியும். இந்தப் புரிதல் மேற்குறிப்பிட்ட பாடல்களின் கருத்தாழத்தை விளங்கிக்கொள்ள உதவுவதோடு, செவ்வியல் மரபு × நாட்டார் மரபு என்ற எதிர்வைக் கடந்து சிந்திக்கவும் உதவுகிறது. இக்கதைக் கூறுகளை யார், எதற்காகச் சூழல விட்டார்கள்? என்று சிந்திக்கும்போது, பாணர், விறலியர், பொருநர், கூத்தர், சூதர், மாகதர் போன்றோரின் செயல்பாடுகளே காரணம் என்று விளங்கும். மேலும், பாரதக் கதைக் களமான துவாரகை, மதுரா போன்ற வடநாட்டு இடங்களை மாற்றாமல், தமிழ்ச் சூழலில் கீழ்க்கண்ட புதுமைகளைச் செய்துள்ளதும் நம் கவனத்துக்கு வருகிறது. கண்ணன் பிறப்பு, துகிலுரியப்படும் தருணத்தில் கண்ணன் திரௌபதிக்கு ஆடை அளித்தது, அமாவாசையைப் புரட்டிவைத்து, துரியோதனனுக்கு சாதகமாக (ஞானியாக கருதப்பட்ட) சகாதேவன் போருக்கு நாள் குறித்ததை மாற்றி அமைத்தது, அரவான் களப்பலிக்கு முக்கியத்துவம் கொடுத்து கூத்தாண்டவர் வழிபாட்டு முறையாக அதனை மாற்றியமைத்தது - போன்ற கூறுகள் மூலம் தமிழ் பாரத மரபை உருவாக்கி வளர்த்து வந்ததையும் இங்கு அடையாளம் காணமுடியும்.

முனைவர் மு. ஏழுமலை அவர்களின் உரை 'பாரதக் கூத்துப் பனுவல்கள்' என்ற பொருளில் அமைந்திருந்தது. கூத்து மரபை இலக்கிய மரபின் அங்கமாகப் பார்க்க வேண்டும். இதைத்தான் பாணர் மரபு, கூத்தர் மரபாக இலக்கிய மரபில் காண்கிறோம். இலக்கிய, இலக்கணத்திற்கு அடிப்படையாகத் தொல்காப்பியம் இருப்பது போல், கூத்திற்குக் கூத்த நூல் முதலியவை உள்ளன. அதன்படி, கூத்தில் பாடல், வசனம், இசை, அடவு அனைத்தும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த மரபை வெகுசன மரபாக மாற்றியதில் பல்லவர் கால அரசு முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தக் காலகட்டத்தில் மகாபாரதப் பாத்திரப் பெயர்கள், பாரதக் கிளைக் கதைகள், அதனை ஒட்டிய வழக்காறுகள் தமிழ்ச் சமூகத்தில் பரவலாகின.

கூத்துக் கலை திரௌபதி வழிபாட்டின் அங்கமானபோது கூத்துப்பனுவல் ஆசிரியர் என்கிற இலக்கிய மரபு அங்கீகரிக்காத படைப்பாளி மையமாகிறார். புலவர்களைப் போலவே இவர்கள் இலக்கிய, இலக்கண, இசை, நடனத் துறைகளில் தேர்ந்த அறிவும், பயிற்சியும்

உடையவராக இருந்தனர். அல்லி கதை முதலான கதைப்பாடல்களின் அடிப்படையில் பாரதத்தில் இல்லாத பாத்திரங்களையும் சேர்த்துக் கூத்துப் பனுவல்களை உருவாக்கியுள்ளனர். கூத்துப் பனுவல்களில் பாடல்களோடு, விருத்தம், திபதை, கந்தர்த்தம், சீசபத்தியம், வசனம் ஆகியவற்றையும் ஆசிரியர்கள் எழுதினார்கள். இலக்கிய மரபு இவர்களைப் பெரிதாக அங்கீகரிக்காத நிலையில், மக்கள் மத்தியில் இவர்களைப் பற்றி சில கதைகள் பிரபலமாக இருந்தன. உதாரணமாக, கலவை குமாரசாமி தம்பிரான், தங்கவேல் ஆசிரியர், இராமச்சந்திரக் கவிராயர், கோணமடை ராமசாமி முதலானவர்கள் பற்றிப் பல கதைகள் வழங்கிவருகின்றன. கூத்துப் பனுவல் ஆசிரியர்கள் சுருள் என்றும் முடுகு என்றும் கூறப்படும் சந்த அமைப்பில் பாடல்களை எழுதி *(prioritising rhythm)* தமது திறமையை வெளிப்படுத்தினர். இந்தப் புலவர்கள் வட்டார மரபு பழக்கவழக்கங்கள், வழக்காறுகளைப் பயன்படுத்திப் பண்பாட்டில் கால்பதித்தவர்களாக இருக்கின்றனர்.

'தமிழில் பாரதக் கதைப்பாடல்' என்கிற தலைப்பில் உரையாற்றிய பேரா. ரா. அழகரசன், பாரதக் கதையையொட்டித் தமிழில் வில்லுப்பாட்டு, அம்மானை, கூத்து, உடுக்கடிப் பாட்டு போன்ற வடிவங்களில் தமிழ் நாட்டார் மரபில் புழக்கத்திலிருந்த கதைப்பாடல்களை முன்வைத்து கதைப்பாடல் என்கிற வடிவம், அதன் கருத்தியல், அதற்கென உள்ள தனித்ததொரு அழகியல் என்று அறியமுடிகிறது. மேற்கத்தியப் பாரம்பரியத்தில் இருந்த ballad (story song) என்ற சொல்லே 'கதைப்பாடல்' எனத் தமிழில் வழங்கப்பட்டதாக மு. அருணாசலம் கூறியதைக் குறிப்பிட்டு, கதைப்பாடல்களின் பொருண்மையை வைத்து உள்ளூர் வரலாற்றைக் காணமுயல்கின்ற அதேவேளை, இந்தப் பாடல் வடிவம் உலகளவிலான ஒப்புமையைக் கொண்டுள்ளதையும் காணமுடிகின்றது. இதற்கு உதாரணமாக, அணை அல்லது பாலம் கட்ட பலியிடப்பட்ட பெண்களை மையப்படுத்தி ருமேனியா, அல்பேனியா, பால்கன் மற்றும் பல ஐரோப்பிய நாட்டார் வழக்காறுகளிலும், இந்தியாவில் சந்தால் இனத்தவரிடமும், கர்நாடகத்திலும் நிலவும் கதைப்பாடலுக்கு இணையாகப் பேச்சியம்மன் கதைப்பாடலும், வழிபாடும் உள்ளது கவனிக்கத்தக்கது. மேலும், காப்பிய, வீரயுகப் பாடல் மரபிலிருந்து வேறுபட்டு, சாகசங்களைவிட கதைப் பாத்திரங்களின் அவலமான முடிவுகளையே முதன்மைப்படுத்துகிறது. அதன் மூலம் காப்பிய, நாடகச் சூழலில் தனிமனிதனை முன்வைத்துப் பேசப்பட்ட 'துன்பியலிலிருந்து' வித்தியாசப்பட்டதாக இருக்கிறது. இந்த வகையில் புதினங்களுக்கு முன்னமே சமகாலத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு, சமூக அக்கறை கொண்டவர்களின் உரிமைக் குரலையும், அவர்கள் சந்தித்த அவலத்தையும் பேசுகிறது. வெவ்வேறு பண்பாடுகளில் கதைப்பாடல் இடைக்காலத்தில்தான், (15-16 ஆம் நூற்றாண்டுகளுக்குப்பின்) உருவாகியிருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, பிரஞ்சுப்புரட்சி, தொழில்புரட்சிக்கு முன்னமே எழுந்த சனநாயகத்துக்கான குரலாக உள்ளது. ஒவ்வொரு பண்பாட்டிலும் ராபின் ஹூட்டுக்கு இணையான நாயகனும், பெண்களை அநியாயமாகப் பலியிடும் கதையும் கதைப்பாடல் வடிவில் பாடப்படுகின்றன. இந்தக் கண்ணோட்டத்திலேயே பாரதக் கதையில்

அங்கீகரிக்கப்படாத கர்ணன், அபிமன்யு ஆகிய பாத்திரங்களையும், அருச்சுனனால் பாதிக்கப்பட்ட பெண்களாக அல்லி, பவளக்கொடி போன்ற பாத்திரங்களையும் முதன்மைப்படுத்துவதாகப் பாரதக் கதைப்பாடல்கள் இருக்கின்றன. இந்த மாற்றத்தைச் சிலப்பதிகாரக் கதை மாந்தர்களான கண்ணகி, மாதவி கதைப்பாடலில் காணமுடியும். பின்னாளில் இந்த இடைக்கால கதைப்பாடல் மரபே லட்சிய உலகில் சஞ்சரிக்கும் காவிய உலகிலிருந்து சமகாலச் சம்பவங்களை மையப்படுத்திய புதின உலகிற்கு நுழைவதற்கான பாதையாக அமைந்தன. இன்றைய புதினங்கள், அரங்கச் செயல்பாடுகள், கவிதைகளில் தொன்மங்களை மறுவாசிப்புச் செய்யும் போக்கும் கதைப்பாடல் மரபாலேயே சாத்தியமாகியுள்ளன. எம். டி. வாசுதேவ நாயரின் பீமன் பற்றிய இரண்டாமிடம் என்ற மலையாள நாவலும், கவிதா கேனின் கர்ணனின் மனைவி என்ற ஆங்கில நாவலும், பிரளயன், ந. முத்துசாமி மங்கை போன்றோரின் மரபை மீட்டெடுக்கும் நவீன அரங்கச் செயல்பாடுகளும், ஆங்கிலக் கவிஞர் ஸ்ரீலதா பாரதப் பெண் பாத்திரங்களை ஒட்டி எழுதியுள்ள கவிதைத் தொகுப்பும் இதற்கு உதாரணமாக உள்ளது.

காலந்தோறும் பாரத நூல்கள் என்ற என் உரையானது, காலந்தோறும் தமிழில் தொடர்ந்து தோன்றிவந்த பாரத நூல்கள் பற்றிய மதிப்பீடாக அமைந்திருந்தது. மகாபாரதத்திற்கு இந்திய எழுத்திலக்கிய மரபில் மற்ற மொழிகளுக்கு இல்லாத செல்வாக்கு தமிழுக்கு மட்டுமே உண்டு என்றும் தமிழில் மிகுதியான பிரதிகள் கிடைத்துள்ளன. சமஸ்கிருதத்தைக் கடந்து முதலில் தமிழில்தான் பாரதக் கதை நூலாக இயற்றப்பட்டதோடு, தென்னகத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட வியாசர் பெயரால் கிடைக்கும் மகாபாரதப் பிரதிகளில் தமிழ் வழக்குகள் இடம்பெற்றன என்ற பூனாவில் பண்டார்க்கர் ஓரியன்டல் நிறுவனம் நிகழ்த்திய ஒப்பாய்வு தெரிவிக்கிறது. தமிழிலும் இந்த மாற்றங்கள் பெருந்தேவனார் தொடங்கி வில்லிபுத்தூரார், நல்லாப்பிள்ளை ஆகியோரால் தொடர்ந்தது. மேலும், மகாபாரதம் தமிழகத்தில்தான் வழிபாடாகவும் நிகழ்த்து கலையாகவும் (சொற்பொழிவு, கூத்து, சடங்கு) இருக்கிறது. இந்தியாவில் வேறெங்கும் காணமுடியவில்லை.

ஐந்தாம் நூற்றாண்டில் பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றிய நூல் (சில செய்யுட்கள் மட்டும்), சின்னமனூர்ச் செப்பேட்டில் குறிக்கப்படும் பாரத நூல், கல்வெட்டில் குறிக்கப்படும் பாரத நூல் ஆகியவை கிடைக்கவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பாரத வெண்பா மூன்று பருவங்கள் மட்டுமே கிடைக்கின்றது. தமிழர்கள் அதிகம் கொண்டாடும் வில்லிபாரதமும் அதைப் பூர்த்தி செய்ய எழுந்த அரங்கநாதக் கவிராயர் பாரதமும், ஆதிபருவத்தந்தாதி பருவமும் இடைக்காலத்தில் எழுந்தவை. தமிழில் பாரதக் கதையை முழுமையாகப் பாடும் நோக்கில் இயற்றப்பட்டது நல்லாப்பிள்ளை பாரதம். மேலும், பாரதம் நாட்டார் கூறுகளை உள்வாங்கி பல கிளைக்கதைகளுடன் காணப்படுகின்றது.

பாரதியார் எதிர் காலனிய பின்னணியில் வைத்துப் படைத்த பாஞ்சாலி சபதம் தமிழ்க் காப்பிய மரபின் சிறப்புகளாலேயே தனிச்சிறப்பு பெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சண்முகக் கவிராயர் இயற்றிய பாரத வசன காவியமும் பாரதக் கீர்த்தனையும் பிற்காலத்தில் எழுந்த செய்யுள் அல்லாத மாற்று வடிவங்களாக இருந்தன. இவற்றில் வசன காவியம் தமிழ் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற நூலாகும். இருபதாம் நூற்றாண்டில் பரவலான வாசிப்பைக் கருத்தில்கொண்டு, ராஜாஜி, பிரபஞ்சன், நா. பார்த்தசாரதி, எஸ். ராமகிருஷ்ணன், ஜெயமோகன், சிவகுமார் முதலானவர்கள் அவரவர் பார்வையில் பாரதத்தைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப படைத்தனர். இந்தப் படைப்புகள் காலந்தோறும் தமிழ் மக்களிடம் பாரதக்கதை பெற்றிருந்த வரவேற்பைக் காட்டுகின்றன.

சங்க இலக்கியம், நாட்டார் வழக்காறுகள், நவீன இலக்கியம் என தமிழ் இலக்கியப் பண்பாட்டு வரலாற்றில் பாரதக் கதைகள் உண்டாக்கிய தாக்கம் என்பதாக அல்லாமல், அவற்றோடு தமிழ்ப் பண்பாடு கொண்டிருந்த ஊடாட்டத்தை மையப்படுத்துவதாக இந்நிகழ்வு அமைந்திருந்ததோடு, தமிழ்ச் சமூகத்தில் பாரதக்கதை பெற்றிருந்த வரவேற்பையும், தமிழ் மரபு பாரதக் கதையோடு நடத்திய உரையாடலையும் எடுத்துக்காட்டும் விதமாக இக்கருத்தரங்கு அமைந்திருந்தது.

("மகாபாரதமும் தமிழ் இலக்கியங்களும்" என்ற தலைப்பில் தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன்செட்டி இந்துக்கல்லூரித் தமிழ்த்துறையும் சாகித்திய அகாதெமியும் இணைந்து 14.8.2025 அன்று நடத்திய ஓர் உரையரங்கின் கட்டுரை வடிவம்.)

●

கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன்செட்டி இந்துக் கல்லூரி, சென்னை. 72.

கட்டுரை

அம்பையின் படைப்பில் குடும்ப உறவுகள்

வெ. சந்தியா

முனைவர் நா. சிவகுரு

‘அம்பையின் கதை மொழியும் கதையைக் கட்டமைக்கும் விதமும் தமிழ்ச் சிறுகதைகளுக்கு மிகவும் புதியது. அதன் காரணமாகவே அவர் ஆழ்ந்து வாசிக்கப்பட்டார். இன்றும் கொண்டாடப்படுகிறார்‘

- எஸ். ராமகிருஷ்ணன்

அம்பை தமிழ் இலக்கியப் படைப்புலகில் பெண்ணிய எழுத்தாளராக பலராலும் அறியப்பட்டவர். அம்பை தனது படைப்புகளில் மட்டும் பெண்ணியம் பேசாமல் அவரது செயல்பாடுகளின் வழியாகவும் பெண்களுக்காகப் போராடி வருபவர். அவர் ஸ்பேரோ (SPARROW - SOUND & PICTURE ARCHIVES FOR RESEARCH ON WOMEN) என்ற ஆவணக் காப்பகத்தின் மூலம் பெண்களின் வாழ்க்கையும், சரித்திரத்தையும் ஆவணப் படுத்தி வருகிறார். ஸ்பேரோ இந்தியாவில் பெண்களுக்கான ஒரே ஆவணக் காப்பகமாக செயல்பட்டு வருகிறது. சிறுகதைகளின் வழியே குடும்ப அமைப்பில் பெண்களின் நிலையை அம்பை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளார். அவரது பல சிறுகதைகள் குடும்ப உறவுகளின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துபவைகளாக அமைந்துள்ளன. அம்பையின் 'காட்டில் ஒரு மான்' என்ற சிறுகதைத் தொகுப்பில் அமைந்துள்ள 'பிரசுரிக்கப்படாத கைப்பிரதி' என்ற சிறுகதையில் அமைந்துள்ள குடும்ப உறவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

குடும்ப உறவுகள் :

குடும்பம் என்பது மனித சமுதாயத்தின் முக்கியமானதொரு அங்கமாகும். குடும்பமானது கணவன், மனைவி, குழந்தைகள், தாத்தா, பாட்டி மற்றும் பிற உறவுகளை உள்ளடக்கிய அமைப்பாகத் திகழ்கிறது. "அன்பு வளர்வதற்கும், தன்னலம் குறைந்து பொதுநலம் பெருகுவதற்கும், இன்றளவும் சமுதாய வாழ்வில் ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவற்றைக் காப்பதற்கு மிகப் பெரிய காரணமாக இருக்கும் அமைப்பு குடும்பம்" (ந. பிச்சமுத்து - 1988 - ப.210). இத்தகைய குடும்பத்தில் உள்ள உறவுகள் தான் மனித வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்குகின்றன.

குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையுடன் வாழும் போது குடும்ப உறவுகள் சிறக்கின்றன.

கணவன் – மனைவி உறவு :

திருமணம் என்னும் பந்தத்தால் ஒன்றுசேரும் கணவன்- மனைவி உறவானது குடும்ப உறவுகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அம்பையின் 'பிரசுரிக்கப்படாத கைப்பிரதி' என்ற சிறுகதையில் திருமகள் முத்துக்குமரனை விரும்பி திருமணம் செய்து கொண்டாலும் அவளது உணர்வுகளை மதிக்கத் தெரியாத கணவனாக அவன் இருப்பதால் அவர்கள் உறவில் பிரச்சனைகள் எழத் தொடங்குகிறது. திருமணத்திற்குப் பின்பு சமைப்பதும், விருந்தோம்புவதும் மட்டுமே பெண்களுக்கான வேலை. படிப்பதும், எழுதுவதும் ஆண்களுக்கான வேலை என்ற எண்ணம் கொண்டவனாக முத்துக்குமரன் இருப்பதை திருமகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. "எப்பப் பாத்தாலும் என்ன டைப் ரைட்டர் முன்னால வேல? நான் கவிதை எழுதுறவன் நான் அப்பிடி உக்காந்தா சரி, நீ என்னனுட்டு எழுதி கிழிக்கறே" என்று முத்துக்குமரன் திருமகளிடம் கேட்பதிலிருந்து ஆணாதிக்கச் சிந்தனை கொண்ட கணவனாக அவன் இருப்பதை அறியமுடிகிறது. திருமண உறவில் பெண்ணானவள் எத்தகைய நிலைக்கு தள்ளப்படுகிறாள் என்பதை திருமகள் "உங்க தமிழ்ப் பண்பாட்டுல ஒரு பொண்ணுக்கு படுத்துத் தூங்க வேளை, பொழுது உண்டில்லையா?" என்று முத்துக்குமரனின் நண்பர்களிடம் ஆதங்கப்படுவதிலிருந்து உணர முடிகிறது. முத்துக்குமரனின் அளவு கடந்த ஆதிக்கத்தாலும், தாக்குதல்களாலும் பாதிக்கப்படும் திருமகள் ஒரு கட்டத்தில் அவனுக்கு மனைவி என்ற உறவிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டு தன் மகளுக்கு தாயாக மட்டும் வாழ்க்கையை தொடர தீர்மானிப்பதால் அவர்களுக்கு இடையேயான கணவன் - மனைவி உறவானது முடிவுக்கு வருகிறது. ஆனால் திருமகளின் தந்தையான ராமசாமி அவர் மனைவிக்கு நல்ல கணவர். விதவையை திருமணம் செய்வது என்பது மறுவாழ்வு கொடுப்பது கிடையாது என்ற தூய்மையான எண்ணத்துடன் அவர் மனைவியை திருமணம் செய்துகொண்டவர். திருமணத்திற்கு முன்பு அவரது மனைவி படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்காக திருமணம் முடிந்ததும் ஆசிரியர் பயிற்சியில் மனைவியை சேர்த்துவிட்ட பின்பு மலேயாவுக்கு புறப்பட்டுச் சென்றவர். மனைவியின் பிறந்த தினத்தை உணவு மற்றும் இனிப்புடனும், இறந்த தினத்தை 'வாராய் நீ வாராய்' என்ற பாட்டுடனும் நினைவு கூர்ந்து மனைவியின் நினைவுகளில் வாழும் கணவராக ராமசாமி இருப்பதையும் அம்பையின் பிரசுரிக்கப்படாத கைப்பிரதி என்ற சிறுகதை பதிவு செய்துள்ளது. (அம்பை - 2000 - பக்.83-104)

தாய் – மகள் உறவு :

முத்துக்குமரனை பிரிந்து காசிக்குச் சென்றபிறகு பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாகப் பணிபுரியும் திருமகள் அதிகப்படியான வேலைகளுக்கு மத்தியிலும் மகள் செந்தாமரையின் மீது அதிக அன்பும், பாசமும் காட்டும் தாயாகவே இருக்கிறாள். தாயைப் புரிந்துகொண்ட மகளாகவே செந்தாமரையும் பள்ளியிலிருந்து வந்ததும் திருமகளுக்காக டீ போட்டுக் கொடுப்பது, அகராதியில் சொற்களை பார்ப்பது, தட்டச்சுப் பொறியின் நாடாவை மாற்றுவது, புத்தகங்களில் மேற்கோள்களைத் தேடுவது என அம்மாவுக்கு உதவி

புரிகிறாள். திருமகளுடன் வாழ விரும்புவதாகக் கூறும் மோஹன் குப்தாவுக்கு "நானும் என் மகளும் கூடிய இந்த உலகை உருவாக்க நான் நிரம்பச் சிரமப்பட்டேன் மோஹன். அதை உன்னால் கற்பனை கூட செய்ய முடியாது. அது உன் நாடகங்களை விட அதிக நாடகத் தன்மையுடையது. முத்துக்குமரன் இல்லாத இந்த வீட்டை அமைக்க நான்... நான்... பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்..." என்று அவள் பதில் அளித்ததிலிருந்து மகளுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த தாயாகவே திருமகளை அம்பையின் படைப்பில் காண முடிகிறது. திருமகளுக்கு மூன்று வயதாக இருக்கும் போதே அவளது தாய் இறந்து விட்டதால் அவர்களின் உறவு கதையில் பெரிதாக பேசப்படவில்லை. (அம்பை - 2000 - பக்.83-104)

தந்தை – மகள் உறவு :

மனைவி இறந்த பிறகு மூன்று வயதான மகளை மலேயாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்த ராமசாமி தனி ஆளாகவே திருமகளை வளர்த்து ஆளாக்குகிறார். ராமசாமி "நீ படிம்மா. இப்பதான் படிக்க முடியும்" என்று திருமகளிடம் சொல்வதுடன் மகள் படிக்க வேண்டும் என்பதற்காக எல்லா வேலைகளையும் அவரே ஏற்றுச் செய்யும் பாசமிகு தந்தையாகவும் இருக்கிறார். திருமகள் முத்துக்குமரனை விரும்புவதாகச் சொன்னபோது மறுப்பு சொல்லாத தந்தையாக ராமசாமி இருப்பதையும், தந்தை இறந்த பிறகும் அவரின் கொள்கைகளை பின்பற்றும் மகளாக திருமகள் இருப்பதையும் கதையின் வழி அறியமுடிகிறது. செந்தாமரை குழந்தையாக இருந்தபோதே அவளுக்கும் முத்துக்குமரனுக்கும் இடைவெளி ஏற்பட்டு விட்டாலும் குழந்தையாக அவள் தந்தையின் கையில் இருந்த புகைப்படத்தின் வழியே அவர்களின் தந்தை - மகள் உறவினை கதையில் காண முடிகிறது. (அம்பை - 2000 - பக்.83-104)

பிற உறவுகள்

செந்தாமரை பிறந்த ஆறாம் மாதம் அவள் ராமசாமியின் படுக்கையையும், சட்டையின் ஒரு பகுதியையும் நனைத்துவிட்டு அவர் சட்டைக் காலரை இழுத்தவாறு கிடக்க ராமசாமி இறந்து போவதாக அவர்களின் தாத்தா - பேத்தி உறவு நிறைவு பெறுகிறது. ராமசாமி இறந்து அவரைக் கொண்டு போன போது முத்துக்குமரன் அதிகமாக அழுததிலிருந்து இருவருக்கும் இடையேயான மாமனார் - மருமகன் உறவை புரிந்துகொள்ள முடிகிறது. ராமசாமி வீட்டுக்கு வரும் தூரத்து உறவினர்களும் பெயரளவு குடும்ப உறவுகளாக கதையில் இடம்பெற்றுள்ளனர். (அம்பை -2000 - பக்.83 - 104)

தொகுப்புரை

- ★ தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் குடும்ப உறவுகளின் பல்வேறு விதமான பரிமாணங்களை அடையாளப் படுத்துவதில் அம்பை முக்கியப் பங்கு வகித்திருப்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.
- ★ அம்பையின் படைப்பில் கணவன் - மனைவி உறவானது இரு வேறு கருத்தாக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. ஆணாதிக்கச் சிந்தனைகள் கொண்ட கணவனாக மனைவியிடம் நடந்து கொள்ளும்போது அவர்களுக்கு இடையேயான உறவு சிதைந்து விடுவதையும், மனைவியின் உணர்வுகளை மதிக்கத் தெரிந்த கணவனால் கணவன் - மனைவி உறவானது வலுப்படுவதையும் அறியமுடிகிறது.
- ★ மகளுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்த தாய், தாயைப் புரிந்துகொண்ட மகள் என தாய் - மகள் உறவானது படைக்கப்பட்டுள்ளது.
- ★ தந்தை - மகள் உறவானது தந்தைக்கு மகள் மீதான அன்பின் அடிப்படையிலும், மகளுக்கு தந்தை மீதான புரிதல் அடிப்படையிலும் அமைந்துள்ளது.
- ★ பேத்தி மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் தாத்தாவின் இறுதி தருணங்களும் பேத்தியுடனே அமைந்து விடுவதையும், மாமனாரின் இழப்பைத் தாங்க முடியாத மருமகனின் துயரம் போன்றவற்றையும் பிற உறவுகளின் வழியே அறிந்துகொள்ள முடிகிறது.

பார்வை நூல்கள் :

1. அம்பை - காட்டில் ஒரு மான், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், 668, கே.பி சாலை, நாகர்கோவில் - 629001
2. பிச்சமுத்து, ந. - மு. வ. நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், சக்தி புத்தக நிலையம், சென்னை

●

கட்டுரையாளர்கள்:

வெ. சந்தியா
முனைவர் பட்ட ஆய்வாளர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு,வேலூர் - 632115.

முனைவர் நா. சிவகுரு,
இணைப்பேராசிரியர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் - 632115

கொத்தாளி நாவல் காட்டும் இனக்குழுவும் அடிமைநிலையும்

ல.அ.முஹம்மது அலி ஜின்னாஹ்
முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்

அலைகுடிகளாக வாழ்ந்த மனித சமூகம் நாகரிக வளர்ச்சிக்கு உட்பட்ட பின்புதான் நிலையான வாழ்வியலை மேற்கொள்ளத் தொடங்கியது. மனித வாழ்வியலை ஓரிடத்தில் நிலைநிறுத்தியதில் ஆற்றங்கரை நாகரிகங்களே முதன்மைப் பங்காற்றின. புலம்பெயர்ந்து நாடோடிகளாய் உலகமெங்கும் பரவி விரவிக் காணப்பட்ட மனித இனம் தங்கள் மூதாதையர்களின் பெயர்களை மரியாதை மற்றும் வழிபாட்டின் காரணமாகத் தம் பெயர்களுடன் இணைத்துக் கொண்டு பயணித்தனர். அவ்வாறு இந்தியா முழுவதும் பரவியிருந்த ஒட்டுப் பெயர்களில் ஒன்றாகக் ‘கொத்தாளி’ காணப்படுகிறது. பின்னாளில் சிறுதெய்வ வழிபாடாக மாற்றமும் கண்டுள்ளது. 'கொத்தாளி' என்னும் இனக்குழுத் தெய்வத்தின் முன்னிலையில் மனித சமூகத்தில் நிகழ்த்தப்படும் வன்கொடுமைகள், மனித நேயமற்ற செயல்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுவதாக முஹம்மது யூசுப் எழுதிய

'கொத்தாளி' நாவல் அமைந்துள்ளது. இந்நாவலில் இடம்பெறும் சமூக மற்றும் வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையிலான புனைவுகளை இனக்குழுப் பண்பாட்டு மானுடவியல் மற்றும் அடிமை நிலைச் சமூகவியல் ஆகியவற்றின் நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது.

இக்கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் 'கொத்தாளி' நாவல் 2023-ஆம் ஆண்டு வெளிவந்ததாகும். இந்நாவல் தாய்வழிச் சமூக வாழ்வியலைக் கதைக் களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது; சூழலியல் மற்றும் மானுடவியல் வரலாற்று நோக்கில் இனக்குழு வாழ்வியலைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. அடிமைநிலைச் சமூக உருவாக்கத்தையும், அதன் கட்டமைப்புக் கூறுகளையும், மனித குலத்தின் மீது மனிதனே நிகழ்த்தும் வன்முறைகளையும் வெளிக் கொணர்கிறது. எனினும் கதை சொல்லும் முறையால் 'கொத்தாளி' நாவலானது புலனாய்வு வகைமையைச் சார்ந்ததாக உள்ளது.

தாய்வழிச் சமூகத்தைப் பேசுவதன் வாயிலாகக் கதையை உருவாக்கி, அதில் சூழலியல், வரலாறு, மானுடவியல், மொழியியல் என வெவ்வேறு துறைகளின் தொன்ம ஆவணங்களின் வழி புனைவை விரியச் செய்கிறார். சாதியத்தின் தன்மை, சாதிய வன்முறையினால் உண்டாகும் விளைவுகள் ஆகியவற்றையும் அவை அரசியலாக்கப்படுவதையும் 'கொத்தாளி' நாவல் தன் களமாகக் கொண்டுள்ளது. சமூக நிகழ்வுகளைத் துணிச்சலாக வெளிப்படுத்துவதுடன், நாளுக்கு நாள் சமூக ஊடகங்களால் அதிகரித்துவரும் சாதிய சிந்தனையின் அறியாமையைப் போக்கும் விதமாகக் குற்றப்புலனாய்வு அடிப்படையில் விறுவிறுப்புடனும் நாவலாசிரியர் இக்கதையினை எழுதியுள்ளார்.

'கொத்தாளி' – கதையும் சமூகமும்

கொத்தாளி நாவல் கதையின் மையப்பாத்திரமாக வரும் செந்தட்டி அய்யனார் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் ஆயினும் கல்வி கருவியைக் கொண்டு அரசுப் பணியில் மேனிலை அடைந்த நேர்மையான அதிகாரியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

''1990 காலகட்டத்தில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த பழனிமுத்து சிவகாமி அவர்களால் 'சிறந்த பணியாளர்' எனும் நன்னடத்தை நற்சான்றிதழ் வழங்கப்பட்டு கிராம ஊராட்சி அலுவலகத்திற்கு மாற்றலாகி வந்த கதையை வழக்கறிஞரிடம் கூறினார் செந்தட்டி'' (முஹம்மது யூசுப், கொத்தாளி, ப.39).

கடமை தவறாது நேர்மையுடனும் கண்ணியத்துடனும் உழைத்த உழைப்பிற்குக் கிடைத்தப் பரிசு யாதெனின் அவருடைய பணி ஓய்வுப் பணத்தைக் கிடைக்கப் பெறாமல் செய்ததுடன், பல்வேறுபட்ட ஊழல்களிலும் அவருடைய பெயர் சேர்க்கப்பட்டு குற்றவாளியாக்கப் படுகிறார்.

"கோண்டு, பறையர், ஹோலியர் (கோலியர்-நெசவுத் தொழில்), சாமர் என அனைவரும் ஒன்றுதான் என்று எலியட் இன ஆய்வு கூறினாலும், எட்கர் தர்ஸ்டனும் ரஸ்ஸலும் கூட எழுதி வைத்தாலும், பட்டியல் இன மக்கள் சிதறு தேங்காய் போல துண்டு துண்டாக உடைந்து போனதன் மிச்ச மீதி ஆட்கள் வேறுவேறு பெயர்களில் கொத்தாளி ஊரில் வாழ்ந்து வந்தனர்'' (முஹம்மது யூசுப், கொத்தாளி, ப.51) என்கிறார். கொத்தாளி இன மக்களின் வேறுபெயர்களாக, ''ஹரிஜன், தாழ்த்தப்பட்டவர், பஞ்சமர், தீண்டத்தகாதவர், ஒதுக்கப்பட்டவர், கீழ்ச்சாதி, ஆதி திராவிடர், பட்டியல் இன வகுப்பினர் என்பன சுட்டுப்பெயர்கள்" (முஹம்மது யூசுப், கொத்தாளி, ப.51)

இவ்வாறு, பல்வேறு பெயர்களில் இந்த ஓர் இனத்தார் மட்டும் நாடு முழுவதிலும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதைப் பார்க்கமுடிகிறது. இந்தியா முழுவதிலும் ஒரே இனம் மட்டும் அனைவராலும் குறி வைத்துத் தாக்கப் பட்டுள்ளது. அம்பேத்கர், பெரியார் போன்ற பெருந் தலைவர்கள் தோன்றி ஒடுக்கப்பட்டோருக்காக உரிமைக் குரல் கொடுத்து மீட்டெடுக்க முனைந்து, சட்டங்களே இயற்றினாலும் புதிதாக உருவாகும் இளம் தலைமுறையினரும் புதிய சிந்தனையுடன் செயல்படாமல், பழைமையுணர்ச்சியில் சக மனிதர்களை அடிமைகளாக எண்ணி இழிவுப்படுத்த முயலுவதை,

''சொத்தை இழந்தாச்சு, குடும்பத்தை இழந்தாச்சு, பொண்டாட்டி புள்ள இவ்வளவையும் விட்டாச்சு, ஆனாலும் நம்மள நிம்மதியா இருக்க

விடுறானுங்களா" (முஹம்மது யூசுப், கொத்தாளி, ப.102)

என்று புலம்பும் அளவிற்கும் கொடுமைக்கு உட்படுத்தப் படுவதையும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் உயர் பதவிகளுக்குப் போட்டியிடக் கூடாது; தகுதியானவர்கள் கிடையாது என்று எண்ணிடும் எண்ணத்தை எல்லாம் மாற்றி அமைத்து, செந்தட்டி அய்யனார் போன்றோர் உயர்நிலையை எட்டும்போது, பின்தங்கிய, அறிவற்ற, எத்தகுதி நிலைக்கும் பொருந்தாத மனிதர்கள், தாழ்த்தப்பட்ட உயரதிகாரிகளைக் கொலை செய்ய முயல்கின்றனர். கொலை முயற்சி தோல்வி அடையும்போது, உடனடியாக வேலையில் நெருக்கடியையும் மன உளைச்சலையும் தந்து தற்கொலை செய்துகொள்ளத் தூண்டுகின்றனர். இதனை,

பெரும் கட்டிட முதலாளிகளின் அழுத்தம் தாங்காமல் கருங்குளம் மாவட்ட துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஒருவர் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்ட கேஸில் உடன்வேலை செய்யும் ஆட்களுக்கு எதிராக, உண்மைக்குக் குரல் கொடுத்தார் செந்தட்டி என்பதற்காக, லாரி ஏற்றி கொலை செய்ய நடந்த முயற்சியில் மூன்று மாத காலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று உயிர் மீண்டு வந்தார் (முஹம்மது யூசுப், கொத்தாளி, ப.40)

என்பதிலிருந்து ஒரு நேர்மையான அதிகாரியாகப் பணிபுரியும் கீழ்ச் சாதிக்காரர் என்ற மனப்பான்மையினால் ஏற்பட்ட சாதிவெறி 'மனித உயிர்' என்ற பகுத்தறிவினை மறந்து, 'கீழ்ச்சாதி உயிர்' என்ற மனநிலையில் இரக்கம் காட்ட மறுப்பதை நாவலில் காண முடிகிறது.

பிறரை நம்ப வைத்து ஏமாற்றுதல், வஞ்சனை செய்தல், வாழ்க்கையின் மாண்புகளை அறியாமல் இருத்தல், அன்பும் நட்பும் இல்லாமை போன்ற குணங்களை எல்லாம் விடுத்து ஈகையுடனும், முற்போக்குச் சிந்தனையுடனும், போதுமென்ற நிறை குணத்தைப் பெற்றும், வாழ்க்கையின் மாண்புகளை அறிந்தும், உழைப்பின் உயர்வையும் உன்னதத்தையும் பாராட்டுபவராகவும், பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை என்ற பல உன்னத குணங்களையும் உயரிய பண்புகளையும் பெற்ற செந்தட்டி அய்யனார் அறவழியில் வாழ்ந்திடும் வாழ்க்கையும் நேர்மையின் பார்வையில் கடமையைச் செய்தாலும், இவை அனைத்தையும் பார்க்காமல் அவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்று முத்திரையிட்டு, அவருக்கு வாகன ஓட்டியாக வரும் (பெயர் சூட்டப்படாத பாத்திரம்) ஒருவரால் புறமுதுகில் குத்தப்படுவது கொடுமையான சமூகநிலைமையைக் காட்டுவதாக இடம்பெற்றுள்ளது.

சமூகமானது சாதி, மத வன்மங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. மனித சாதி என்பது விலங்கு சாதியினின்று வேறுபடுத்திக் காட்ட எழுந்தது. அதில், ஈகை செய்வோர் உயர்வானர்கள் என்றும், ஈகைத் தன்மை இல்லாதோர் தாழ்ந்தோர் என்றும் கற்பிக்கப்பட்டது: "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் / நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில் / இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் / பட்டாங்கில் உள்ள படி" (ஔவையார், 'நல்வழி' #2). ஆனால், சாதியச் சமூகத்தில் இத்தகைய விழுமியங்களுக்கு மதிப்பில்லை என்பதை 'கொத்தாளி' நாவலின் மூலம் அறியமுடிகிறது.

செந்தட்டி அய்யனார் தான் நாற்பது வருடங்களாக உழைத்த உழைப்பின் பயனாகத் தனக்கு வரவேண்டிய தொகையைப் பெறமுடியாமல் அலைந்து திரிகிறார். தன் பக்கம் உள்ள நியாயத்தைக் கடிதமாக, விண்ணப்பமாகக் கொண்டுசென்று அரசு அலுவலக உயர் அதிகாரிகளிடம் கொடுத்தாலும் அவை ஓரங்கட்டவும் புறக்கணிக்கவும் படுகிறது. ஏனெனில், அவற்றை வாங்கியவர்கள் எல்லாம் உயர் சாதிக்காரர்கள். இதனை,

30 வருஷத்துல 25 கலெக்டர்கள் வேலை செஞ்ச ஒரே மாவட்டம் தூத்துக்குடி மாவட்டமாதான் இருக்கும். அடிக்கடி ரெய்டு நடத்துறார்ன்னு தூத்துக்குடி கலெக்டரா இருந்த ஆசிஷ்குமார் மேலேயே தன்னோட பையன் பிறந்த நாளைக்கு காஸ்ட்லி கிப்ட் வாங்கினார்னு லஞ்ச ஒழிப்புத் துறைய விட்டு விசாரணைக்கு உத்தரவு போட்டு அவரையே அங்க இருந்து தூக்கிட்டாங்க. கலெக்டருக்கே இந்தக் கதிதான் (முஹம்மது யூசுப், கொத்தாளி, ப. 40-41)

என்னுமிடத்தில் சாதியையும் மதத்தையும் மையமிட்ட அரசியல் சூழ்ச்சியினால் நேர்மையான அதிகாரிகள் பாதிக்கப்படுவதைப் பார்க்கமுடிகிறது.

கொத்தாளியும் அரசியலும்

அரசியல் செய்வதற்காக உருவாக்கப்படும் சூழலையும், அரசியல்வாதிகள் செய்யும் ஊழலையும், அரசியல்வாதிகளால் நிகழ்த்தப்படும் வன்முறைகளையும் முஹம்மது யூசுப் இந்நாவலில் திறம்படப் பேசியுள்ளார்.

கொத்தாளி நாவல் காட்டும் அரசியல் பதிவுகள் ஆங்கிலேய ஆட்சி காலத்தில் இருந்து தொடங்குகிறது. ஆங்கிலேயரின் ஆட்சியில் தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்திலும், பிஹாரின் சம்பாரண் என்னும் இடத்திலும் அவுரிப் பயிர் விளைச்சல் செழிப்பாக இருந்தது. எனவே அவுரி உற்பத்திக்காக ஆங்கிலேயர் ஏழைமக்களை வேலைக்குக் கொண்டு செல்கின்றனர். அப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்களுள் பெண் தொழிலாளர்களும் இருந்தனர் அவர்களில் ஒருத்தி தன் குழந்தைக்குப் பாலூட்ட எண்ணுகிறாள். அந்தப் பகுதியில், பெற்ற குழந்தையை நீலத்துணியில் படுக்க வைத்துவிட்டு அவுரி நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தாள் அவள். தானியங்களுக்குப் பதிலாக அவுரி விளைவிப்பதால் அதிக உணவுப் பஞ்சம் நிலவிய காலம். வேலை செய்தவளின் காதில் திடீரென பெற்ற குழந்தையின் அழுகுரல் கேட்டது. அவள் பசிக்கே உண்ண உணவில்லை. அவள் உடம்பில் தெம்பில்லை, குழந்தைக்குப் பாலூட்ட வழியில்லை. இருப்பினும் குழந்தை அருகில் சென்று கிளிமூக்கு மரப் பூக்களை எடுத்து சிரிக்க வைத்து வாரியணைத்து வற்றிய மார்பை குழந்தை வாயில் திணித்தாள்.

> "இரண்டாம் நாள் எப்போதும் போல குழந்தை அழுதது. பலாச மரத்தின் குச்சிகளைத் தட்டி சப்தம் எழுப்பி மீண்டும் வெற்று மார்பை குழந்தை வாயில் திணித்து ஏமாற்றினாள். ஒருவாரம் ஆனபோது அவளது வறண்ட மார்பிலும் ஈரமில்லை" (கொத்தாளி, ப.137).

என்கிறார் முஹம்மது யூசுப். கொடுமைகளின் உச்சம் என்னவென்றால் கொத்தாளிகளின் வாழ்வியலில் மாற்றம் என்பது பசியும் பஞ்சமும் பிணியும் தான். "அடித்தட்டு மக்களின் கடைசி ஆயுதம் உதிர்க்கும் வார்த்தைகள் மட்டுமே" (மேலது, ப.137) என்பதற்கு ஏற்ப அந்தத் தொழிலாளிப் பெண்ணின் அறச் சீற்றமே தொழிலாளிகளை இணைத்து ஒரு போராட்ட இயக்கமாக உருவானதையும் அது வரலாற்றில் சம்பாரண் சத்தியாகிரகம் என்னும் பெருநிகழ்வாகப் பரிணாமம் அடைந்ததையும் முஹம்மது யூசுப் பதிவு செய்துள்ளார்.

"இருள் நிறைந்த மனித வாழ்வின் ரகசிய பாகம் யாரும் அறியாதது, அன்று அழுத பெண்ணின் அழுகை வரலாற்று சம்பவத்தின் அடிக்கரும்பாக மாறியதை அவள் அறிந்திருக்கவில்லை" (மேலது, ப.138)

என்று 'இண்டிகோ கலகம்' உருவாக வித்தாக இருந்த அவளின் தியாகத்தை அவர் பெருமைப்படுத்துகிறார்.

"1835 முதல் 1848 வரை மதுரை மாவட்ட கலெக்டராகப் பணிபுரிந்த ஜான் பிளாக்பர்ன் என்பவரின் அடையாளச்சின்னமாகத் தான் மதுரை விளக்குத்தூண் விளங்குகிறது. அவர் உப்பையும் தமிழக அடிமைகளையும் வாங்கி விலைக்கு விற்பதை (This move would see the family diversifying in to the slave trade) பெரும் வணிகமாகச் செய்தவர் என்பதை கமுக்கமாக மறைத்து விட்டார்கள் வரலாற்று ஆசிரியர்கள் (முஹம்மது யூசுப், கொத்தாளி, ப.138)

என்பதிலிருந்து வெகுஜனத்துக்கு அதிகார வர்க்கம் இயற்றிக் கற்பிக்கும் வரலாற்றுப் பிரதிகளுக்கு அடியில் மக்கள் அறிய வேண்டியதும், அவர்கள் அறிந்து விடக்கூடாது என்று அதிகார வர்க்கம் இருட்டடிப்புச் செய்வதுமான மாற்று வரலாறு உறைந்து கிடப்பதையும் அதனை வெளிக்கொணர்வதே இலக்கியத்தின் பணி என்னும் தெளிவுடன் முஹம்மது யூசுப் எழுதி வருகிறார் என்பதையும் நாம் அறியலாம்.

திராவிடப் பழங்குடி இனமக்களை அடிமைகளாகப் பிடித்துச்சென்று விற்பனை நடத்தி அரசியல் லாபம் அடைந்துள்ளனர் முதலாளிகள். பறையர் இன மக்கள்; 1. அந்தணருக்கு, 2. முதலாளிக்கு, 3. கங்காணிகளுக்கு, 4. கணக்குப் பிள்ளைகளுக்கு, 5. பிள்ளைமார்களுக்கு, 6. படைவீரனுக்கு எனப் பட்டியலிடப்பட்டு அடிமைகளாகப் பிடித்து சென்று கொடுமைப் படுத்தப்பட்டுள்ளதை விவரிக்கிறது 'கொத்தாளி' நாவல்.

"தேர்தல் என்றாலே சாதி தானே. தூத்துக்குடி மாவட்டத்தில் சாதிவாரியாக நாடார் சமுதாயத்தினர் 32 சதவீதம் தாழ்த்தப்பட்டோர், 18 சதவீதம்

தேவர், ரெட்டியார் 6 சதவீதமும், யாதவர் 3 சதவீதமும் இதர வகுப்பினர் 7 சதவீதமும் பிராமணர் 2 சதவீதம் என்பது பொதுவிலுள்ள தேர்தல் கணக்கு" (முன்னுரை, கொத்தாளி, ப.5) என்னும் புள்ளி விவரக் கணக்கைத் தரும் முஹம்மது யூசுப், தாழ்த்தப்பட்டோர் அப்பகுதியில் 2-வது பெரும்பான்மையராக இருந்தபோதிலும் 'கொடியன் குளம்' போன்ற கொடுமைகள் மற்றும் துன்புறுத்தல்களைத் தவிர அவர்களுக்கென எதுவும் நிகழவில்லை, எந்த அடையாளமும் இல்லை என்பதை 'கொத்தாளி' நாவலில் முன் வைப்பதுடன், 'கொத்தாளி' நாவலின் மையக் கருவான பட்டியலின மக்களின் உழைப்பு, அவுரி விளைச்சல், குறுமரத்து உழவு, நெட்டாமைய உழவு என்று உழைப்பதைத் தவிர வேறு எதையும் யோசிக்காத அடித்தட்டு வர்க்க மனநிலையையும், வன்மம் மனித மனங்களில் நுழைந்து கொடுமை மற்றும் துன்புறுத்தல் ஆகியவற்றை நிகழ்த்திடும் அவலத்தையும், அவர்கள் திருந்துவதற்கான வாய்ப்பில்லாத சமூகச் சூழலையும், அதனை நிகழ்த்திடும் அரசியல் சூழ்ச்சிகளையும் துணிவுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

பட்டியலின மக்கள் கல்வி கற்கக் கூடாது, அரசு வேலைக்குச் செல்லக் கூடாது. அவ்வாறு சென்றாலும் நேர்மையாகவும், உண்மையாகவும் வாழக்கூடாது என்று இயற்றப்படாத சட்டங்கள் நிலவுவதையும் அவர்கள் உழைத்து முன்னேறினால் அவர்கள் மீது வீசப்படும் விமர்சனங்களையும், பழிகளையும் துணிவுடன் எதிர்கொண்டு வாழுமிடத்து பழிவாங்கப்படும் பேரவலத்தைத் துணிவுடன் பேசியுள்ளார் ஆசிரியர்.

●

கட்டுரையாளர்:

ல.அ. முஹம்மது அலி ஜின்னாஹ்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

முனைவர்.அ. தௌஃபீக் ரமீஸ்
உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது

உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்

2850	2734	8571
2847	2735	8572
2846	2572	8570
2849	2733	6468

தனி இதழ் ₹ 45.00 / ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00, / ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடு

தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்

ஆறு தொகுதிகள்

தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு

தொகுதி-1	தோழர் தமிழ்ஒளி கவிதைகள்	விலை: ரூ.390/-
தொகுதி-2	தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி ஒன்று):	விலை: ரூ.315/-
தொகுதி-3	தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி இரண்டு)	விலை: ரூ.390/-
தொகுதி-4	தோழர் தமிழ்ஒளி சிறார் பாடல்கள் - கதைகள்	விலை: ரூ.315/-
தொகுதி-5	தோழர் தமிழ்ஒளி சிறுகதைகள் - ஓரங்க நாடகங்கள்	விலை: ரூ.360/-
தொகுதி-6	தோழர் தமிழ்ஒளி ஆய்வுகள் - கட்டுரைகள் - தன் வரலாறு	விலை: ரூ.430/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும்

மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

Article



Religion, Conflict, and Feminist Self-Fashioning in Coming Out as Dalit and Reading Lolita in Tehran

Ms. Irfana Parveen
Dr. Saburunnisa A

Abstract

This article compares Yashica Dutt's memoir Coming Out as Dalit (2019) with Azar Nafisi's memoir Reading Lolita in Tehran (2003). It looks at how religious structures as of Hindu caste ideology in India and Islamic theocracy in post-revolutionary Iran create conflict experienced, told, and resisted by women writers. Using postcolonial, feminist, and subaltern perspectives, the paper argues that both texts show religion as a source of power that operates through institutions, feelings, space, and daily habits. Dutt and Nafisi use different strategies to shape their identities. Dutt's "coming out" redefines Dalit identity in response to caste-Hindu stigma that is accepted as a religious order. Nafisi's literary salon promotes aesthetic disagreement against theocratic norms. Despite their different backgrounds, both authors turn reading and self-narration into ways to challenge public opinions. This comparison reveals similarities in how they face issues like the control of women's bodies, surveillance, and exclusion. It also highlights differences, such as the pursuit of secularization in India versus private negotiation in Iran. Ultimately, the texts show that religious conflict goes beyond doctrine; it is also structural, ingrained in bureaucracies, neighborhoods, and personal relationships. They illustrate how feminist narrative practices can create an ethical community that goes beyond traditional beliefs.

Keywords: religion, caste, Dalit, feminism, postcolonial, subaltern, secularism, life-writing, comparative literature

Introduction: Religion as Social Infrastructure

Religious conviction in South Asian and Middle Eastern contexts is often discussed in terms of belief, doctrine, and ritual. However, in both India and Iran, religious structures also play a crucial role. They influence access to education and jobs, regulate how people dress and move, and enforce control over borders whether national, communal, or personal. Yashica Dutt's Coming Out as Dalit and Azar Nafisi's Reading

Lolita in Tehran focus on women navigating these structures. Dutt views caste as a religiously determined system that reaches into modern bureaucracies and markets. Nafisi writes from an educational environment in an Islamic Republic where law and morality are intertwined.

This article treats "religion" as a changing field, in line with Talal Asad's idea of a "discursive tradition" that is produced over time, rather than being timeless. In this context, gender, class, and nation intersect. Through close analysis, it can be analyzed how these authors narrate the lived texture of religious conflict and what strategies they deploy to refuse the forms of subjectivity demanded of them. The question over what kinds of counter-publics emerge when reading itself becomes an ethical and political practice.

In India, the constitutional promise of equality exists alongside the persistent caste system, which has deep theological and cultural roots. Dutt's memoir enters a public discussion where people often frame caste oppression as "culture," merit, or individual failure. She shows how "upper-caste" dominance is hidden behind the illusion of a casteless middle class, a belief supported by secular-liberal stories that view caste as something from rural areas. Her account argues that caste affects English-medium schools, media organizations, and upscale neighborhoods. These spaces ignore religious differences but reinforce caste privilege through surnames, accents, and social networks. Religion is not just about rituals in temples; it creates a system of hierarchy that influences personal connections and feelings of repulsion.

Nafisi writes about the period after the 1979 Revolution when Islam became the clear basis of state power. The memoir details changes in dress codes, university curriculums, and gender segregation, highlighting how religious authority affects daily life through constant observation and approval. Yet, as Saba Mahmood points out, religious devotion can also be empowering. Nafisi's students navigate and challenge norms, creating small spaces for negotiation. The memoir's literary references of Nabokov, Austen, James likely act as both personal refuge and a way to critique patriarchy. In this context, religion functions as law, symbol, and social atmosphere; it shapes the environment where "reading" turns into a political act.

Examining B.R.Ambedkar's critique of caste and analysing Asad's tradition, and feminist accounts of embodiment and voice allows us to see religious conflict as a struggle over recognition as a full person. Prominent Dalit scholars like Gopal Guru and Kancha Ilaiah highlight the harm that disqualifies Dalit speech. Postcolonial feminists, such as Spivak and Chandra Talpade Mohanty, caution against idealizing "voice" without questioning the systems that make it valid. Michael Warner's idea of counter-publics sheds light on how both memoirs create alternative spaces—journalistic and educational—where marginalized individuals can reshape their identity and desires. Both books are memoirs, but their structures reflect different contexts. Dutt shares a coming-out story that intertwines her personal history with reporting, legal details, and critiques of media. This form rejects the notion of caste as merely "family background." Instead, it serves as a counter-archive, documenting everyday exclusions like housing discrimination, classroom humiliation, and newsroom gatekeeping that are often missing from official records. Nafisi writes a pedagogical memoir centered on a group of women students who gather at her home to read Western literature that the state has banned or monitored. This salon-style format emphasizes shared intimacy against the public call for purity, allowing for a collective re-imagining of self.

In both, memoirs are a method rather than a confession. It uses personal authority to reveal power dynamics and challenges dominant institutions like patriarchy in one case and the moral state in the other. Religious conflict frequently appears on the body through clothing, hair, skin, or demeanor. In Nafisi's narrative, the

veil serves as both law and symbol. Its enforcement in classrooms highlights the state's control over women's modesty. Characters discuss compliance not just as belief but as survival strategies and acts of solidarity. The nuance is important: some women wear the veil as an expression of faith, others use it as a shield, and some see it as a negotiation. Nafisi avoids simplifying the veil as mere oppression. Instead, she illustrates how it becomes a battleground between state education and personal freedom.

Dutt's conflict revolves less around a specific garment and more around how bodies are interpreted through caste-signifying traits: names, dialects, food, neighborhoods, and school backgrounds. Spatialization is another common theme. Nafisi's university classroom is depicted as a battleground watched over by "morality guardians." In contrast, her private apartment becomes an alternative space, or heterotopia, where banned texts are shared and new identities are explored. In Dutt's accounts of Delhi and Bombay, geography reveals caste dynamics: housing and rental opportunities signal one's acceptance. Housing societies and human resources offices act as secular exclusionary sites, with their rules reflecting scriptural hierarchies without directly citing scripture. Surveillance in Coming Out as Dalit is informal, carried out by gatekeepers who seek surnames or references. In Reading Lolita in Tehran, surveillance is officially structured. In both instances, space carries moral weight, and movement relies on compliance.

Nafisi's reading lists, which include Nabokov, Austen, and Fitzgerald, face criticism for being centered on the West, but her memoir shows their significance in her context. The complex ethics of Lolita help students navigate themes of consent and coercion within a regime that claims complete moral authority. Austen's courtship stories serve as tests for exploring choice and obligation. Literature becomes a refuge and a tool for examining theocratic narratives.

Dutt's crucial textual moment is the act of "coming out," which means naming Dalit identity in English-language media. She questions journalism's claim to "objectivity" and reveals how newsroom cultures perpetuate upper-caste norms. In this context, the canon consists not of a reading list but of accepted topics and discussions that exclude caste as trivial or "negative." By asserting the significance of Dalit experience to national modernity, Dutt reshapes the understanding of public discourse.

Ambedkar saw caste as a division of labor imposed by religion. Dutt builds on this idea by explaining how "meritocracy" acts like a secular belief system, making privilege seem earned. Affirmative action highlights the conflict between the revered concept of merit and constitutional justice. She points out micro-aggressions and institutional barriers, such as doubts about abilities, casual slurs, and hiring methods disguised as "fit." Here, religion continues to shape a morality that fuels disgust and entitlement. Nafisi's theocracy mixes morality and law more directly. The university controls women's dress, speech, and behavior using religious law as justification. However, the memoir reveals flaws: some administrators stretch the rules, students embrace irony, and families create safe spaces. The state's moral totality relies on everyday compliance, yet it remains incomplete. Literature exposes these flaws by offering words for mixed feelings and rebellion. In Nafisi's salon, desire takes on an aesthetic and erotic dimension. Female desire becomes a lens that questions theocratic claims to represent everyone.

Both writers struggle with issues concerning representation. Dutt argues for the place of specific lived experiences of Dalit women within the frameworks of Dalit politics and Indian feminism. And Nafisi, writing in English for an international audience, has been critiqued for perpetuating Western liberal narratives concerning Iran. To counter these critiques, Nafisi emphasizes the multiplicity of her students as well as her own social location. An ethical interpretation that compares each text

situates them as partial, strategic, and infused within context. It bypasses the wish for an overarching narrative about Islam or Hinduism. If frameworks of purity logics sustain religious conflict, the memoirs propose counter hospitality logics. Dutt's coming out narrative brings readers into the Dalit world that the dominant order seeks to silence. Nafisi's salon provides attention to discordant voices and forbidden plots, which constitutes a hospitality of attention. Danger becomes education, and in both cases, hospitality is not simply sentiment. It is the frameworks of rooms, schedules, reading lists, and the rituals which sustain alternative ways of life.

Conclusion: Religion Beyond Orthodoxy—Remapping Community

Coming Out as Dalit and Reading Lolita in Tehran show us that religious conflict is not limited to a dispute over a verse or a veil. Rather, it determines the management of life opportunities; where one can live, what one can study, whom one can love, and how one can speak. Dutt illustrates how caste, naturalized as sacred order secular "merit," demands silence from the injured. Her memoir breaks that silence, reclaiming the dignity of naming. Nafisi illustrates how theocratic morality seeks to monopolize meaning; her salon resists by opening interpretive space where literature empowers women to articulate desire and critique the world. The two dresses propose that feminist narrative acts of coming out, curating a room, and reading against the grain convert private suffering to shared understanding. Thus, religion is not fully oppressive or fully redeeming; it is a living tradition that can be refused, reinterpreted, and rerouted toward justice. The work still to be done in India's lacerated secular democracy and Iran's lively public sphere is not limited to doctrinal dispute; it is the building and defense of the fragile counter-public where dignity is not conditional upon purity, and community measured by the breadth of hospitality it can offer.

Works Cited

1. Ambedkar, B. R. Annihilation of Caste. Multiple editions.
2. Asad, Talal. Genealogies of Religion: Discipline and Reasons of Power in Christianity and Islam. Johns Hopkins University Press, 1993.
3. Dutt, Yashica. Coming Out as Dalit. Aleph Book Company, 2019.
4. Guru, Gopal, and Sundar Sarukkai. The Cracked Mirror: An Indian Debate on Experience and Theory. Oxford University Press, 2012.
5. Ilaiah , Kancha. Why I Am Not a Hindu. Samya, 1996.
6. Mahmood, Saba. Politics of Piety: The Islamic Revival and the Feminist Subject. Princeton University Press, 2005.
7. Nafisi, Azar. Reading Lolita in Tehran: A Memoir in Books. Random House, 2003.
8. Nussbaum, Martha C. The Clash Within: Democracy, Religious Violence, and India's Future. Harvard University Press, 2007.
9. Spivak, Gayatri Chakravorty. "Can the Subaltern Speak?" In Marxism and the Interpretation of Culture, edited by Cary Nelson and Lawrence Grossberg, University of Illinois Press, 1988.
10. Warner, Michael. Publics and Counterpublics. Zone Books, 2002.

●

Ms. Irfana Parveen,
Research Scholar, Research centre: PG and Research Department of English, K.N. Government Arts College for Women (A) (613007), affiliated to Bharathidasan University, Tiruchirappalli,

&

Dr. Saburunnisa A,
Associate Professor, Department of English, K.N. Government Arts College For Women (A) (613007), affiliated to Bharathidasan University, Tiruchirappalli,

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்



ரூ 155/-

ரூ 120/-



ரூ 170/-

ரூ 100/-

ரூ 130/-



ரூ 230/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No.TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS, Patrika Channel, chennai - 08
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்

(2 தொகுதிகள்)

ரூ 1000/-



(12 தொகுதிகள்)

ரூ 4275/-



(10 தொகுதிகள்)

ரூ 1000/-



ரூ 330/-



ரூ 600/-



ரூ 470/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in